Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

பிரேம் அச்சகம்
127, KKS Road
யாழ்ப்பாணம்

முரசு – 04 | திருவள்ளுவர் ஆண்டு 2045 பங்குனி 15 சனிக்கிழமை (29.03.2014) பக்கங்கள் 20 | ஓசை – 179

# ஜெனிவா தீர்மானம் இறைமைக்கு வலுச்சேர்க்கும்

## இது அரசுக்கு எதிரானது அல்ல



ஜெனிவாவிலுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்காவினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை இலங்கைக்கு எதிரானது என்று வெளியிடப்படும் கருத்து முற்றிலும் தவறானது. இது, இலங்கையின் ஜனநாயகம் மற்றும் இறைமையை அபிவிருத்தி செய்வதற்கான தீர்மானமாகும் என்று அமெரிக்காவின் இலங்கைக்கான தூதுவர் மிச்செல் ஜே.சிஸன் தெரிவித்தார்.

இலங்கை அரசாங்கமானது இந்தத் தீர்மானத்துடன் இணங்கிச் செயற்படும் என்ற நம்பிக்கை அமெரிக்காவுக்கு உள்ளது எனவும் மிச்செல் ஜே. சிஸன் குறிப்பிட்டார். கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

ஜெனிவாவிலுள்ள மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்காவினால் சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானம், இலங்கைக்கு எதிரானது அல்ல. இலங்கையினால் இது வரையில் பேணப்பட்டு வந்த ஜனநாயகம் மற்றும் இறைமையை அபிவிருத்தி செய்வதற்கான தீர்மானமாகும். யுத்தம் நடைபெற்ற காலப்பகுதியில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள், துன்புறுத்தல்கள், வன்முறைகள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று மனித உரிமைகள் ஆணையாளரிடம்

(19) பக்கம் பார்க்க...

## ஏ.கே-47 துப்பாக்கி மூளாயில் நேற்று மீட்பு

மூளாய் கிழக்கிலுள்ள வீடொன்றின் சுவாமி அறையில் மேலதிக சுவர் ஒன்று எழுப்பப்பட்டு, அதன் நடுவே மறைத்து வைக்கப்பட்டிருந்த ஏ.கே 47 ரக துப்பாக்கியொன்றினை நேற்று மீட்டதாக வட்டுக்கோட்டைப் பொலிஸார் தெரிவித்தனர்.

பாலசுப்பிரமணியம் சுந்தரேஸ்வரி (வயது-65) என்பவரது வீட்டிலிருந்தே மேற்படி ஆயுதம் மீட்கப்பட்டதாகப் பொலிஸார் கூறினர்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

குறித்த வீட்டில் திருத்த வேலைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. இதன்போது வீட்டின் கூரைப்பகுதியின் ஊடாக வௌவால்கள் பறந்து செல்வதை அவதானித்த வேலையாட்கள், கூரைக்கு மேலே ஏறி கீழ்த் தளக்கூரைக்குள் இறங்கிப் பார்த்த போதே, இந்த வீட்டின் சுவாமி அறையையும் அருகில் இருந்த அறையையும் பிரிக்கும் சுவருக்கு மூன்று அடி இடைவெளியில் சுவாமி அறைக்குள் இன்னொரு சுவர் அமைக்கப்பட்டு அதற்குள் ஏ.கே.47

(19) ஆம் பக்கம் பார்க்க...

## ஓட்டுமடத்தில் கைதாகியவர் நேற்று விடுதலை

யாழ். ஓட்டுமடம் பகுதியில் வைத்து கடந்த 25ஆம் திகதி, பயங்கரவாதக் குற்றத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட கிளிநொச்சி தர்மபுரம் பகுதியினைச் சேர்ந்த மோகன் கேதீஸ் (வயது -35) என்ற நபரை யாழ். நீதவான் நீதிமன்ற நீதவான் பொ.சிவகுமார் நேற்று விடுதலை செய்தார்.

குறித்த நபரை நேற்று நீதிமன்றத்தில் ரி.ஐ.டி.யினர்

(19) பக்கம் பார்க்க...

## தெற்கில் இன்று பலப் பரீட்சை

(கொழும்பு)

தெற்கில் இரு மாகாண சபைகளுக்கான தேர்தல் இன்று நடைபெறவுள்ளது. இதற்கான ஏற்பாடுகள் ஏற்கனவே பூர்த்தியாகியுள்ளன.

மேல் மற்றும் தென் மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துவதற்கான வாக்குப் பெட்டிகளும், வாக்குச் சீட்டுகளும் நேற்றுக் காலை 7.00 மணி முதல



வாக்குச் சாவடிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டதாக பிரதி தேர்தல்கள் ஆணையாளர் எம்.

(19) ஆம் பக்கம் பார்க்க...

## இந்திய மீனவர்கள் நேற்று விடுதலை

இலங்கைக் கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கடந்த புதன்கிழமை இரவு தலைமன்னார் கடற்பரப்பில் வைத்து கைதான இந்திய மீனவர்கள் 19 பேர் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி மீனவர்களை மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்

(19) ஆம் பக்கம் பார்க்க...

## தேர்தல் அதிகாரி மீது தெற்கில் தாக்குதல் முயற்சி

தென் மாகாண சபை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வேட்பாளர் ஒருவரின் ஆதரவாளர்களால் உதவித் தேர்தல் ஆணையாளர் ஒருவர் மீது தாக்குதல் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மாத்தறை - வெரலபார பிரதேசத்தில் வைத்து உதவித் தேர்தல் ஆணையாளரான அருண பெனாண்டோ உள்ளி

(19) ஆம் பக்கம் பார்க்க...

## உடையார்கட்டில் யாழ்.இளைஞர் கைது

முல்லைத்தீவு உடையார்கட்டுப் பகுதியில் வைத்து சின்னத்துரை ஸ்ரீகாந்தன் (வயது-35) என்ற இளைஞன் நேற்று முன்தினம் இரவு 11.00 மணியளவில் பயங்கரவாதக் குற்றத்தடுப்புப் பிரிவினரால் (ரி.ஐ.டி) கைது செய்யப்பட்டார்.

விடுதலைப்புலிகளின் முன்னாள் போராளியான இவர் புனர்வாழ்வு பெற்று விடுதலை செய்யப்பட்டிருந்த நிலையில் மீண்டும் வியாழக்கிழமை இரவு கைதுசெய்யப்பட்டிருக்கிறார்.

யாழ்ப்பாணம் புத்தூர் மேற்கைச் சேர்ந்த இவர் உடையார்கட்டுப் பகுதியில் வசித்து வருகின்றார். (கே)

12



முகவரியுடன் மட்டும்...

14



மானியம்

## கிளி.நகரில் வாகனங்களுக்கு இனி தரிப்பிடக் கட்டணம்

கிளிநொச்சி நகர்ப் பகுதியில் தரிப்பிட கட்டணம் செலுத்தாத வாகன உரிமையாளர்களுக்கு எதிராக எதிர்வரும் திங்கட்கிழமை முதல் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என கரைச்சி பிரதேசசபை தவிசாளர் நா.வை.குகராஜா நேற்றுத் தெரிவித்தார்.

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளிலுள்ள முச்சக்கர வண்டிகள், கன்டர் ரக வாகனங்கள், உழவு இயந்திரங்கள், கார்கள் மற்றும் வாடகைக்கு அமர்த்தப்படும் வாகனங்கள்

(19) பக்கம் பார்க்க...

## இரணைமடு உட்கட்டுமான அபிவிருத்தி விசேட கூட்டத்தில் விவசாயிகள் புறக்கணிப்பு



கோப்புப்படம்

இரணைமடு உட்கட்டுமான அபிவிருத்திக்கான விசேட கூட்டம் கிளிநொச்சி நீர்ப்பாசனத் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்றது.

இதில் கிளிநொச்சி விவசாயிகளைப் புறக்கணித்தே இக்கூட்டம் இடம்பெற்றதாகவும், இதனால் 'இபாட்' நிதி மூலம் செய்யப்படும் உட்கட்டுமான அபிவிருத்தி குறித்து தம்மிடம் ஆலோசனை பெறவில்லையென விவசாயிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதன் மூலம் 'இபாட்டின்' 30 மில்லியன் அமெரிக்கன் டொலருக்கு என்னாகுமோ என விவசாயிகள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை, யாழ்.-கிளிநொச்சி குடிதண்ணீர்த் திட்டம் மாற்றுத் திட்டத்தில் சில சிறு மாற்றங்களின் ஊடாக இரண்டாயிரத்து 200 கோடி ரூபா முழுவதனையும் உரிய காலத்தில் பயன்படுத்துவதற்கும் வட மாகாண சபை முதலமைச்சர் அலுவலகமும், பிரதம செயலாளர் அலுவலகமும் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் அனைத்து திட்டங்களையும் விவசாயிகளுக்கு தெரியப்படுத்தி முன்னிறுத்துமாறு கிளிநொச்சி விவசாயிகள் கோரியுள்ளனர். (92)

## வட்டுக்கோட்டையில் கைதானவரிடம் துப்பாக்கி ரவைகள் மீட்பு

விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு உயிர் கொடுப்பதற்காக பொறுப்பேற்றுள்ளதாகக் கூறப்படும் கோபி என்ற நபரின் நண்பனிடம் இருந்து துப்பாக்கி ரவைகள் மற்றும் கோபி சம்பந்தப்பட்ட தகவல்கள் பெற்றுக்கொண்டுள்ளதாக யாழ். பிரதேச சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் டபிள்யூ.பி.விமலசேன நேற்றுத் தெரிவித்தார்.

யாழ். தலைமைப் பொலிஸ் நிலையத்தில் ஊடகவியலாளர் சந்திப்பொன்று நேற்று இடம்பெற்றது. இதன்போது, கடந்த வாரம் வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவில் இராணுவத்தினரும், பொலிஸாரும் இணைந்து தேடுதல் நடத்தியதுடன், ஒரு இளைஞரை கைதுசெய்துள்ளனர்.

கடந்த 23ஆம் திகதி வட்டுக்கோட்டைப் பகுதியில் வைத்து மன்னாரைச் சேர்ந்த


(19) ஆம் பக்கம் பார்க்க...

உள்ளே

க.பொ.த. (சா.த) வரலாறு, சங்கீத பாட மாதிரி வினாத்தாள்

# மக்கள் மத்தியில் வராதவர்கள் எவ்வாறு பிரச்சினைகளை தீர்ப்பார்கள்

**- சந்திரகுமார் எம்.பி. கேள்வி -**




(கிளிநொச்சி)

மக்கள் மத்தியில் வராதவர்கள் எவ்வாறு மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கப் போகின்றார்கள் என ஈ.பி.டி.பி. யின் நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவருமான சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

நேற்று கிளிநொச்சி புதுமுறிப்பு கிராமத்திற்கு வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் 190 இலட்சம் ரூபா செலவில் மின்சார விநியோகத்தை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த வடக்கு மாகாண சபை தேர்தலில் மக்களின் பெரும்பான்மை வாக்குகளை பெற்று கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட மூன்று மாகாண சபை உறுப்பினர்களை காணவில்லை என கிளிநொச்சியின் பல பகுதிகளையும் சேர்ந்த மக்கள் எம்மிடம் தெரிவித்து வருகின்றனர்.

தேர்தல் காலங்களில் சுவரொட்டிகள், துண்டுப்பிரசுரங்கள் மூலம் கண்ட அவர்களை அதன் பின்னர் காணவில்லை என குறிப்பிடுகின்றனர்.

எனவே இவ்வாறு மக்கள் மத்தியில் வராதவர்கள் எப்படி இந்த மக்களின் தேவைகளை தீர்த்து வைக்கப்போகின்றார்கள்?

நாங்கள் எப்பொழுதும் மக்கள் மத்தியில் மக்களுக்காக பணியாற்றி வருகின்றோம்.

கிளிநொச்சியினை பொறுத்தவரை எல்லா கிராமங்களின் மக்களையும் நாம் நன்கறிவோம்.

அவர்களின் தேவைகள், பிரச்சினைகள் என்பவற்றை மிகவும் தெளிவாக விளங்கிக்கொண்டுள்ளோம். அதனடிப்படையில் படிப்படியாக அவற்றை தீர்த்துவருகின்றோம். எனவே மக்களும் தங்களின் முன்னேற்றத்திற்கு உழைக்கின்ற உண்மையான மக்கள் பிரதிநிதிகளை அடையாளம் கண்டு அவர்களுக்கு தங்களின் ஒத்துழைப்பை வழங்கவேண்டும் என்றார்.

இந்நிகழ்வில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன், மின்சார சபையின் வடக்கின் வசந்தம் திட்டமுகாமையாளர் த.குணசீலன், கரைச்சி பிரதேச சபையின் உறுப்பினர்கள் மனோகரன், கிருஸ்ணசாமி, இராமச்சந்திரன், வடக்கின் வசந்தம் மின் பொறியியலாளர் அமிலடயஸ், கிளிநொச்சி மின் அத்தியட்சர் குகராஜ், கிராம சேவையாளர் திருமதி மஞ்சுளா பாலகுமாரன், கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் செயலாளர் மற்றும் பொது மக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.


## சிறு விளம்பரம்

**டயானா பிளாஸ்ரிக்**

*றீசைக்கிள் (மீள் சுழற்சி)*

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.06 கனகசபை லேன்,
சிவலிங்கப்புளியடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
021 222 8680,
077 592 5088.
(C/3376)


## கால்கோள் விழா

(யாழ்ப்பாணம்)

பொற்பதி அறிவாலயத்தின் 2 ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வும் சரஸ்வதி முன்பள்ளியின் 29 ஆவது கால்கோள் விழாவும் நாளை பி.ப. 2.30 மணிக்கு இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக மக்கள் வங்கி யாழ். பல்கலைக்கழக கிளை முகாமையாளர் எஸ்.சத்தியமூர்த்தி கலந்து கொள்கின்றார்.

## சமுர்த்தி கொடுப்பனவு

அச்சுவேலி பகுதி கிராம அலுவலர் பிரிவில் சமுர்த்திப் பயனாளிகளுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 25 ஆம் திகதி முதல் ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவு ரீதியாகவும் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளதாக மேலும் தெரியவருகின்றது. (85)

## வெங்காய மூடைகள் திருட்டு

(அச்சுவேலி)

புத்தூர் மணற் பகுதியில் உள்ள தோட்டத்திலிருந்த இரண்டு அந்தருக்கு மேற்பட்ட வெங்காயம் இனந்தெரியாதோரால் களவாடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அறுவடை செய்து தோட்டத்திலிருந்து வீட்டுக்கு கொண்டுசெல்லப் படவிருந்த வெங்காயமே திருட்டுப் போயுள்ளதாக மேலும் தெரியவருகின்றது. (85)


# ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் **1046** | திகதி **27.03.2014**

வெற்றி எண்கள் | ஆங்கில எழுத்து

**08 23 29 47 N**

**ஜக்பொட் பரிசு ரூ. 2,55,23,460/= வெல்லப்படவில்லை**

| பரிசு அமைப்பு | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 0 | 2,55,23,460/= | ரூ. - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 1 | 10,00,000/= | ரூ. 10,00,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 9 | 50,000/= | ரூ. 4,50,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 272 | 1,000/= | ரூ. 2,72,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 492 | 1,000/= | ரூ. 4,92,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 11957 | 60/= | ரூ. 7,17,420/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 6348 | 40/= | ரூ. 2,53,920/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 158065 | 20/= | ரூ. 31,61,300/= |
| ஆங்கில எழுத்து | 23017 | 20/= | ரூ. 4,60,340/= |
| | | மொத்தம் ரூ. | 68,06,980/= |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 8 | 50,000/= | 400,000/= |

ரூபா 50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| அம்பாறை | 705968963-8-38 |
| கேகாலை | 705969883-9-39 |
| காலி | 705967444-3-23 |
| மட்டக்களப்பு | 705974527-2-22 |
| மாத்தளை | 705966245-5-15 |
| களுத்துறை | 705969036-3-33 |
| பதுளை | 705963873-9-49 |
| கொழும்பு | 705965509-6-06 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 72,06,980/=

**எதிர்வரும் திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா 25,832,480/=**

மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2014.03.31 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

**அபிவிருத்தி லொத்தர் சபை**

(C/3357)


# மொழிபெயர்ப்பு கண்காணிப்பாளர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

நீதி அமைச்சின் மொழிபெயர்ப்பு கண்காணிப்பாளர் பதவிக்காக இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கல்வித் தகைமையாக பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றிருத்தலுடன், க.பொ.த (சா/த) பரீட்சையில் மொழியில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் அத்துடன் மொழிபெயர்ப்பாளர் சேவையில் எட்டு வருடகால சேவை அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரி இலங்கையின் எப்பாகத்திலும் சேவையாற்றக்கூடிய உடல், உள நலத்துடன் இருத்தல் அவசியமாகும்.

விண்ணப்ப முடிவுத் திகதி 28.04.2014 ஆகும். விண்ணப்பங்கள் பதிவுத்தபாலில் நீதி அமைச்சு, மியுயர் நீதிமன்ற கட்டடத் தொகுதி, கொழும்பு - 12 என்ற முகவரிக்கு அனுப்பும் கடித உறையின் இடது மேல் மூலையில் 'நீதி அமைச்சின் மொழிபெயர்ப்பு கண்காணிப்பாளர் பதவி' எனக்குறிப்பிடல் வேண்டும்.

பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குட்பட்டதுமாகும். நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவு மேற்கொள்ளப்படும். கல்வித் தகைமை, மேலதிக கல்வித் தகைமை, மொழித் தேர்ச்சி, மொழிபெயர்ப்பு சேவை, கணனி, எழுத்தறிவு ஆகியவை நேர்முகப் பரீட்சையில் கவனிக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (105)

## இளைப்பாறல்

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.கணேசமூர்த்தி அரச சேவையிலிருந்து இளைப்பாறியுள்ளார். (01)



சுன்னாகம் றோட்டறிக்ட் கழகத்தினரின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு தண்டுவான் அ.த.க.பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களில் தெரிவுசெய்யப்பட்ட 25 மாணவர்களுக்கு சப்பாத்துக்களும் புத்தகங்களும் வழங்கப்பட்டன. அவசியமாக உதவிகள் தேவைப்படும் 25 மாணவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் இவை வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் சுன்னாகம் றோட்டறக்ட் கழக தலைவி ஸ்ரீ.ஸ்ரீரங்கநாயகி மற்றும் முல்லைத்தீவு தண்டுவான் அ.த.க.பாடசாலை அதிபர் வி.பன்னீர்ச்செல்வம் சப்பாத்துக்களை வழங்குவதையும் பெற்றுக் கொண்ட மாணவர்களையும் காணலாம். (48)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகு

### பட்டச்சான்றிதழ் வழங்கும் வைபவம்

1. **கலைமாணி (பொது/சிறப்பு)**
2. **வணிகமாணி**
3. **இசைமாணி**
4. **நடனமாணி**

மேற்படி பட்டக் கற்கைநெறிகளில் சித்தியடைந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரி மாணவர்களுக்கு பட்டச்சான்றிதழ்களை வழங்கும் முகமாக பட்டச் சான்றிதழ் வழங்கும் வைபவம் ஒன்றை எதிர்வரும் 27.04.2014 (ஞாயிற்றுக்கிழமை) காலை 9.00 மணி தொடக்கம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

**மேற்படி பட்டக் கற்கைநெறிகளில் 01.04.2011 இற்கு பின்பும் 01.04.2013 திகதிக்கு முன்பும் சித்தியடைந்த மாணவர்களுக்கே மேற்படி பட்டச்சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் பட்டங்கள் வழங்கப்படவிருப்பதால் தகுதியுடையவர்கள் 11.04.2014 இற்கு முன்னதாக வேண்டுகோள் படிவங்களை வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். வேண்டுகோள் படிவங்களை வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகில் 31.03.2014 (திங்கட்கிழமை) தொடக்கம் பெற்றுக்கொள்ளலாம்.**

மேலதிக விபரங்களைப் பெற விரும்புவோர் 021 - 2223612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்புகொள்ளலாம்.

**பதிவாளர்**
**27.03.2014**
(C/3337)

# பயிர்ச்செய்கைக்கான கடன்திட்டம்

# அறிமுகப்படுத்தியது மத்திய வங்கி

(யாழ்ப்பாணம்)


அரசாங்க மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தி திணைக்களத்துடன் இணைந்து பயிர்ச்செய்கைக்கான இலகு கடன் திட்டத்தினை அறிமுகப் படுத்தியுள்ளது.

இந்தக் கடன் திட்டத்துக்கு வருடாந்தம் ஒன்பது வீத வட்டியே அறவிடப்படவுள்ளது. மேலும் பெரும் போகம், சிறு போகம் மற்றும் ஒன்பது மாதங்களுக்குட்பட்ட குறுங் கால பயிர்களுக்கு இத்திட்டத்தின் கீழ் கடன் பெற முடியும் எனவும் நெல், மிளகாய், வெங்காயம், தானியங்கள், மரக்கறிவகை, எண்ணெய் விதைகள், கிழங்கு வகை போன்றவற்றிற்கு இந் நிதியை பயன்படுத்த முடியும் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

குறித்த பயிர்ச்செய்கைக்கு செலவிடப்படும் மொத்த செலவில் எழுபத்தைந்து வீதம் வரை கடனாக வழங்கப்படுவதோடு மிகுதி செலவீனத்தை பயிர்ச்செய்கையாளர் பொறுப் பேற்க வேண்டும். அதுமட்டுமன்றி விளைநிலம் அல்லது வாடகை அல்லது குத்தகை விளைநிலத்தில் விவசாயம் செய்கின்ற அரச அனுமதி பெற்றவர்கள் இந்தக் கடனைப் பெற முடிவதோடு அறுபத்தைந்து வயதுக்கு மேற்பட்ட பயிர் செய்கையாளர்கள் குடும்ப உறுப்பினர் ஒருவருடன் இணைந்து கடன் திட்டத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும். அத்துடன் அவரும் பயிர் செய்கையில் ஈடுபட்டிருக்க வேண்டியது அவசியமாகும்.

மேற்படி கடனை மக்கள் வங்கி, இலங்கை வங்கி, டீ.எவ்.சீ.சீ.வங்கி, சம்பத் வங்கி, யூனியன் வங்கி, வர்த்தக வங்கி, ஹற்றன் நஷனல் வங்கி, பிரதேச வர்த்தன வங்கி, செலான் வங்கி, லங்கா புத்திர அபிவிருத்தி வங்கி, தேசிய அபிவிருத்தி வங்கி, சனச அபிவிருத்தி வங்கி, ஆகியவற்றின் நாடளாவிய ரீதியிலான கிளைகளின் ஊடாகப் பெற்றுக் கொள்ள முடியும்.

முன்னர் வங்கிகளில் விவசாய அல்லது வேறுகடன் பெற்று மீளச் செலுத்தாதவர்களுக்கு இந்தத் திட்டத்தின் கீழ் கடன் வழங்கப் படமாட்டாது எனவும் அறிவிக்கக்கப்பட்டுள்ளது. (54)



யாழ். போதனா வைத்தியசாலைக்கு முன்பாகவுள்ள பாதசாரிகள் பாவனைக்காகவுள்ள பாதசாரிகள் கடவையில் வாகனங்கள் நிறுத்தப் பட்டிருப்பதைக் காணலாம். (48)

# விண்ணப்பங்கோரல்

(யாழ்ப்பாணம்)

அரசாங்கசேவை ஆணைக்குழுவில் இலஞ்சம் அல்லது ஊழல் சார்ந்த பிரிவுக்கு உதவிப் பணிப்பாளர் (சட்டம்) பதவிக்காக இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப் ்் கோரப்படுகின்றன.

கல்வித்தகைமையாக பல்கலைக்கழகத்தில் சட்டத்தரணி சேவை அனுபவமாக உயர் நீதிமன்ற சட்டத்தரணியாக மூன்று வருடம் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

வயது 22 - 45 இற்கு உட்பட்டவராகவும் இலங்கையின் எப்பகுதிகளிலும் சேவையாற்றக்கூடியவராகவும் இருத்தல் அவசியமாகும். விண்ணப்ப முடிவுத்திகதி எதிர்வரும் 01.05.2014 ஆகும். பதவி நிரந்தரமானதும் ஒய்வூதியத்திற்குட்பட்டதுமாகும்.

விண்ணப்பங்கள் பதிவுத் தபால் மூலம் பணிப்பாளர் நாயகம், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு அலுவலகம், இல. 36, மல்ல சேகர மாவத்தை, கொழும்பு - 07 என்ற முகவரிக்கு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் உதவிப் பணிப்பாளர் (சட்டம்) பதவி எனக் குறிப்பிட்டு அனுப்பவேண்டும்.

கட்டமைப்பு சார் நேர்முகப்பரீட்சையும், இடம்பெறும். அனுபவம் பற்றிய சான்றிதழ்களும், நடத்தை பற்றிய சான்றிதழ்களும் இணைக்கப்படல் வேண்டும். (105)

# சமகால இலக்கிய கருத்தாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.இலக்கியக்குவியத்தின் ஏற்பாட்டில் சமகால இலக்கிய கருத்தாடல் - 2 நாளை பி.ப. 3.30 மணிக்கு வட்டுவினி அம்மன் வீதி, இணுவில் மேற்கு என்னும் முகவரியில் இணுவில் மருத்துவமனைக்கு முன்பாக நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக வருடாந்த பிரதம நூலகர் சிறீகாந்தலட்சுமி தலைமையில் நடைபெறவுள்ளன இக்கருத்தாடலில் வாசிப்பனுபவப்பகிர்வுகள் இடம்பெறவுள்ளன. இதில் யோ.கர்ணணின் "கொலம்பஸின் வரைபடங்கள்" கிரிஷாந், பா.அகிலனின் "சரமகவிகள்" பிரியாந்தி, ஈழக்கவியின் "இரவின் மழையில்" ஆதிபார்த் தீபன், "தாயகம்" ஜனவரி - மார்ச் இதழ். ஜெ.வினோத் ஆகியோர் பகிர்வில் கலந்து கொள்ளவுள்ளனர். இதில் இலக்கிய ஆர்வலர்களைக் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

# குருபூசை நிகழ்வு

சிவயோக சுவாமிகளின் ஐம்பதாவது குருபூசையும், மலர் வெளியீடும் ஏப்ரல் 10 ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப. 4.30 மணிக்கு நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் மாலை 4.30 மணிக்கு நல்லூர் கந்தன் தேரடியில் இருந்து நற் சிந்தனை ஒலிக்க உலக வலம் வந்த சிவ யோக சுவாமிகளினது திருவுருவம் வீதி வலம் வந்து விழா மண்டபத்தை அடையும் அங்கு விசேட வழிபாடுகள், சிறப்புரை, மலர் வெளியீடு என்பன இடம் பெறவுள்ளன. (05)

# திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

கீரிமலை சிவபூமி மடத்தில் யாத்திரிகர் விடுதி புதியமாடிக் கட்டடத்திறப்பு விழா நாளை காலை 9.30 மணிக்கு கேணி வீதி கீரிமலையில் இடம்பெறவுள்ளது.

# செகராஜ சேகரப்பிள்ளையார் வருடாந்த மகோற்சவம்

(மானிப்பாய்)

இணுவில் செகராஜசேகரப்பிள்ளையார் ஆலய வருடாந்த திருவிழா எதிர்வரும் 04 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12 நாட்கள் திருவிழா நடைபெறவுள்ளன.

இவ் உற்சவத்தில் 12 ஆம் திகதி சப்பறத்திருவிழாவும், 13 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் 14- ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் 15 ஆம் திகதி பூங்காவனம் திருக்கல்யாணம் என்பனவும் இடம்பெறவுள்ளன.(48)




## "தங்கச்சிக்கு நாய் கடிச்சிடுச்சு"

... ... ...

## தமிழர்களுக்கு இனி என்ன?

"அமெரிக்காவின் இந்த வருட திருவிழா இனிதே நிறைவுபெற்றது. மீண்டும் அடுத்தவருடம் தொடரும்....."

ஜெனிவாவிலிருந்து ஒரு நண்பர் அவசரமாகத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு இப்படிச் சொன்னார். அவருடைய குரலில் கேலியே தொனித்தது.

இந்தக் கேலி அமெரிக்காவைப் பார்த்தா, ஐ.நா.வைப் பார்த்தா, இலங்கையைப் பார்த்தா, இந்தியாவைப் பார்த்தா, உலகத்தைப் பார்த்தா அல்லது நம்மை (தமிழர்களை)ப் பார்த்தா..? என்று குழப்பமாக இருந்தது.

ஆனாலும் அது நம்மைப் பார்த்துத்தான் என்று உங்களுக்கு விளங்கியிருக்கும். உங்களுக்கு இப்ப அப்பிடி விளங்காது விட்டால், கொஞ்ச நாட்போக நன்றாக விளங்கும். ஏனென்றால் வரலாறு ஒரு நல்ல பாடம் புகட்டி. அது வடிவாகக் காதில முறுக்கியோ பிடரியில குட்டியோ குண்டியில நாலு போட்டோ தன்னுடைய பாடத்தைப் புகட்டும்.

இந்திய விமானங்கள் யாழ்ப்பாணத்துக்கு மேலே சுத்தி உணவுப் பொட்டலங்களைப் போடும்போதும், இந்திய அமைதிப்படை வந்தபோதும் குண்டியில தட்டின புளுகத்தோட – "இந்தா பார், ஜே. ஆரின்ரை கதை காலி. சிங்களவன்ரை தலையில் இல்லைப் பாதி" என்று சொல்லிக் கொண்டு திரிந்த நாம் பிறகு தலையை நிமிர்த்தவே முடியாமல் இருந்தோமே!

("நமக்கு மூக்குப் பழுதானாலும் பரவாயில்லை. எதிரிக்குச் சகுனம் பிழைக்க வேணும்" என்ற வியாதிக்காரர் நாங்களல்லவா!)

அப்படியொரு சங்கதிக்கான அடிக்கல்லைத்தான் இப்பவும் ஜெனிவாவில் அமெரிக்காவும் அதனுடைய கூட்டாளிகளும் வைச்சிருக்கிறார்கள்.

இதை நான் மட்டும் சொல்லவில்லை. இந்தத் தீர்மானத்திற்குப் பிறகு Face Book தொடக்கம் சகல ஊடகங்களிலும் பலரும் இதை உறுதிப்படுத்துகிறார்கள்.

பாருங்கள், முகப்புத்தக நிலைத்தகவல் ஒன்றை....

"ஓ..மை காட்.. அது நம்மளை நோக்கி வந்துடுச்சி... எல்லோரும் தப்பிச்சி ஓடுங்க... தாழ்வான பகுதியை நோக்கி ஓடுங்க... அமெரிக்க ஆண்டவரின் பாதங்களில் சரணடையுங்க... அவ்வவ்.."

அமெரிக்கத் தயாரிப்புகளான "ஹொலிவுட்" படங்களில் வரும் காட்சிகளில் இந்த வசனங்களை நீங்கள் கேட்டிருப்பீர்கள்.

எந்தக் கிரகத்திலிருந்து என்ன மாதிரியான ஆபத்துகள் வந்தாலும் அதையெல்லாம் பந்தாடித் தீர்த்து வெற்றிக் கனியை உங்கள் வாயில் திணிக்கும் அமெரிக்கப் பூச்சாண்டியே இது.

இத்தகைய ஒரு பூச்சாண்டிதான் இப்பொழுது ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட அமெரிக்கப் பிரேரணையும் அதை நிறைவேற்றிய தீர்மானமும்.

இதற்காக சில இடங்களில் வீரத்தமிழர்கள், மானத்தமிழர்கள், ஜப்பானியர்களோடும் இஸ்ரேலியர்களோடும் தங்களை ஒப்பிட்டுப் பெருமைப்படும் தமிழர்கள் எல்லாம் வெடிகொளுத்தியும் கேக் பரிமாறியும் கொண்டாடினார்கள்.

இதைப் பார்த்துக் கவலையும் வெட்கமும் வந்தாலும் என்ன செய்வது? இதைப்போல எத்தனை வெங்காயத்தனங்களையெல்லாம் இதற்கு முன்பும் பார்த்திருக்கிறோம்.

இதற்குள் மாவை சேனாதிராசா அண்ணை "தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் அழுத்தம், ஆலோசனைப்படிதான் இந்த அமெரிக்கப் பிரேரணை இப்படி நிறைவேறியிருக்கு" என்று நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு ஒரு பேட்டியைக் குடுத்திருக்கிறார்.

நல்லவேளை அண்ணை இதோட நிற்பாட்டிப்போட்டார். விட்டால், அமெரிக்கக்காரனுக்கு சோப்புப்போட்டுக் குளிப்பாட்டி, எண்ணை வைச்சுத் தலை சீவி விடுவதுவரை தமிழ்க்கூட்டமைப்புத்தான் என்றும் கதைவிட்டிருப்பார்.

"ஊரானுக்கு வால்பிடிக்கிறதிலேயே நம்மட ஆக்களின்ரை சீவியம் போகுது. நமக்குத்தான் சீலை நழுவுது" என்று அனுபவசாலிகள் சொன்ன வார்த்தை பொய்யல்ல, அது பொன்.

வெடிகொளுத்திற கூட்டத்தையும் விசிலடிக்கிற ஆட்களையும் வளர்த்தெடுப்பதே அரசியற் பணி என்றால், அப்படியான கூட்டமே தமிழீழத்திற்கான ஆதரவுப் படையென்றால்.... அரோகராத்தான்.

"ஒரு படத்தில் ஜனகராஜ் சம்பந்தா சம்பந்தம் இல்லாமல் என் தங்கச்சிக்கு நாய் கடிச்சிடுச்சு என்று அழுவார். அது போலவே அமெரிக்க தீர்மானம் நிறைவேறி விட்டது என்று பலர் சம்மந்தமில்லாமலே புலம்புகிறார்கள். உண்மையில் இந்தத் தீர்மானத்தை வைத்து ஈழத் தமிழர் நாக்கு வழிக்கக்கூட முடியாது" என்று ஒரு ஆய்வாளர், பட்டறிவாளர் சொன்னதைத்தான் நானும் மீண்டும் சொல்ல முடியும்.

இன்னொன்றையும் கட்டாயம் சொல்ல வேணும். தமிழர்களையோ சிறுபான்மை மக்களையோ ஏமாத்திப் பிழைக்கலாம். அவர்களைத் தெருவில் விட்டுவிட்டு தாங்கள் மெத்தையில் உறங்கலாம் என்று "கொழும்புக்காரர்" இனியும் எண்ணக்கூடாது.

உள் வீட்டைச் சுத்தமாக வைக்கவில்லை என்றால் ஒரு நாளைக்குப் பி.எச்.ஐ. வந்து பிடிப்பான் என்பதை விளங்கினால் சரி.

இது மகிந்த ராஜபக்ஷ கொம்பனிக்கு மட்டுமல்ல, சிங்கள மக்களுக்கும்தான்.

அமைதியாய் இரு; நீ எவரையும் வசப்படுத்திக் கொள்ள முடியும்.
- ஸெயின்ட் ஜஸ்ட்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
**Online : www.emurasu.com**

## உலகில் நாம் எந்தப் பக்கம்?

"மீண்டும் சந்திக்கும்வரை வணக்கம் கூறி விடைபெறுவது" என்று றேடியோவில் கூறுமாப்போல, மீண்டும் அடுத்த மார்ச்சில் போராடுவோம் என்று ஜெனிவாவிலிருந்து விடைபெறுகிறார்கள் நம்மவர்கள்.

அடுத்த எலெக்ஷன் வருவதற்கிடையில், அடுத்த ஜெனிவா வந்து விடுமென்பதால், "எலெக்ஷனுக்கு என்ன கதையைச் சொல்வது" என்ற கவலை அவர்களுக்கு இல்லை.

அதனால் ஜெனிவாவிலிருந்து அவர்கள் விடைபெற்றாலும் இங்கே உடனே வந்துவிடப்போவதில்லை. கொண்டுபோன வடை, பணியாரம், மிக்சர் பைக்கற்றுகளை ஐரோப்பிய மற்றும் கனடா நாடுகளிலுள்ள உறவுகளுக்குக் குடுத்து, போன "மெயின்" அலுவலைக் கவனித்துவிட்டுத்தான் திரும்புவார்கள்.

எல்லாம் முடித்து வந்திறங்கி, "நாங்கள் சொல்லச் சொல்லத்தான் அமெரிக்கா அந்தப் பிரேரணையை எழுதினது, தெரியுந் தானே..." என்று வெற்றிப் புன்னகையோடு அவர்கள் சொல்லப் போவதைக் கேட்டுக் கிறுகிறுக்க இங்கே மக்கள் காத்திருப்பார்கள் என்று அவர்களுக்குத் தெரியும். ஏதோ இன்று நேற்று அரசியல் செய்கிறவர்களா அவர்கள்?

"அமெரிக்காவையும் மற்றும் 22 நாடுகளையும் மடக்கி, ஜெனிவாவில் வென்றது எங்கள் தீர்மானம்" என்று அறைகூவியும் முடித்தவர்களுக்கு, இந்தா பக்கத்திலிருக்கும் இந்தியாவை ஏன் வெல்ல முடியாமல் போனது? இந்தியா ஆதரிக்காத தீர்மானத்தை அமெரிக்கா மூலமாக கொண்டுவந்து, இதோ இலங்கையை வீழ்த்தப் போகிறோம் என்று இவர்கள் துள்ளும்போது எங்கேயோ இடிக்கிறதே!

தீர்மானத்தை தாங்கள் ஆதரிக்காதது பற்றி இந்தியாவுக்கான நிரந்தர பிரதிநிதி திலிப் சின்ஹா கூறுவது இது:

*"சர்வதேச புலனாய்வு விசாரணை ஏற்பாட்டால் அழைக்காமலே நுழையும் நிலைமையை இந்த தீர்மானம் மூலமாக ஐ.நா. கவுன்சில் திணித்துள்ளது. எதிர்பார்ப்புக்கு மாறான பலனே இதில் கிடைக்கும். மேலும் இது நடை முறைகளுக்கும் ஒத்து வராததாகும்.*

*2009, 2012, 2013ல் கொண்டு வரப்பட்ட தீர்மானங்களைப் போல் அல்லாமல், இலங்கையின் மனித உரிமை நிலவரத்தை ஆராயவும் மதிப்பிடவும் கண்காணிக்கவும் ஐ.நா. மனித உரிமை ஆணையாளருக்கு இந்த தீர்மானம் அழைப்பு விடுத்திருக்கிறது. இது இலங்கையின் இறையாண்மையை பலவீனப்படுத்தும்.*

*இலங்கையில் போர் முடிவுக்கு வந்ததானது, தமிழர்கள் உட்பட அங்குள்ள எல்லா சமூகத்தவருக்கும் ஏற்புடைய அரசியல் தீர்வு காண்பதற்கான சிறந்த வாய்ப்பை கொடுத்துள்ளது என்பதே இந்தியாவின் கருத்தாகும்.*

*மனித உரிமைகளை பாதுகாத்திடவும் மேம்படுத்திடவும் இலங்கை மேற்கொள்ளும் சொந்த முயற்சிகளுக்கு பங்களிப்பு தருவதாகவே ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் முயற்சிகள் இருக்கவேண்டும். கடந்த ஆண்டில் இலங்கையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது."*

மேற்கண்டவாறு இந்தியாவின் பிரதிநிதி திலிப் சின்ஹா அங்கு தெரிவித்திருக்கிறார். ரஷ்யா, சீனா, பாகிஸ்தான், கியூபா உட்பட ஆசிய ஆபிரிக்க நாடுகள் பிரேரணையை எதிர்த்திருக்கின்றன. இவர்களுக்கு மாறாக, தமிழ்மக்களை மேற்கு நாடுகளிடம் கொண்டுபோய் அடைவு வைக்கும் வேலையையே வெற்றி எனக் காண்கிறது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு!

இலங்கை அரசின் மீதான பழிதீர்க்கும் ஆத்திரத்தையே தமிழ்மக்களிடம் வளர்த்துவரும் கூட்டமைப்பு, இங்கு தீர்வொன்று வருவதற்கும் தமிழ் மக்களின் வாழ்க்கை மேம்பாடு அடைவதற்கும் எதிராகவும் குழப்பும் விதமாகவும் அமெரிக்க நாடுகளின் நிகழ்ச்சிநிரலுக்கு ஆடுகிறது. விழித்துக்கொள்ளாவிட்டால் நாம் மீளப்போவதில்லை.

- ஆசிரியர்

# இலங்கையின் இறைமையை மீறியதால் வாக்களிப்பை புறக்கணித்தோம்

## இந்திய வெளிவிவகார அமைச்சு தெரிவிப்பு

சர்வதேச விசாரணையை வலியுறுத்தியுள்ள அமெரிக்காவின் பிரேரணை இலங்கையின் இறைமையை மீறியிருப்பதாக இந்தியா தெரிவித்துள்ளது.

இதன் காரணமாகவே நேற்று முன்தினம் இடம்பெற்ற பிரேரணை மீதான வாக்கெடுப்பை இந்தியா புறக்கணித்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் செயிட் அக்பர்தீன் இதனைத் தெரிவித்துள்ளார். அத்துடன் இந்தப் பிரேரணையால் எந்த பலனும் இல்லை என்பதாலும், இந்தியா இந்தப் பிரேரணை மீதான வாக்கெடுப்பை புறக்கணித்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையில், இலங்கையிடம் நன்மதிப்பை பெறும் நோக்கிலேயே இந்திய அரசாங்கம் குறித்த பிரேரணை மீதான வாக்களிப்பை புறக்கணித்திருப்பதாக, த பெஸ்ட் போஸ்ட் என்ற இந்திய இணையத்தளம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை, இந்திய மத்திய அரசாங்கம் இந்தப் பிரேரணைக்கு வாக்களிக்காததன் மூலம் மீண்டும் தமிழர்களுக்குத் துரோகம் செய்திருப்பதாக திராவிட முன்னேற்றக் கழகம் குற்றம் சுமத்தியுள்ளது.

அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் இளங்கோவன் இதனைத் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் மத்திய அரசாங்கத்துக்கு கடும் கண்டனத்தை தெரிவிப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

# ஆட்சிமாற்றம் ஒன்றை ஏற்படுத்தவே இந்தத் தீர்மானம் முன்வைக்கப்பட்டது

## குற்றம் சுமத்துகிறார் பீரிஸ்

(கொழும்பு)

இலங்கையில் ஆட்சி மாற்றம் ஒன்றை ஏற்படுத்தும் நோக்கிலேயே இந்தப் பிரேரணை மனித உரிமைகள் மாநாட்டில் முன்வைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் குற்றம் சுமத்தியுள்ளார்.

இலங்கையில் இடம்பெறும் தேர்தல்களின் ஊடாக ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த முடியாத நிலையில், வெளிவாரியான அழுத்தங்களின் ஊடாக அதனைச் சாதிக்க முற்படுவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

அத்துடன் இந்தப் பிரேரணைக்கு ஆதரவளிக்குமாறு அமெரிக்கா சில நாடுகளை அச்சுறுத்தியதன் காரணமாகவே, மாற்றுத் தெரிவுகள் இன்றி அந்த நாடுகளுக்கு பிரேரணைக்கு ஆதரவளித்ததாகவும் அவர் கூறியுள்ளார். இதேவேளை, சர்வதேச விசாரணைக்கான குழு ஒன்று நியமிக்கப்பட்டால், அந்தக் குழுவை இலங்கைக்குள் அனுமதிப்பதா? இல்லையா? என்பது தொடர்பில் இலங்கை அரசாங்கமே தீர்மானிக்கும் என்று, அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அவ்வாறான விசாரணைக் குழு ஒன்று விசா இன்றி இலங்கைக்குள் பிரவேசிக்க முடியாது. இந்த நிலையில் அந்தக் குழு விசாவுக்கு விண்ணப்பிக்கும் போது, அந்தக் குழு நாட்டுக்குள் பிரவேசிக்கும் பொருட்டு விசா வழங்குவதா? இல்லையா? என்பது தொடர்பில் இலங்கை அரசாங்கமே தீர்மானிக்கும்.

இதற்கான இறைமை இலங்கையிடம் இருக்கிறது என்று அவர் கூறியுள்ளார்.

# போலி கைத்துப்பாக்கிகளுடன் வவுனியாவில் ஐவர் கைது

(வவுனியா)

வவுனியாவில் போலிக் கைத்துப்பாக்கிகளுடன் காரில் பயணித்ததாகக் கூறப்படும் 5 பேரை வவுனியாப் பொலிஸார் கைது செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர். நேற்று முன்தினம் அதிகாலை கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற காரொன்றை வவுனியா, ஈரப்பெரியகுளம் பகுதியிலுள்ள கல்குனாமடுச் சந்தியில் இடைமறித்துச் சோதனையிட்ட பொலிஸார், அக்காரினுள் போலி கைத்துப்பாக்கிகள் 2, கையுறைகள் 10 மற்றும் போலி இலக்கத் தகடுகள் சிலவற்றையும் கண்டு பிடித்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து, இச்சந்தேக நபர்களைக் கைது செய்து வவுனியா பொலிஸ் நிலையத்திற்கு கொண்டுவந்து விசாரணைகளை மேற்கொள்வதாகவும் பொலிஸார் கூறினர். இச்சந்தேக நபர்களில் 4 பேர் கொழும்பையும் ஒருவர் யாழ்ப்பாணத்தையும் சேர்ந்தவர்களாவர். இவர்களுக்கு பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்பிருக்கலாமெனவும் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

# தொற்று நோய்களின் தாக்கம் அதிகரிக்கும் அபாயம்

## எச்சரிக்கிறது உலக சுகாதார ஸ்தாபனம்

(கொழும்பு)

எதிர்வரும் காலங்களில் இலங்கையில் தொற்று நோய்களின் தாக்கம் அதிகரிக்கும் சாத்தியக்கூறுகள் இருப்பதாக எச்சரிக்கப்பட்டுள்ளது.

உலக சுகாதார ஸ்தாபனம் இந்த எச்சரிப்பை விடுத்துள்ளது.

பூகோள வெப்பநிலை அதிகரித்துள்ள நிலையில், இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் உலக சுகாதார ஸ்தாபனத்தின் இலங்கைக்கான பிரதிநிதி வைத்தியர் எப்.ஆர். மெஹேதா உள்ளிட்ட தரப்பினர், சுகாதார அமைச்சின் அதிகாரிகளை சந்தித்து இது தொடர்பில் விசேட சந்திப்பு ஒன்றில் ஈடுபட்டுள்ளனர். இதன் போது தொற்று நோய் பரவலை கட்டுப்படுத்துவதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பில் பேசப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

# 'ஆவா' தலைவருக்கு விளக்கமறியல் நீடிப்பு

யாழ். மாவட்டத்தில் பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்டமை தொடர்பில் கோப்பாய் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்ட ஆவா குழுவின் தலைவரை மேலும் 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதவான் நீதிமன்ற நீதவான் பொ.சிவகுமார் நேற்று முன்தினம் உத்தரவிட்டார்.

யாழ். மாவட்டத்தில் கொலை, கொள்ளை உள்ளிட்ட பல்வேறு குற்றச்செயல்களில் ஈடுபட்டு வந்த ஆவா (அதன் தலைவர் ஆவா வினோதன் உட்பட) குழுவைச் சேர்ந்த 13 பேர் ஜனவரி மாதம் 6ஆம் திகதி கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

யாழ்ப்பாணம் மற்றும் மல்லாகம் ஆகிய நீதிமன்றங்களினால் விளக்கமறியலில் வைக்கப்பட்ட இவர்கள், பின்னர் பிணையில் விடுதலை செய்யப்பட்ட நிலையில் தலைவர் மட்டும் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். இந்நிலையில் குறித்த வழக்கு நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தினால் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, கைக்குண்டுகள் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஆவா குழுவின் தலைவரை தொடர் விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டிருந்தார். (25)





**போரில் தோல்வியடைந்த பின்னர் ஜேர்மனியர்கள் ஹிட்லரின் பாசிச அரசியலுக்கு திரும்பியிருந்தால் இன்று இருப்பதைப்போல ஜேர்மனி இருந்திருக்குமா? அவர்களது அரசியலை குழி தோண்டி புதைத்து விட்டு, நடைமுறைக்கேற்றபடி பொருளாதாரத்தை தேர்ந்தெடுத்தபடியால் தோல்வியின் சாம்பல் மேட்டிலிருந்து அவர்களால் உச்சிக்கு உயர முடிந்தது. ஜேர்மனியர்களும் மற்றும் ஜப்பானியர்களும் பயனற்ற யுத்தங்களால் தாங்கள் இழந்த யாவற்றையும் திரும்பவும் வெற்றி கொண்டார்கள். நாங்கள் எங்கள் அரசியலை சரியான பாதைக்கு திருப்பினால் எங்களால் அவர்களைவிட அதிகம் செய்துகாட்ட முடியும்.**

# யாழ்ப்பாணத்தில் வீசும் மாற்றத்துக்கான காற்று

## நோயல் நடேசன் கட்டுரையிலிருந்து

யாழ்ப்பாணத்தில் போர் தீவிரமடைந்த காரணத்தால் முன்னர் நாங்கள் வாழ்ந்த எங்கள் பழைய யாழ்ப்பாணத்தை திரும்பவும் அடைவது தவிர்க்க முடியாதது என்பது எங்களுக்குத் தெரியும். யுத்தம் நடந்த வருடங்களில்கூட மிக நுட்பமான முறையில் புதிய யாழ்ப்பாணம் ஒன்று உருவாகும் அடையாளங்கள் இருக்கத்தான் செய்தன. கடந்த 5 வருடங்களில் நான் யாழ்ப்பாணத்துக்கு 13 தடவைகள் சென்றுள்ளேன். ஆனால் கடந்த 2014 ஜனவரியில் சென்றபோது யாழ்ப்பாணத்தில் நான் கண்ட சர்வதேச அடையாளங்களை விட சிறந்த முக்கியமான மாற்றங்கள் எதையும் முன்னர் கண்டதில்லை.

முதல்முறையாக யாழ்ப்பாணத்தின் இதயப் பகுதியில் சர்வதேச அடையாளங்களில் ஒன்றை நான் கண்டேன். அது கென்டக்கி பிரைட் சிக்கனின் தாடிவைத்த கேணலின் முகம் ஆகும். யாழ்ப்பாணம் அதன் பாரம்பரிய பொரிச்ச கோழியை கைவிட்டு கே.எப்.சி (KFC)இற்குள் நுழைவது மாற்றத்துக்கான ஒரு மாபெரும் பாய்ச்சல் என்றே சொல்லலாம். எனக்கு அது எங்கள் மக்கள் வெற்றிலை போடும் பழக்கத்தை கைவிட்டு சுயிங்கம் மெல்லுவதைப் போல இருந்தது. எனக்கு அந்த மாற்றம் யாழ்ப்பாணம் கடந்தகால நிலப் பிரபுத்துவ ஆட்சியை உடைத்துக் கொண்டு கடைசியாக 21ஆம் நூற்றாண்டுக்குள் நுழைவதன் இறுதிச் சின்னமாகத் தோன்றியது.

நாங்கள் வடக்கிலிருந்து தெற்கிற்கும் கிழக்கிலிருந்து மேற்குக்குமான சகல இடங்களுக்கும் பயணம் செய்தோம். அது புலன்களால் அறியக்கூடிய ஒரு மாற்றம் அதை உங்களால் காணவும் மற்றும் உணரவும் முடியும். வீதிகள் மட்டுமல்ல, அணுகும்முறை மற்றும் புதிய உற்சாகம் அங்குள்ள மக்களின் முகங்களில் தென்பட்டது.

ஒரு பிரகாசமான மாலைவேளையில் வெள்ளவத்தையின் குறுகிய வீதி ஒன்றினூடாக எனது மனைவியுடன் நடந்து செல்லுகையில் கிளிநொச்சியில் வசிக்கும் ஒரு இளம் விதவையின் கைபேசி அழைப்பு ஒன்று வந்தது. கடந்த மூன்று வருடங்களாக அவளுக்கு நான் அனுசரணை வழங்கி வருகிறேன். நான் யாழ்ப்பாணத்துக்கு செல்லும் வழியில் அவளைச் சந்திக்க எண்ணியிருந்தேன். உள்ளூர் பாடசாலை ஒன்றில் அவள் தொண்டராசிரியராக பணியாற்றிக் கொண்டிருப்பதால் கிளிநொச்சியில் வைத்து எங்களைச் சந்திக்க முடியாமல் இருப்பதையிட்டு வருத்தம் தெரிவிக்கவே அவள் எனக்கு கைபேசி அழைப்பை ஏற்படுத்தியிருந்தாள். அவளது முன்னேற்றத்தை அறிந்து கொண்டதில் எனக்கு மகிழ்ச்சியே ஏற்பட்டது. அவளைப்போன்ற போரில் தங்கள் கணவனை இழந்த மற்றும் 12 விதவைகள் இதேபோல முன்னேறியிருப்பதை முன்னேற்றத்துக்கான பொதுவான ஒரு அடையாளமாக நான் கருதினேன். கடந்த மூன்று வருடங்களாக அவர்களுக்கு நான் உதவி செய்து வந்தேன்.

**எங்களுக்கு தேவையானதெல்லாம் ஒரு புதிய தலைமை, அவர் புதிய சமிக்ஞைகளை படிப்பதன் மூலம் காலத்துக்கு ஏற்ப மாறுபவராக இருக்க வேண்டும். மோதல் அரசியலுக்கு திரும்புவது பழையபடி வளைந்து நெளிந்து திரும்பவும் எங்களை அரசியல் கொந்தளிப்புக்கே இட்டுச்செல்லும். எங்களுக்கு தேவை வடக்கு மற்றும் கிழக்கில், போரினால் கீறிக் கிழிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணம் தேடித்தரும் நடைமுறைக்கு ஏற்ற தலைமைத்துவமே.**

இங்கு முக்கியமான காரணிகளை பதிவு செய்ய வேண்டியிருக்கிறது. எல்.ரீ.ரீ.ஈ யினால் மேற்கொள்ளப்பட்டு வந்த முப்பது வருட பயங்கரவாதம் மற்றும் வன்முறைகளை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸ ஒரு முடிவுக்கு கொண்டுவந்திருந்தார். நாங்கள் அவரை விரும்புகிறோமோ அல்லது இல்லையோ இந்தக் கடினமான உண்மையை ஏற்றுக்கொண்டே ஆக வேண்டும். ஒரு போரின் முடிவு ஒரு தீர்மானத்தை மேற்கொள்ளும் தருணம், அது புதிய சாத்தியங்களுக்கான வழியை திறந்து வைக்கிறது. ஆனால், பிரபாகரனின் வீணான யுத்தத்துக்காக நிதி வழங்கிய தமிழ் புலம்பெயர்ந்தோர், வேறு மார்க்கங்களில் அதைத் தொடர்வதற்கு முடிவு செய்தார்கள். அவர்கள் யுத்தப்பாதையை வெளிநாட்டில் இருந்து தொடர்ந்தார்கள். பாதுகாப்பான கரைகளில் இருந்துகொண்டு போராட அவர்கள் முடிவு செய்தார்கள்.

எல்.ரீ.ரீ.ஈ சர்வதேச சட்டங்களை மீறுவதற்கு நிதியுதவிகளை வழங்கிய பின்னர், இரவோடிரவாக அவர்கள் மனித உரிமை பாதுகாவலர்களாக மாறிவிட்டார்கள். மற்ற எல்லாவற்றையும் ஒன்று சேர்த்தாலும் கூட இந்தப் போரில்தான் எங்கள் விடுதலை வீரர்கள் அதிகளவு தமிழர்களை கொன்றார்கள்.

பிரபாகரன் மற்றும் அவரது விடுதலை வீரர்களின் இந்த பயனற்ற யுத்தம் காரணமாக ஏற்பட்டுள்ள துன்பங்கள், மரணங்கள், மற்றும் அழிவுகளை கருத்தில் கொள்ளும்போது, அதை தொடர முயலும் புலம்பெயர்ந்தோரின் முயற்சிகள் எல்லாம் யுத்தத்தில் வீணடிக்கப்பட்டதை போல பயனற்ற முயற்சிகள் என்பதில் மாற்றம் எதுவும் இல்லை. நாங்கள் முன்னோக்கிச் செல்ல வேண்டுமாயின் நாங்கள் வெற்றிகொண்டுள்ள சமாதானத்தை நாங்கள் அங்கீகரிக்க வேண்டும். அரசியல் எனும் மேகம் இந்தப் பிரச்சினைகளை மறைத்து விட்டதால் மோசமான கடந்த காலம் சுலபமாக எங்களால் மறக்கப்பட்டு விட்டது.

போரின் கடைசி நாட்களில் தங்களுக்குத் தோல்வி தவிர்க்க முடியாதது என உணர்ந்த எல்.ரீ.ரீ.ஈ, ஒரு சர்வதேச கூப்பாட்டை எழுப்பும் நம்பிக்கையில் 400,000 தமிழ் பொது மக்களின் பின்னால் தன்னை மறைத்துக் கொண்டது. நிராயுதபாணியான பொதுமக்களின் பின்னால் மறைப்பு தேடுவது ஒரு வெட்கக்கேடான நடவடிக்கை, தங்களை வீரர்கள் என அழைத்துக் கொள்பவர்களுக்கு அது மதிப்பான ஒரு செயல் அல்ல. அது ஒரு அவமானகரமான செய்கை. இராணுவம் எல்.ரீ.ரீ.ஈ யை தோற்கடித்தது மட்டுமன்றி அவர்கள் பிடித்து வைத்திருந்த மக்களையும் மீட்டார்கள். இடம்பெயர்ந்த மக்களில் 95 விகிதமானவர்கள் மூன்று வருடத்துக்குள்ளேயே மீள் குடியேற்றப் பட்டதுடன் வட மாகாணத்தில் உட்கட்டமைப்பு வசதிகளும் மீளக் கட்டியெழுப்ப பட்டது. கிட்டத்தட்ட 95 விகிதமான செயற்பாட்டிலிருந்த எல்.ரீ.ரீ.ஈ அங்கத்தவர்களுக்கு புனர்வாழ்வு வழங்கப்பட்டு சமூகத்துடன் ஒன்றிணைக்கப்பட்டார்கள்.

சில பகுதிகளில் இன்னமும் திருத்த வேலைகளைச் செய்வதற்கான தேவைகள் உள்ளன என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன், மற்றும் சமூகங்களிற்கிடையேயான நல்லிணக்க நடவடிக்கைகளை அவை விரைவு படுத்தும். ஆனால் எங்கள் தமிழ் அரசியல்வாதிகள் வங்குரோத்து நிலையை அடைந்துள்ளார்கள். இதற்கான முழுப் பழியும் எல்.ரீ.ரீ.ஈ யினையே சாரும். கடந்த முப்பது வருடங்களில் அவர்கள் அரசியல் தலைவர்களை மட்டும் அழிக்கவில்லை. முக்கியமான சமூகத் தலைவர்களையும் கொன்றொழித்து விட்டார்கள்.

எங்களுக்குத் தேவையானதெல்லாம் ஒரு புதிய தலைமை, அவர் புதிய சமிக்ஞையான யாழ்ப்பாணத்தில் உள்ள கே.எப்.சி யினை படிப்பதன் மூலம் காலத்துக்கு ஏற்ப மாறுபவராக இருக்கவேண்டும். மோதல் அரசியலுக்கு திரும்புவது பழையபடி வளைந்து நெளிந்து திரும்பவும் எங்களை அரசியல் கொந்தளிப்புக்கே இட்டுச்செல்லும். எங்களுக்குத் தேவை வடக்கு மற்றும் கிழக்கில், போரினால் கீறிக் கிழிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணம் தேடித்தரும் நடைமுறைக்கு ஏற்ற தலைமைத்துவமே. எங்கள் மக்கள் வாழ்நாள் முழுவதும் அரசியல் பட்டினி கிடக்க முடியாது. துயரத்தின் ஆழத்திலிருந்து எங்கள் தலைகளை உயர்த்துவதற்கு எங்களுக்கு பொருளாதாரம் தேவை. தற்போதைக்கு நாங்கள் அரசியலை சற்று ஒத்திவைப்போம். அரசியலால் நாங்கள் இரத்தம் சிந்துவதற்கே நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம். பொருளாதாரத்தின் மூலம் கடந்த 30 வருடங்களாக பயனற்ற அரசியல் காரணமாக நாங்கள் இழந்த யாவற்றையும் திரும்பப் பெற்று முன்னோக்கி நடைபோட முடியும்.

எங்கள் முன்னாலுள்ள தெரிவு மிகவும் சுலபமானது: அரசியலா அல்லது பொருளாதாரமா என்பதுதான் அது. நாங்கள் அரசியலை தேர்வு செய்தால் நாங்கள் இழந்த ஈழத்துக்கே நாங்கள் திரும்பிச் செல்லவேண்டியிருக்கும். பொருளாதாரத்தை தேர்ந்தெடுத்தால், மே 2009இல் நாங்கள் இழந்த அனைத்யையும் எதிர்காலத்தில் திரும்பப் பெறுவதற்கான ஒரு வாய்ப்பு நமக்கு கிடைக்கும். வரலாற்று உதாரணங்கள் இதை. நியாயப்படுத்துகின்றன.

உதாரணத்துக்கு ஜேர்மனியர்களின் விடயத்தை எடுத்துக்கொண்டால், போரில் தோல்வியடைந்த பின்னர் அவர்கள் ஹிட்லரின் பாசிச அரசியலுக்கு திரும்பியிருந்தால் இன்று இருப்பதைப்போல ஜேர்மனி இருந்திருக்குமா? ஏனெனில் ஜேர்மனியர்கள் அவர்களது அரசியலை என்றென்றைக்குமாக குழி தோண்டிப் புதைத்து விட்டு, நடைமுறைக்கேற்றபடி பொருளாதாரத்தை தேர்ந்தெடுத்த படியால் தோல்வியின் சாம்பல் மேட்டிலிருந்து அவர்களால் உச்சிக்கு உயர முடிந்தது.

ஜேர்மனியர்களும் மற்றும் யப்பானியர்களும் பயனற்ற யுத்தங்களால் தாங்கள் இழந்த யாவற்றையும் திரும்பவும் வெற்றி கொண்டார்கள். நாங்கள் எங்கள் அரசியலை சரியான பாதைக்குத் திருப்பினால் எங்க்ளால் அவர்களைவிட அதிகம் செய்துகாட்ட முடியும்.

# யுத்தக்குற்றச்செயல்கள் தொடர்பில் சர்வதேச விசாரணைகளை ஏற்க முடியாது

## மீண்டும் வலியுறுத்தும் அவுஸ்ரேலியா



யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பிலான சர்வதேச விசாரணைகளை ஏற்றுக்கொள்ள முடியாது என அவுஸ்ரேலியா மீண்டும் வலியுறுத்தியுள்ளது.ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் அந் நாட்டு வெளிவிவகார அமைச்சர் ஜுலி பிசொப் இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.மனித உரிமைப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை எதிர்ப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மனித உரிமை விவகாரங்களில் இலங்கையை ஊக்கப்படுத்துவதன் மூலம் சர்வதேச சமூகம் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்பதே அவுஸ்ரேலியாவின் நிலைப்பாடு என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.இலங்கை அரசாங்கத்தின் ஒத்துழைப்பு இன்றி மெய்யான நல்லிணக்கத்தையோ அல்லது குற்றச் செயல்களுக்கு தண்டனை விதித்தலையோ அமுல்படுத்த முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

தனியான சுயாதீன சர்வதேச விசாரணை என்ற தீர்மானத்தின் உள்ளடக்கத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.யுத்தத்தின் பின்னர் நாட்டில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் கருத்திற் கொள்ளப்படாது தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.வடக்கு கிழக்கில் ஏற்பட்டுள்ள பொருளாதார மற்றும் உட்கட்டுமான அபிவிருத்தி கவனத்திற் கொள்ளப்படவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# ராஜீவ் காந்தி படுகொலை பாரிய குற்றச் செயல்

## இந்திய அரசு அறிவிப்பு



முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்ட சம்பவமானது பாரிய ஓர் குற்றச் செயலாகும் என இந்திய அரசாங்கம் அறிவித்துள்ளது.இந்திய உச்ச நீதிமன்றிற்கு இது குறித்து அறிவித்துள்ளது.

1991ஆம் ஆண்டில் விடுதலைப் புலிகள் ராஜீவ் காந்தியை படுகொலை செய்த தாகவும், இது மிகவும் ஓர் கொடூரமான குற்றச் செயல் எனவும் தெரிவித்துள்ளது. ராஜீவ் காந்தி படுகொலைச் சம்பவத்தை இலகுவில் மறந்து விட முடியாது என நீதிமன்றிடம், அரசாங்கம் அறிவித்துள்ளது.

ராஜீவ் கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபர்களை விடுதலை செய்வது குறித்த வழக்கு விசாரணைகளின் போது அரசாங்கம் இதனைத் தெரிவித்துள்ளது.

# சர்வதேச சமூகத்தின் விமர்சனம் இரட்டை நிலைப்பாட்டை கொண்டது

## என்கிறார் ராஜீவ விஜேசிங்க



இலங்கை குறித்த சர்வதேச சமூகத்தின் விமர்சனங்கள் இரட்டை நிலைப்பாட்டைக் கொண்டவை என ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜீவ விஜேசிங்க தெரிவித்துள்ளார். இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம் நியதிகளுக்கு புறம்பான வகையில் அமைந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் எவ்வித ஆதாரங்களும் இல்லாத நிலையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.நாடுகள் அடிப்படையிலான தீர்மானத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.சர்வதேச அழுத்தங்கள் அதிகளவில் பிரயோகிக்கப்படுவதற்கு அரசாங்கத்தின் ஒரு சிலரின் நடவடிக்கைகளும் ஏதுவாக அமைந்துள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். –

குறிப்பாக சர்வதேச விவகாரத்திற்கு பொறுப்பாக செயற்பட்டு வருவோர் உரிய முறையில் தங்களது கடமையை ஆற்றவில்லை என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.அடிப்படையற்ற குற்றச்சாட்டுக்கள் முதன் முதலில் சுமத்தப்பட்ட போது அதற்கு உரிய பதிலளிக்க வில்லை என அவர் தெரிவித்துள்ளார்.பாதுகாப்பு அமைச்சும் வெளிவிவகார அமைச்சும் தமது ஆலோசனைகளுக்கு செவிமடுக்க வில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.



அம்பாந்தோட்டையில் நிர்மாணிக்கப்பட்ட பறவைகள் இன விருத்தி மற்றும் ஆய்வு மத்திய நிலையத்தை ஜனாதிபதி திறந்து வைத்த போது..

# வர்த்தக உடன்படிக்கைகளில் சீன பிரதிநிதிகள் கைச்சாத்து

இலங்கை வரும் சீனப் பிரதிநிதிகள் பல்வேறு வர்த்தக உடன்படிக்கைகளில் கைச்சாத்திடவிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. சீனாவின் பிரதிநிதிகள் குழு ஒன்று எதிர்வரும் 31ஆம் திகதி இலங்கை வரவுள்ளது.

இந்த நிலையில், அந்த குழுவுடன் சுற்றுலா, கைத்தொழில்துறை உள்ளிட்ட பல்வேறு முதலீடுகள் தொடர்பான உடன்படிக்கைகள் ஏற்படுத்திக் கொள்ளப்படவிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.இது தொடர்பில் இலங்கை வர்த்தக சம்மேளனத்துக்கும், சீன பிரதிநிதிகளுக்கும் இடையிலான விசேட சந்திப்பு ஒன்றும் அடுத்தவாரம் நடைபெறவுள்ளது.

# தங்கம் கடத்திய இருவர் கைது

பெங்களூருக்கு கடத்திச்செல்ல முற்பட்ட ஒருதொகை தங்கம் சுங்க பிரிவினரால் நேற்று பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

கம்பளை பகுதியைச் சேர்ந்த இருவர் சுமார் 80 இலட்சம் ரூபா பெறுமதியான தங்கத்தை கடத்திச் செல்ல முற்பட்டபோது சுங்கப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடம் இருந்து பூர்த்தி செய்யப்படாத 1,618 கிராம் நிறையுடைய 10 தங்கச் -சங்கிலிகள் கைப்பற்றப்பட்டுள்ளன. சந்தேகநபர்களுக்கு தலா நான்கு இலட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டதுடன், பறிமுதல் செய்யப்பட்ட தங்கச் சங்கிலிகள் அரச உடைமையாக்கப்பட்டதாக சுங்க ஊடகப் பேச்சாளர் லெஸ்லி காமினி குறிப்பிடுகின்றார்.

# 10 பேருக்கு மரணதண்டனை கண்டி மேல் நீதிமன்றம் தீர்ப்பு



மாத்தளை - ரத்தோட்டை பிரதேசத்தில் 2004 ஆம் ஆண்டு இடம் பெற்ற கொலை தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்டிருந்த 10 பேருக்கு மரணதண்டனை விதித்து தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இந்த மரணதண்டனை உத்தரவை கண்டி மேல் நீதிமன்றம் பிறப்பித்துள்ளது.

2004 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதி ரத்தோட்டை நாகல பிரதேசத்தில் ஜயாவு முத்துகுமார் எனப்படும் சுகுஸ் என்பவர் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டிருந்தார்.இதனையடுத்து, ரத்தோட்டை காவற்துறையினரால் கைது செய்யப்பட்ட 14 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.இந்த அனைவரும் நேற்று முன்தினம் மேல்நீதிமன்றில் முன்னிலைப்பட்ட போது 10 பேருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

# ஊழியர் சேமலாப நிதியறிக்கை நாடாளுமன்றிற்கு வரவில்லை

## குற்றம் சுமத்துகிறது ஐ.தே.க.

(கொழும்பு)

2010 ஆம் ஆண்டு முதல் இதுவரை ஊழியர் சேமலாபநிதிய அறிக்கை சபைக்கு வரவில்லை என ஐக்கிய தேசிய கட்சி தெரிவித்துள்ளது. ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா இதனைத் தெரிவித்துள்ளார்.எவ்வாறாயினும், இந்த குற்றச்சாட்டை நிராகரித்த மத்திய வங்கி, ஊழியர் சேமலாப நிதி தொடர்பான அறிக்கை வெளியிடப்படும் எனத் தெரிவித்தது.

2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளுக்கான ஊழியர் சேமலாப நிதி தொடர்பான நிதியறிக்கை செய்தித்தாள்கள் ஊடாக வெளியிடப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.இது தொடர்பான அறிக்கை கணக்காளருக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் மத்திய வங்கி அறிவித்துள்ளது.இதனிடையே, 2013 ஆம் ஆண்டுக்கான ஊழியர் சேமலாப நிதி அறிக்கையை மத்திய வங்கியின் நிதிச் சபை தற்சமயம் ஆராய்ந்து வருவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# வெளிநாடு செல்ல தற்காலிக தடை

மீள் அறிவித்தல் வரை மாகாண சபை உறுப்பினர்கள் அரச செலவில் வெளிநாடு செல்வதை தடை செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மாகாண சபைகளின் பிரதான செயலாளர்களுக்கு எழுதப்பட்டுள்ள கடிதம் மூலம் அறிவித்ததாக வட மேல் மாகாண சபை ஆளுநர் திஸ்ஸ ஆர் பலல்லே தெரிவித்துள்ளார்.இந்தநிலையில் நேற்றைய தினம் சீன மற்றும் தாய்லாந்து செல்லவிருந்த 49 வட மேல் மாகாண சபை உறுப்பினர்களின் விஜயம் இரத்து செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.வட மேல் மாகாண சபை உறுப்பினர்கள் 3 குழுக்களாக 3 கோடி ரூபா செலவில் வெளிநாடு செல்ல விருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கையர் பண மோசடி; இன்ரர்போலின் உதவி நாடல்

பஹ்ரினில் ஆயிரக்கணக்கான டினார்களை மோசடி செய்து விட்டு, அங்கிருந்து தப்பி வந்த இலங்கையர் ஒருவர் தொடர்பில் இன்டர்போல் எனப்படும் சர்வதேச பொலிஸ் விசாரணை நடத்த விருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. பஹ்ரினில் அவர் பணியாற்றிய சுற்றுலா நிறுவனம் ஒன்றின் வாடிக்கையாளர்களிடம் இருந்து அவர் இந்த நிதியை மோசடி செய்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் குறித்த நிறுவனத்தின் முகாமையாளர் மொஹமட் சாலி பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார்.எனினும் இந்த விசாரணைகள் தாமதமடையும் நிலையில், இது தொடர்பில் இன்டர்போலின் உதவியை நாடவுள்ளதாக, த கல்ப் நியுஸ் தெரிவித்துள்ளது.




யாழ். உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் பாடசாலையில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற நெல்லியடி செலான் வங்கியின் சிறுவர் சந்தையை வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ்.நந்தகுமார் நாடாவெட்டி திறந்து வைப்பதையும், மாணவன் ஒருவரிடம் வலயக்கல்விப் பணிப்பாளர் பொருட்களை கொள்வனவு செய்வதையும் நெல்லியடி செலான் வங்கி முகாமையாளர், ஊழியர்கள் அருகில் நிற்பதையும் காணலாம். (18)

## வடமராட்சியில் வான் அகழ்வு

# அதிகாரிகளுடன் அமைச்சர் ஆராய்வு

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு தொண்டமானாறு முதல் தும்பளை கிழக்கு வரையிலான கடற்பகுதியில் வான் அகழ்வுப் பணிகளை தனியாரின் நிதியுதவி ஊடாக முன்னெடுப்பது தொடர்பிலான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் யாழ்.அலுவலகத்தில் இடம்பெற்றுள்ளது.

இதன்போது வடமராட்சி கிழக்கு சுப்பர்மடம் இன்புருட்டி, தும்பளை கிழக்கு, பொலிகண்டி கிழக்கு, மேற்கு, முனை சினைத்தோட்டம் உள்ளடங்கலான தொண்டைமானாறு முதல தும்பளை கிழக்கு வரையில் வான் அகழ்வுப் பணிகளை முன்னெடுப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

இதன்பிரகாரம் அப்பகுதி கடற்றொழிலாளர் சங்கங்களின் நிதியுதவியுடன் மேற்படி வான் அகழ்வுப் பணியை முன்னெடுப்பதற்கு சுற்றுச்சூழல் அதிகார சபையின் அனுமதியை பெற்றுத் தருமாறு அமைச்சரிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இதுதொடர்பில் அவதானம் செலுத்திய அமைச்சர் துறை சார்ந்தோருடன் கலந்துரையாடி அதற்கான அனுமதியினைப் பெற்றுத் தருவதற்கு நடவடிக்கை முன்னெடுக்கப்படுமெனத் தெரிவித்தார்.

இதனிடையே ஊர்காவற்றுறை இறங்குதுறையை அண்மித்த கடற்பகுதியில் நீண்ட காலமாக மூழ்கியிருக்கும் இரும்பு மிதவையை விரைவில் அங்கிருந்து அகற்றுவதற்கான நடவடிக்கைகளை துரிதப்படுத்துமாறு மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களப் பணிப்பாளர் கணேசமூர்த்திக்கு தொலை பேசி ஊடாக பணிப்புரை வழங்கினார்.

இதன்போது ஈ.பி.டி.பி.யின் வடமராட்சி இணைப்பாளர் ஸ்ரீரங்கேஸ்வரன், வடமாகாண கடற்றொழிலாளர் சம்மேளனங்களின் சமாசத் தலைவர் எமிலியாம்பிள்ளை ஆகியோர் கலந்து கொண்டனர்.

# அருகிவருகிறது கடற்குதிரைகள்

மன்னார் வளைகுடா கடற்பகுதியில் அரிய வகை கடல் வாழ் உயிரினமான கடற்குதிரைகள் அருகி வருவதாக உயிரியல் ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர். மன்னார் வளைகுடா கடற்பரப்பில் 21 தீவுகளும் அதை சுற்றியுள்ள கடல் உயிரின பெருக்கத்திற்கு ஆதாரமான பவளப் பாறைகளும் கடற்புற்களும் அதிகம் காணப்படுவதால் அரிதான கடல் வாழ் உயிரினங்கள் ஏராளமாக இங்கு காணப்படுகின்றன.

உலகில் 33 வகையான கடற்குதிரைகள் அறியப்பட்டுள்ளன. அவற்றில் மன்னார் வளைகுடா கடற்பகுதியில் மட்டும் ஐந்து வகையான கடற்குதிரைகள் காணப்படுகின்றன.

ஹிப்போகெம்பஸ் (Hippocampus) என்னும் அறிவியல் பெயர் கொண்ட குதிரை மீன், குறிப்பாக அதன் தலைப்பகுதியில் குதிரைத் தலை போன்ற தோற்றத்தால் கடற்குதிரை என்று அழைக்கப்படுகிறது. கடற்குதிரைகள் 40 மில்லியன் ஆண்டுகளுக்கு முன் பூமியில் தோன்றியவைகள் ஆகும். ஆனால் அவற்றின் ஆயுட் காலம் நான்கு ஆண்டுகள் மட்டுமே ஆகும்.

# தேசியமட்ட போட்டி பெறுபேறுகள்

தயட்டகிருள்ள தேசத்திற்கு மகுடம் கண்காட்சியில் சிறந்த கலைநிகழ்வுகளை தெரிவு செய்வதற்கான தேசிய மட்டப்போட்டி பெறுபேறுகள் வடமாகாண கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ளன.

உடனடிக் கவிதை, முதலாமிடம்,
க.முருகதாஸ் (பருத்தித்துறை),
தாள (உடுக்கு, பெர வாத்தியக் குழு போட்டியில், முதலாமிடம்,
மறவர் கலைக்குழு (பருத்தித்துறை).
கிராமியப்பாடல் (தனி), முதலாமிடம்,
தி.தவராசா (பருத்தித்துறை),
தனி நடனம் - இரண்டாமிடம்,
கி.துவராகா (வவுனியா வடக்கு),
குழு நடனம் - முதலாமிடம்,
நிருத்திய நிசேதன் (வவுனியா),
(விருது) றபான் பாடல் - இரண்டாமிடம்,
தி.தவராசா (பருத்தித்துறை).

# குடும்பப் பெண் மாயம்; நீர்வேலியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சென்றுவருவதாகக் கூறிவிட்டு தனது வீட்டிலிருந்து சென்ற குடும்பப் பெண் ஒருவர் 10 நாட்களாகியும் வீடு திரும்பவில்லை என அச்சுவேலி பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நீர்வேலி வ்டக்கு நீர்வேலியைச் சேர்ந்த தேவராசா செல்வநாயகி என்பவரே இவ்வாறு காணாமற் போயுள்ளவராவார். இவர் 4 பிள்ளைகளின் தாய் எனவும் தெரியவந்துள் ளது. மேற்படி காணாமற்போன பெண் உறவி னர்களுக்கு தெரியாமல் அயலவர்களுக்கு கூறி விட்டு யாழ்ப்பாணம் சென்ற நிலையில் இதுவரை வீடு திரும்பவில்லை எனவும் இவர் மனநிலை பாதிக்கப்பட்டவர் எனவும் தெரிவிக்கின்றனர்.

இதுவரை இவர் தொடர்பாக எந்தத் தகவலும் கிடைக்கவில்லை எனவும் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். (85)

# சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி உடுப்பிட்டி கம்பர் மலைப் பகுதியில் உருக்குலைந்த நிலையில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை பெண் ஒருவரது சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சடலமாக மீட்கப்பட்டவர் கம்பர்மலை பைங்கூரம் காலணியினைச் சேர்ந்த சின்னவன் மனோகரி (வயது 65) என அடையாளங் காணப்பட்டுள்ளதாக வல்வெட்டித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர். இவர், தனது சகோதரியுடன் வடமராட்சி உடுப்பிட்டி கம்பர் மலைப்பகுதியில் வாழ்ந்து வந்ததாகவும், இவரது சகோதரி கடந்த 5 நாட்களுக்கு முன்னர் கொழும்பு சென்றமையினால் குறித்த பெண் வீட்டில் தனிமையிலே வ்சித்து வந்ததாக்வும் விசாரணைகளில் தெரிய வந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பெண் 4 அல்லது 5 நாட்களுக்கு முன்னர் இறந்திருக்கலாம் என்பதுடன், இவர் கொலை செய்யப்பட்டாரா அல்லது தற்கொலையா என்ற கோணத்தில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஓவியக்கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

ஓவியர்களினால் அழகுற அமைக்கப்பட்ட ஓவியக் கண்காட்சி நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு திருமறைக் கலாமன்ற கலைத்தூது கலாமுற்ற ஓவியக்கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கண்காட்சி தொடர்ந்து எதிர்வரும் ஏப்ரல் மாதம் 30ஆம் திகதி வரை நடைபெறும் என தெரிவிக்கப்படுகின்றது. (27)

# முரசின் இன்றைய பலன்



(29.03.2014 சனிக்கிழமை)

விஜய வருஷம் பங்குனி மாதம் 15 ஆம் திகதி.
மரணயோகம் / சதுர்த்தசி. கரிநாள்.
பூரட்டாதி நட்சத்திரம் பி.இ. 03.10 வரை. பின் உத்தரட்டாதி.
இராகு காலம் 09.13 - 10.43 வரை. சுபநேரம் 03.13 - 04.43 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | வேலைப்பளுவினைப் பிறருக்கு கையளிக்காது தானாகவே செய்யமுற்பட்டதால் அவலம், வெளியூர் பயணம் தடைப்படலாம். |
| ரிஷபம் | அதிகப்பழயான கடமைப்பொறுப்பினைதலைமேல் சுமக்கமுற்படல், இழுபட்ட விவாகம் நல்ல முழவினைத் தரல். |
| மிதுனம் | கடமைப்பொறுப்பின்மையால் அலட்சிய மனப் பான்மை மேலோங்குதல், புத்திமதியைக் கேட்டதினால் துயர் விலகிப் போதல். |
| கடகம் | போதிய பயிற்சியின்மையால் பணியை சரியான முறையில் முழக்கமுழயாது திண்டாட்டம், தாயாரின் தேக நலம் குணமடைவதினால் மகிழ்ச்சி. |
| சிம்மம் | ஈடுபட்ட காரியத்தை முழக்க முயற்சி செய்யும் உறுதி இல்லாமை, தற்காலிக பதவி நிரந்தரமாகியதால் மகிழ்ச்சி கொள்ளல். |
| கன்னி | கட்டுப்பாடு இல்லாமல் நடக்க முயன்றதால் துயர் வந்தடைதல், இடமாற்றச் செய்தி கேட்டு மனம் பதகளிப்பில் இருத்தல். |
| துலாம் | ஏழரைச்சனி இருப்பதினால் பயணமுயற்சியை ஒத்தி வைத்தல், பராமரிக்க ஆள் இல்லாதமையினால் மன உளைச்சல் தக்க வைத்தல். |
| விருச்சிகம் | புத்திரப் பேற்றுக்காக வைத்திய ஆலோசனையை நாடல், அஷ்டமத்தில் குரு நிலவுவதினால் பயணம் பற்றிய முழவினைக் கைவிடல். |
| தனுசு | ஒழுக்கத்தைப் பாதுகாத்ததால் பிரச்சினைகளில் இருந்து தப்பித்தல், புதியதொழில் ஆரம்பிக்க வாடகைக்கு நிலையம் தேடுதல். |
| மகரம் | அரசியல் விமர்சனத்தால் நண்பருடன் பகைமை ஏற்படல், மாமன்மாருடன் முறுகல் நிலை ஏற்பட்டு முரண்பாடு தோன்றுதல். |
| கும்பம் | பரீட்சை முழவினால் அரசுத் தொழிலில் ஏற்பட சந்தர்ப்பம் உண்டாதல், நோய் குணமடைய குடும்ப சகிதம் தெய்வ தலமொன்றை நாடுதல். |
| மீனம் | மார்புச்சளி நோய் குணமடைய ஆயுர்வேத சிகிச்சையை நாடுதல், இடமாற்றம் நிற்பாட்டப் பட்டதை எண்ணி மனம் ஆனந்தமயமாதல். |




## மரணத்தின் பிடியில் ஷூமேக்கர்

பிரபல பார்முலா 1 கார் பந்தய வீரரான மைக்கல் ஷூமேக்கரின் உடல் நிலையில் முன்னேற்றம் இல்லாததால் அவர் குறித்த சோக செய்தியை எதிர் கொள்ள அவருடைய இரசிகர்கள் தயாராக இருக்க வேண்டும் என டாக்டர் கேரி ஹொர்ட்ஸ்டெயின் தெரிவித்துள்ளார்.

பார்முலா 1 கார் பந்தயத்தில் 7 முறை சம்பியன் பட்டம் வென்ற ஜேர்மனி வீரரான மைக்கல் ஷூமேக்கர், கடந்த டிசம்பரில் பிரான்ஸின் ஆல்ப்ஸ் மலைப் பகுதியில் பனிச்சறுக்கு விளையாட்டில் ஈடுபட்டிருந்தபோது விபத்துக்குள்ளானார். தலையில் பலத்த காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அவர் தொடர்ந்து கோமாவில் இருந்து வருகிறார். அவரை கோமாவில் இருந்து எழுப்புவதற்காக மருத்துவர்கள் தொடர்ந்து போராடி வருகின்றனர். எனினும் இதுவரையில் எந்த முன்னேற்றமும் இல்லை.

இந்த நிலையில் பார்முலா 1 கார் பந்தயத்தில் ஷூமேக்கர் பங்கேற்றிருந்த சமயத்தில் தலைமை மருத்துவராக பணிபுரிந்த டாக்டர் கேரி ஹார்ட்ஸ்டெயின், தனது வலைப்பூவில், மைக்கல் ஷூமேக்கரை கோமாவில் இருந்து எழுப்புவதற்கான வாய்ப்பு மிக மிகக் குறைந்து கொண்டே வருகிறது என குறிப்பிட்டுள்ளார்.



# இறுதியில் செரீனா

(மியாமி)

மியாமி ஓப்பன் ரென்னிஸ் தொடரின் பெண்கள் ஒன்றையர் பிரிவு அரையிறுதிப் போட்டியில் ஷரபோவாவை வீழ்த்திய செரீனா வில்லியம்ஸ் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளார்.

அமெரிக்காவின் மியாமி நகரில் சோனி ஓப்பன் சர்வதேச ரென்னிஸ் போட்டி நடைபெற்று வருகிறது. பெண்கள் ஒற்றையர் பிரிவு அரையிறுதி போட்டியில்

முதல்நிலை வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் (அமெரிக்கா) மரியா ஷரபோவா (ரஷ்யா) பலப்பரீட்சை நடாத்தினர்.

இதில் செரீனா 6-4, 6-3 என்ற நேர்செட் கணக்கில் ஷரபோவாவை வீழ்த்தி இறுதிப்போட்டிக்குள் நுழைந்தார்.

ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்று நடைபெற்ற காலிறுதி ஆட்டத்தில் முதல் நிலை வீரர் ரபெல் நடால் (ஸ்பெயின்) ரோனிக் (கனடா) மோதினர். இதில் ரபெல் நடால் 4-6, 6-2, 6-4 என்ற செட் கணக்கில் வென்று அரையிறுதிக்கு முன்னேறினார்.


மற்றொரு காலிறுதி ஆட்டத்தில் தோமஸ் பெர்டிச் (செக்குடியரசு) டோகோபோவ் (உக்ரேன்) மோதினர். இதில் பெர்டிச் 6-4, 7-6 (7-3) என்ற கணக்கில் வென்று அரையிறுதிக்குள் நுழைந்தார்.

## தோல்வியிலிருந்து கற்றுக்கொண்டோம் பாடம்

(மிர்புர்)

இங்கிலாந்து அணியுடனான தோல்வியிலிருந்து நிறைய பாடங்களைக் கற்றுள்ளோம். அடுத்து வரும் போட்டிகளில் சிறப்பாக ஆடுவோம் என்ற நம்பிக்கை உள்ளது என இலங்கை அணியின் கப்டன் சண்டிமால் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற இங்கிலாந்து அணியுடனான போட்டி குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே சண்டிமால் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், வேகப்பந்து வீச்சாளர்கள் சிறப்பாகச் செயற்பட்டு ஓட்டங்களைக் கட்டுப்படுத்தினர். குறிப்பாக குலசேகர சிறப்பாக பந்து வீசி எதிரணிக்கு நெருக்கடி கொடுத்தார். இப்போட்டியில் நாங்கள் தோல்வியுற்ற போதிலும் அதிக பாடங்களைக் கற்றுள்ளோம். அடுத்து வரும் போட்டிகளில் சிறப்பாகச் செயற்பட்டு எமது இலக்கை அடைவோம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



## தீர்ப்பை மதிக்கவேண்டும் முன்னாள் வீரர்கள் கோரல்

(புதுடில்லி)

உயர் நீதிமன்றத்தின் உத்தரவை இந்திய கிரிக்கெட் சபை மதிக்க வேண்டும் என இந்திய அணியின் முன்னாள் வீரர்களான கும்ளே, ராவிட், ஸ்ரீகாந் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

**கும்ளே:**

உயர் நீதிமன்றத்தின் தீர்வை அனைவரும் மதிக்க வேண்டும். அதனைப் பின்பற்ற வேண்டும்.

கிரிக்கெட் எமது வாழ்க்கையில் ஒன்றிப்போய் இருந்தது. அது இது போன்ற சமபலங்களால் (சூதாட்டம், ஊழல்) பாதிக்கப்படக் கூடாது. இந்த விவகாரத்தை இரசிகர்கள் உன்னிப்பாக கவனிக்கிறார்கள். எனவே இதைச் சரியான முறையில் கையாளுவதை உறுதிப்படுத்த வேண்டும்.

**ராவிட்:**

உயர் நீதிமன்றில் வழக்கு விசாரணை உள்ளதால் கருத்துத் தெரிவிக்க விரும்பவில்லை. நாம் தீர்ப்புக்காக காத்திருக்க வேண்டும். அது எந்த வகையில் அமைந்தாலும் அதனை சகலரும் ஏற்க வேண்டும். தற்போது முடிவு சிறந்ததாகவே கொள்ள வேண்டும். வாழ்க்கையில் நல்லது கெட்டது நடக்கும். அது எல்லாமே (கிரிக்கெட்) கெட்டது கிடையாது.

**ஸ்ரீகாந்த்:**

இதுபற்றி தற்போது கருத்து தெரிவிக்க இயலாது. எல்லாமே இரண்டாம் கட்ட தீர்ப்பில் தான் இருக்கிறது.

# கிரிக்கெட் சபையின் இடைக்காலத் தலைவராக கவாஸ்கர்

### உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவு



இந்திய கிரிக்கெட் சபையின் (பி.சி.சி.ஐ.) தற்காலிகத் தலைவராக முன்னாள் அணிக் கப்டன் சுனில் கவாஸ்கர் செயற்படுவார் என்று இந்திய உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஐ.பி.எல். சூதாட்டம் மற்றும் பந்தயம் கட்டுதல் வழக்கில் உச்ச நீதிமன்றம் அதன் இறுதி தீர்ப்பை அளிக்கும் வரை பி.சி.சி.ஐ.யின் தற்காலிகத் தலைவராக சுனில் கவாஸ்கர் 2014ஆம் ஆண்டின் ஐ.பி.எல். தொடர்பிலான செயற்பாடுகளை மேற்கொள்வார் என்று உச்ச நீதிமன்றம் நேற்றுத் தெரிவித்துள்ளது.

பி.சி.சி.ஐ.யின் வழக்கமான செயற்பாடுகள் தொடர்பில் அதன் மூத்த துணைத்தலைவரான ஷிவ்லால் யாதவ் செயற்படுவார் என்றும் உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

இந்த வழக்கை நேற்று விசாரித்த நீதிபதிகள் ஏ.கே.பட்நாயக் மற்றும் இப்ராஹிம் கலிபுல்லா ஆகியோர் அடங்கிய அமர்வு எதிர்வரும் ஐ.பி.எல். தொடரில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியும் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியும் விளையாடுவதற்கு அனுமதியும் வழங்கியுள்ளது.

மேலும் இந்தியா சிமண்ட்ஸ் நிறுவனத்திற்கு தொடர்புடைய கிரிக்கெட் வீரர்கள் மற்றும் வர்ணனையாளர்கள் ஆகியோரைத் தவிர வேறு எவரும் பி.சி.சி.ஐ.யில் எந்தப் பொறுப்பும் வகிக்கக்கூடாது என்றும் அந்த அமர்வு நேற்றுத் தெரிவித்துள்ளது.

இந்த வழக்கின் அடுத்த கட்ட விசாரணை ஏப்ரல் மாதம் 16 திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

# 6 விக்கெட்டுக்களால் ஆஸியை வீழ்த்திய தீவுகள்



உலகக் கிண்ண ருவென்ரி-20 தொடரின் அவுஸ்ரேலிய அணியுடனான சூப்பர் 10 சுற்றிப் போட்டியில் மேற்கிந்தியத்தீவுகள் அணி ஆறு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

ஐந்தாவது உலகக் கிண்ண ருவென்ரி-20 கிரிக்கெட் தொடரின் சூப்பர் 10 சுற்றின் குழு 2இற்கான ஆட்டமொன்று நேற்று டாக்காவில் நடைபெற்றது. இதில் மேற்கிந்தியத்தீவுகள், அவுஸ்ரேலிய அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய அவுஸ்ரேலிய அணி மைக்ஸ்வெல், டேவிட் வோர்னர் ஆகியோரின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் கௌரவமான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் அவுஸ்ரேலிய அணி 20 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 178 ஓட்டங்களைப் பெற்றது. இதில் மைக்ஸ்வெல் 22 பந்துகளை எதிர்கொண்டு மூன்று சிக்ஸர்கள், ஐந்து பவுண்டரிகள் அடங்கலாக 45, டேவிட் வோர்னர் 14 பந்துகளை எதிர்கொண்டு நான்கு பவுண்டரிகள் அடங்லாக 20, கொக் 35 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சுனில் நரைன், சாமுவேல்ஸ் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 179 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய மேற்கிந்தியத்தீவுகள் அணி கிறிஸ் கெய்ல், டரன் சமி, டுவைன் பிராவோ ஆகியோரின் அதிரடித் துடுப்பாட்டத்தின் மூலம் வெற்றியிலக்கை அடைந்தது. இறுதியில் மேற்கிந்தியத்தீவுகள் அணி 19.4 ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் கிறிஸ் கெய்ல் 35 பந்துகளை எதிர்கொண்டு இரண்டு சிக்ஸர், மூன்று பவுண்டரிகள் அடங்கலாக 53 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். டரன் சமி 13 பந்துகளை எதிர்கொண்டு மூன்று சிக்ஸர்கள், இரண்டு பவுண்டரிகள் அடங்கலாக 34, டுவைன் பிராவோ 12 பந்துகளை எதிர்கொண்டு இரண்டு சிக்ஸர்கள், இரண்டு பவுண்டரிகள் அடங்கலாக 27 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றனர். பந்து வீச்சில் ஸ்ரார்க் இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். போட்டியின் ஆட்டநாயனாக சமி தெரிவு செய்யப்பட்டார்.

## இன்றைய ஆட்டங்கள்

ICC WORLD TWENTY20 Bangladesh 2014

**நியூசிலாந்து எதிர் நெதர்லாந்து**
**இடம்: சிட்டகொங் நேரம் : 3.00 மணி**

**இங்கிலாந்து எதிர் தென்னாபிரிக்கா**
**இடம் : சிட்டகொஹ் நேரம் : 7.30**

# கூடைப்பந்தாட்டம் விண்ணப்பிக்கக் கோரல்

(யாழ்ப்பாணம்)

இளைஞர் சேவை மன்றத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் 13 வயதுப் பிரிவு பாடசாலை அணிகளுக்கிடையிலான கூடைப்பந்தாட்டத் தொடரை எதிர் வரும் 4,5,6ஆம் திகதிகளில் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடாத்தவுள்ளது.

இப்போட்டித் தொடரில் பங்குகொள்ளவுள்ள பாடசாலை அணிகளை தேசிய இளைஞர் சேவை மன்ற யாழ். மாவட்ட அலுவலகர் அல்லது யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கத் தலைவர் ஆகியோரிடம் பதிவுகளை மேற்கொள்ள முடியும் என போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (93)


# அனுபவமின்மையே தோல்விக்குக் காரணம்

(மிர்புர்)

அனுபவமின்மையே தென்னாபிரிக்க அணியுடனான தோல்விக்குக் காரணம் என நெதர்லாந்து அணிக் கப்டன் பேர்ன் தெரிவித்துள்ளார்.

சிறப்பான ஆரம்பத்தை நாங்கள் பெற்றுக்கொண்டபோதும் அதனைபயன் படுத்திக் கொள்ளத் தவறிவிட்டோம். இதற்கு போதியளவு அனுபவம் எங்களிடம் இல்லாமையே காரணம் என்பதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மலேசியா மோட்டார் சைக்கிள் அணி கொழும்பை நோக்கி நேற்றுப் பயணம்





(யாழ்ப்பாணம்)

இலங்கை - மலேசியா நட்புறவின் அடிப்படையிலான கெவி மோட்டார் சைக்கிள் பயணம் நேற்று பருத்தித்துறையிலிருந்து கிளிநொச்சி ஊடாக கொழும்பை நோக்கிப் பயணமானது.

இலங்கை, மலேசியா நட்புறவை வலுப்பெறச் செய்யும் வகையில் மலேசியாவைச் சேர்ந்த மோட்டார் சைக்கிள் பந்தய வீரர்கள் இலங்கை முழுவதும் மோட்டார் சைக்கிள் சவாரியில் பங்குகொண்டனர். கடந்த 23ஆம் திகதி ஆரம்பமான இப்பந்தயத்தில் ஒன்பது பேர் கொண்ட அணி பங்குபற்றுகின்றது.

கொழும்பிலிருந்து நுவரேலியாவை சென்ற இவ்வணி, கண்டி, திருகோணமலை வழியூடாக நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு அரங்கை வந்தடைந்த இவ்வணி யாழ்ப்பாணத்திலிருந்து, பருத்தித்துறை, கிளிநொச்சி, அனுராதபுரம் வழியூடாக மீண்டும் கொழும்பைச் சென்றடையவுள்ளது.

1200 சி.சி., 1400 சி.சி. போன்ற உந்து சக்தி கொண்ட இம்மோட்டார் சைக்கிள் அணியில் யாழ்ப்பாணத்தின் மூன்றாவது தலைமுறையைச் சேர்ந்த இருவர் இடம்பிடித்துள்ளனர்.

இதேவேளை, யாழ்ப்பாணம் வந்தடைந்த இவ்வணியை யாழ். மாவட்ட படைத் தலைமையகத்தினர் சிறப்பானவரவேற்பு அளித்தனர். அத்துடன் பந்தய வீரர்களைக் கௌரவிக்கும் வகையில்நேற்று முன்தினமிரவு காங்கேசன்துறை படைத் தலைமை அலுவலகத்தில் இரவு போசனம் வழங்கப்பட்டது. யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி உதய பெரேரா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ். மாவட்ட அரச அதிபர், பலாலி பாதுகாப்பு படைத் தலைமையகத்தின் ஊடகப் பிரிவு அதிகாரி மேஜர் எம்.ஏ.ஆர்.எஸ்.கே. மல்லவ ஆராய்ச்சி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி.,25)

# புத்தாண்டை முன்னிட்டு பாரம்பரிய விளையாட்டு

## பண்பாட்டலுவல்கள் திணைக்களம் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் சித்திரை தமிழ் - சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு பாரம்பரிய விளையாட்டு நிகழ்வுகளை மாகாண ரீதியில் நடாத்தவுள்ளது.

இதில் ஆண்களுக்கான போர்த் தேங்காய் அடித்தல், ஆண்களுக்கான பலம் பார்த்தல் (கிட்டியிழுத்தல்), இரு பாலாருக்குமான முட்டி உடைத்தல், பெண்களுக்கான கிடுகு பின்னுதல், தோரணம் பின்னுதல் (குத்துவிளக்கு அமைப்பில்) இரு பாலாருக்குமான கயிறுழுத்தல், தாச்சிப் போட்டி என பல போட்டி நிகழ்வுகளை நடாத்தவுள்ளது.

இப்போட்டியில் பங்குகொள்ள விரும்புவோர் தங்கள் பிரிவிலுள்ள கலாசார உத்தியோகத்தரைத் தொடர்பு கொண்டு விபரங்களைப் பெற்றுக் கொண்டு எதிர்வரும் 2ஆம் திகதிக்கு முன்னர் பதிவு மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை, போட்டி நடைபெறும் இடம், திகதி பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும் எனவும், வெற்றியீட்டுவோருக்கு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும், ஆர்வமுள்ள அனைவரையும் போட்டிகளில் பங்குகொண்டு பரிசில்களை வெல்லுங்கள் எனவும் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (48)

# கொழும்புத்துறையில் நாளை கால்பந்தாட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை சனசமூக நிலையத்தின் 63ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டும், சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு கொழும்புத்துறை விநாயகர் விளையாட்டுக்கழகம் விளையாட்டுப் போட்டிகள் பலவற்றை நடாத்தவுள்ளது.

கால்பந்து, மென்பந்து கிரிக்கெட், கரப்பந்து, கயிறு திரித்தல், கிடுகு பின்னல், தேய்காய் துருவுதல், மரதன் ஓட்டம் போன்ற போட்டிகளை நடாத்தவுள்ளது.

இதேவேளை, கொழும்புத்துறை முன்பள்ளி மாணவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் நடாத்தப்படவுள்ளன.

இந்நிலையில் ஆண்களுக்கான கால்பந்தாட்டப் போட்டி நாளை பிற்பகல் 3.00 மணிக்கு கொழும்புத்துறை துரையப்பா மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது. இப்போட்டியில் பங்குகொள்ளவுள்ள அணிகளை உரிய நேரத்திற்கு வருகை தந்து நேர விரயத்தைத் தவிர்த்துக் கொள்ளுமாறு போட்டி அமைப்பாளர்கள் கேட்டுள்ளனர்.

இப்போட்டிகளில் வெற்றியீட்டுவோருக்கான பரிசில்கள் வழங்கும் நிகழ்வு புத்தாண்டு தினத்தன்று வழங்கப்படும் எனவும் போட்டி அமைப்பாளர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (எஸ்.பி.)

விளையாட்டு செய்திகள்

# வலிகாமம் வலய மட்ட கரம் வெற்றியீட்டிய அணிகள்

(சுன்னாகம்)

வலிகாமம் கல்வி வலயப்பாடசாலைகளுக்கிடையிலான கரம் போட்டியில் வெற்றியீட்டிய அணிகளின் விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான வலய மட்ட கரம் போட்டி கடந்த வாரம் இராமநாதன் பெண்கள் கல்லூரியில் நடைபெற்றது.

இதில் 15 மற்றும் 19 வயதுப் பிரிவு ஆண்கள், பெண்கள் அணிகள் பங்குகொண்டன.

இதில் 15 வயதுப் பிரிவு ஆண்கள் : முதலாமிடத்தை ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க பாடசாலை, இரண்டாமிடத்தை உடுவில் மான்ஸ் வித்தியாலயம், மூன்றாமிடத்தை சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி.

19 வயதுப் பிரிவு ஆண்கள் : முதலாமிடம் உடுவில் மான்ஸ் வித்தியாலயம், இரண்டாமிடம் ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்கப் பாடசாலை, மூன்றாமிடம் வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம்.

15 வயதுப் பிரிவு பெண்கள்: முதலாமிடம் ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்கப் பாடசாலை, இரண்டாமிடம் சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி, மூன்றாமிடம் உடுவில் மான்ஸ் வித்தியாலயம்.

19 வயதுப் பிரிவு பெண்கள்: முதலாமிடம் ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்கப் பாடசாலை, இரண்டாமிடம் இராமநாதன் பெண்கள் கல்லூரி, மூன்றாமிடம் உடுவில் மான்ஸ் வித்தியாலயம்.

இப்போட்டிகள் வலிகாமம் கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் தலைமையில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (93)



வலிகாமம் வலய பாடசாலைகளுக்கிடையிலான 15 வயதுப் பிரிவு பெண்கள் பூப்பந்தாட்டப் போட்டியில் இரண்டாமிடத்தைப் பிடித்துக் கொண்ட பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியினரைக் காணலாம். (48)

# அந்த அஞ்சலட்டைகள் என்ன ஆகும்?

**அஞ்சலி : தி.க.சி**

நான் கல்கியில் சேர்ந்தபிறகு ஒரு முறை திருநெல்வேலி சென்று அவரை நேரில் சந்தித்தேன். மறக்க முடியாத தினம். கடிதம் வழி அவர் பொழிந்த அன்பெல்லாம் ஒன்றுமேயில்லை. நேரில்

அவர் என் தந்தையை நிகர்த்த மனிதராயிருந்தார். முன்பின் பார்த்தறியாத ஓர் இளைஞனை, அரைகுறை படிப்பு, ஆரம்ப நிலை எழுத்து, வெறும் ஆர்வக் கோளாறு என்றிருந்தவனை அன்று அவர்தம் உற்சாகச் சொற்களால் கணிசமாக உருவேற்றியதை மறக்க இயலாது. ஒரு முழு வாழ்நாளுக்கும் போதுமான பூஸ்ட்.

வாரம்தோறும் எனக்கு போஸ்ட் கார்ட் எழுதுவார். விஷயம் இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி. வெள்ளிக்கிழமை ஆனால் அவரது கார்ட் நிச்சயம்.

இப்போது எண்ணிப் பார்க்கிறேன். எந்தப் புத்தகமும் ஆசிரியரும் பயிற்றுவிக்காத எத்தனையோ விஷயங்களை தி.க.சி.யின் போஸ்ட் கார்ட்கள் எனக்கு போதித்திருக்கின்றன. இடதுசாரி எழுத்தாளர்கள்மீது எனக்கு இருந்த ஏமாற்றத்தை மாற்றக் கடும் முயற்சிகள் செய்திருக்கிறார். டி.செல்வராஜ், சின்னப்ப பாரதி புத்தகங்களையெல்லாம் அவர்தான் என்னைப் படிக்க வைத்தார். அழகிரிசாமியின் எழுத்துகளைக் குறித்து நான்கு போஸ்ட் கார்ட்களில் தொடரும் போட்டு ஒரு சிறு கட்டுரையே எழுதியிருக்கிறார்.

அவரது நம்பிக்கைகளை நான் மிகவும் மதித்தேன். பலவற்றை ஏற்காது போனாலும்கூட. அவரைப் பற்றி ஜெயமோகன் ஒருமுறை ரொம்ப நக்கலாக ஒரு கட்டுரை எழுதியிருந்தார். எனக்கு பயங்கரக் கோபம் வந்துவிட்டது. வாங்கி வைத்திருந்த அவரது அப்போதைய நாவலான பின் தொடரும் நிழலின் குரலை வாசிக்கவே விரும்பாமல் கிடப்பில் போட்டேன்.

கொஞ்ச நாள் கழித்து திகசியிடம் இருந்து கார்ட் வந்தது. பின் தொடரும் நிழலின் குரல் படித்துவிட்டாயா?

இல்லை என்றும் அதற்கான காரணத்தையும் சொன்னேன். "ரொம்பத் தப்பு. படிச்சிடு. புதுசா முயற்சி செய்திருக்காரு. சில பகுதிகள் ரொம்ப நல்லா வந்திருக்கு" என்றார்.

அதன் பிறகுதான் அதைப் படித்தேன். திகசி முற்றிலும் வெறுத்து ஒதுக்கக்கூடிய ஒரு படைப்பைக் கூட அதிலுள்ள நல்ல அம்சங்களை முன்வைத்து சிபாரிசு செய்யக் கூடியவர் என்பதை அறிந்தேன்.

பிறகு நான் அந்த நாவலைப் படித்து முடித்து திகசிக்கு எழுதியபோது, அட்டகாசமான நாவல், விஷ்ணு புரத்தைவிட எனக்கு இதுதான் பிடித்திருக்கிறது என்றேன். பதில் வரவில்லை. சில காலம் கழித்து நேரில் போய்ச் சந்தித்தேன். என் கடிதத்தை நினைவுகூர்ந்து, "அது வெறும் வம்புய்யா. முழு வெறுப்போட வெளிப்பாடு. வெறுப்புல விளையுற படைப்பு சிறந்ததா இருக்க முடியாது. பொம்மை யானைய ஷோ கேஸ்ல பாத்துட்டு யானைய பத்தி எல்லாம் தெரியும்னு சொல்லுற மாதிரி" என்றார்.

**- பா.ராகவன்**

நான் அவருடன் நெருங்கிப் பழகியவன் அல்ல. 15 ஆண்டுகளுக்கு முன்னர் குடும்பத்தோடு நெல்லை போயிருந்தேன். அப்போது அவரை வீடுதேடிச் சென்று சந்தித்தேன். சிறிய வீடு அது. அதற்குள்ளிருந்து வெளியே வந்த அவர் என்னைக் கட்டித் தழுவி வரவேற்றார். அந்த நேரத்தில் அவரது துணைவியார் பக்கத்தில் எங்கோ போயிருந்தார். நானும் அவரும் பேசிக்கொண்டதை எனது மனைவியும் அப்போது சிறுவர்களாக இருந்த என் மகன்களும் வினோதமாகப் பார்த்துக்கொண்டிருந்தனர். சற்று நேரத்தில் திகசியின் துணைவியார் வந்துவிட்டார். அவரிடம் என்னை தோழர் தி.க.சி அறிமுகப்படுத்துவதற்கு மேற்கொண்ட முயற்சி வெற்றிபெறவில்லை. தி.க.சியின் கம்மிப்போன குரல் அதற்குக் காரணமா அல்லது அவரது துணைவியாரின் கேட்கும் திறன் காரணமா என்று என்னால் யூகிக்கமுடியவில்லை.

என்னுடன் பேசியபடி உள்ளே அறைபோல இருந்த பகுதிக்கு என்னை திகசி அழைத்துச் சென்றார். அங்கு ஒரு சிறிய மேசை - பள்ளிப் பிள்ளைகளுக்கே போதாத அளவில் - இருந்தது. அதன்மீது கத்தையாக அஞ்சல் அட்டைகள் இருந்தன. அதுதான் அவரது "படைப்புலகம்" என்பது புரிந்தது.

தமிழில் புதிதாக முளைக்கும் சிற்றிதழ் எதுவாக இருந்தாலும் அதன் இரண்டாவது இதழில் அவரது கடிதம் நிச்சயம் பிரசுரமாகியிருக்கும். அவர் எழுதிய கடிதங்கள் தமிழில் வெளியான இதழ்கள் பலவற்றுக்கு ஒரு இலக்கிய அங்கீகாரத்தை அளிப்பதற்கு உதவின என்பதை நாம் மறுக்க முடியாது.

தி.க.சி காலமாகி விட்டார் என்பது அதிர்ச்சி தரும் செய்தி அல்ல. அதிலும் "தன்முன்னேற்ற" எழுத்தாளர்கள் மலிந்திருக்கும் தமிழ்ச்சூழலில் அவரது இறப்பு எந்த அளவுக்குக் கவனிக்கப்படும் என்பதும் தெரியவில்லை. அந்தச் செய்தியை முகநூலில் படித்த கணத்தில் என்னைத் தழுவியிருந்த அவரது கை தொய்வடைந்து நழுவி விழுந்ததுபோல இருந்தது. அவரது மேசையிலிருக்கும் அஞ்சலட்டைகள் இனி என்ன ஆகும்?

**- ரவிக்குமார்**



இலக்கியத்திற்காகவே வாழ்ந்த அபூர்வமான மனிதர் தி.க.சி. புதிய எழுத்தாளர்களை அவர் போல வழிநடாத்தக்கூடியவர் எவருமில்லை. அவரது பாராட்டுக் கடிதம் பெறாத எழுத்தாளர்கள் எவருமில்லை. பேரன்பு கொண்ட மனிதர்.

அவர் உருவாக்கிய எழுத்தாளர்கள், தீவிர வாசகர்கள், ஊடக செய்தியாளர்கள் என நிறைய இருக்கிறார்கள். இடதுசாரிக்கோட்பாட்டில் தீவிர நம்பிக்கை கொண்டிருந்தவர் தி.க.சி, அதன் மீதான விமர்சனங்களை ஏற்றுக் கொண்டு தனது கருத்துக்களைத் திறந்த மனதுடன் விவாதிக்கக்கூடியவர்.

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பு நெல்லையில் அவரது வீடு தேடிப்போய் சில நண்பர்கள் சந்தித்துப் பேசிக் கொண்டிருந்தோம். முதுமையின் தளர்ச்சியில்லை. உற்சாகமாக இரண்டு மணி நேரம் பேசினார்.

பேசி முடித்துக் கிளம்பும் போது, நீ அன்டன் செகோவ் பற்றி விரிவாக ஒரு புத்தகம் எழுத வேண்டும் என்று அன்புக் கட்டளையிட்டார்.

ஊர் திரும்பி மறுநாள் அவரிடமிருந்து ஒரு தொலைபேசி அழைப்பு.

அன்டன் செகோவை எழுத ஆரம்பிச்சிட்டியா. உடனே ஆரம்பிச்சிடு. செகோவ் பற்றி நல்ல புத்தகம் ஒண்ணும் வரலை, செகோவ் மகத்தான எழுத்தாளர், என நினைவூட்டினார்.

மற்றவர்களை எழுத வைத்து ஆனந்தம் காண்பது அரிய குணம். யாருக்கு வரும் அந்த மனது.

**- எஸ்.ராமகிருஷ்ணன்**

எப்போது போனாலும் வாசல் வரைக்கும் எழுந்து வந்து உற்சாகமாக வரவேற்கும் பண்புடையவர். நாற்காலியை கொடுத்து அமரச் சொல்லிவிட்டு பல்செட் எடுத்து அணிந்துகொண்டுதான் அடுத்த வார்த்தை பேசுவார். பேசவும், எழுதவும் அலுக்காத மனிதர்.

எங்கிருந்தோ அஞ்சலில் வரும் சிற்றிதழ்களை முழுமையாகப் படித்துவிட்டு, இரண்டு வரியாவது தட்டிக்கொடுத்து கடிதம் எழுதிவிடுவார். வயது காரணமாக கை நடுக்கம் வந்துவிட்ட போதிலும் நண்பர்களின் உதவியோடு கடிதம் எழுதிக்கொண்டே இருந்தார்.

"தி.க.சி.க்கு ரேஷன் கார்டை அனுப்பி வச்சாலும் விமர்சனம் எழுதிடுவாரு.." என்று எதிர் கருத்து சொல்வோரும் உண்டு. "இவ்வளவு சிரமப்பட்டு எழுதத்தான் வேண்டுமா..?" என்று கேட்டால், "ரோட்டுல நடந்துபோறோம். எதிர்ல வர்ற ஒருத்தர் வணக்கம் சொல்றார். மரியாதைக்குத் திருப்பி வணக்கம் சொல்லணுமா.. வேண்டாமா..? அவர் நண்பரா, விரோதியான்னு அப்புறமா பார்த்துக்கலாம்.." என்பார் சலனமில்லாமல்.

**- பாரதி தம்பி**

தி.க.சி. தாமரை இதழைப் படைப்புரீதியாக, கம்யூனிஸ்ட் தத்துவத்தில் அதிக அறிவில்லாததாலேயே- நன்றாக நடாத்தினார் என்று கருதுகிறேன். ஆனால் தி.க.சி. போன்ற ஒருவரும் நா.வானமாமலை போன்ற ஆழமான தத்துவ, வரலாற்று அறிவு கொண்ட ஒருவ[ர்] முரண்பாடில்லாமல் கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்தது எவ்வளவு பெரிய விஷயம்.

தி.க.சி.க்கு சாகித்திய அகடமி பரிசு கொடுத்தபோது தன்னடக்கமாக I am a field worker என்று தி.க.சி. சொன்னதாக சாகித்திய அகடமியின் அந்நாளைய செயலாளராக இருந்த மலையாளக் கவிஞரும் என் நண்பருமான சச்சிதானந்தன் தெரிவித்த போது தி.க.சி. அப்பரிசுக்கு எல்லாத் தகுதியும் பெற்றவர் என்றே நான் சச்சிதானந்தனிடம் கூறினேன். தமிழிலக்கியம் என்பது (உலக இலக்கியங்களில் வெகுசொற்பமாகக் காணப்படும்) பெரும்பாரம்பரியம் உள்ள ஓரிரு இலக்கியங்களில் ஒன்று. தி.க.சி., அந்தப் பெரும்பாரம்பரியம் உள்ள தமிழில் புதிதாய் ஓர் கம்யூனிஸ்ட் இலக்கியத்தைக் கொண்டுவரும் - ஒரு புது மரபைக் கொண்டுவரும் பெரும் பொறுப்பில் இருந்தவர்.

வண்ணநிலவன், வண்ணதாசன், பிரபஞ்சன் ஆகியோரின் ஆரம்பக்கட்ட எழுத்து, செயப்பிரகாசத்தின் "ஒரு ஜெருசலேம்" என்ற கதையில் வெளிப்படும் பண்பு, முதலியன தனியான ஒரு இலக்கிய மரபு என்று கருதுகிறேன்.

பிரசார மரபில் போய் மாட்டிக் கொண்டிருந்தால், திராவிட எழுத்துகள் போல் இலக்கியத் தோல்வி ஆகியிருக்கும். அண்ணாத்துரை அவர்களின் செவ்வாழை போல ஒரு தோல்வியான பரம்பரையை தி.க.சி. பொறுப்பில் வந்து கொண்டிருந்த சி.பி.ஐ என்ற கட்சியின் அதிகார பூர்வமான பத்திரிகை என்று கணிக்கப்பட்ட தாமரை உருவாக்காததே தி.க.சி.யின் மேதமையைக் காட்டுகிறது. நெல்லை ஆய்வுக்குழுவைச் சார்ந்தவர்கள் நினைத்ததுபோல் தி.க.சி. ஒரு அப்பாவியல்ல. இடதுசாரியிலக்கியம் எப்படி இருக்க வேண்டும் என்ற ஆழ்ந்த ஒரு மனஇயல்பு கொண்ட மேதை என்றே எனக்கு இன்று படுகிறது.

**- தமிழவன்**

இந்தப் படத்தில் உள்ள ரயில் வண்டி, ஒரு பயங்கரவாத தாக்குதலுக்கு இலக்காகியது. அந்தக் குண்டுவெடிப்பில், அப்பாவி பொது மக்களான, 50 ரயில் பயணிகள் கொல்லப்பட்டனர். 15 வருடங்களுக்கு முன்னர் நடந்த இந்தப் பயங்கரவாத தாக்குதலுக்கு, உலகிலேயே மிகப் பெரிய பயங்கரவாத இயக்கம் உரிமை கோரியது. அந்த இயக்கத்தின் பெயர்: நேட்டோ. அமெரிக்க- மேற்கு ஐரோப்பிய நாடுகளின் இராணுவங்கள், அந்த இயக்கத்தில் அங்கம் வகிக்கின்றன.




15 வருடங்களுக்கு முன்னர், இதே தினத்தில், செர்பியா, கொசோவோ மீது நேட்டோப் படைகளின் வான் தாக்குதல்கள் ஆரம்பமாகின. இராணுவ இலக்குகளை "மட்டுமே", குறி வைத்து தாக்கும் வல்லமை பெற்ற நவீன ஆயுதங்களை வைத்திருப்பதாக நேட்டோ கூறியது. ஆயினும், இது போன்று பல தடவைகள், பொது மக்களின் இலக்குகள் குறி வைத்து தாக்கப்பட்டன. சர்வதேச சட்டங்களின் பிரகாரம் அவை போர்க்குற்றங்களாக கருதப்படும்.

நேட்டோ தாக்குதலில் நூற்றுக் கணக்கான பொது மக்கள் கொல்லப்பட்ட நேரம், மேற்குலகில் யாரும் அதைப் பற்றிக் கவலைப்படவில்லை. ஏனென்றால், "ஜனநாயகக் காவலர்கள் மக்களைக் கொன்றால், அது பாவமில்லை. ஜனநாயகத்தை பாதுகாப்பதற்கான போரில் இது போன்று பல அப்பாவிகளும் பலியாகலாம். அவை எல்லாம் ஈடு செய்யக் கூடிய இழப்புகள். Sorry!"

**- கலையரசன்.தா**

# உடல்நிறை குறைப்பு ஒரு இலகுவான கலை 4


சி. சிவன்சுதன்
மருத்துவ நிபுணர்.
[நன்றி: Jaffna Diabetic Centre]

சுவை குன்றாமல் நிறை அதிகரிக்காமல் எவற்றை உண்ண முடியும் என்பதையும் சிறிய அளவு உட்கொண்டாலும் பெருமளவு நிறை அதிகரிப்பை ஏற்படுத்த வல்ல அதாவது கலோரி பெறுமானம் கூடிய உணவு வகைகள் எவை என்பதையும் நாம் அடையாளப்படுத்த வேண்டும். கலோரிப் பெறுமானம் கூடிய உணவுவகைகளை தவிர்த்து அவற்றிற்கு மாற்றீடாக எவற்றை உண்ணமுடியும் என்பது பற்றியும் சிந்திக்க வேண்டும்.

சீனி, சர்க்கரை, பனங்கட்டி அல்லது இவை சேர்த்து தயாரிக்கப்பட்ட உணவுகள் அல்லது பானங்கள் போன்றவற்றை சிறிதளவு உட்கொண்டாலும் பெரும் நிறை அதிகரிப்பு ஏற்படும் அபாயம் காணப்படுகின்றது. காரணம் இவற்றில் இருக்கும் கலோரி அடர்த்தி அதிகமாகும். எனவே இவற்றை தவிர்த்து விடுவது உங்கள் ஆரோக்கியம் நோக்கிய பயணத்தின் ஒரு முக்கிய படிக்கல்லாக அமையும்.

இனிப்பை தவிர்த்து எப்படி வாழ்வது? இனிப்பு இல்லாமலும் ஒரு வாழ்க்கையா இனிப்பு சுவை எனக்கு எப்பவும் வேண்டும் என்று கருதுபவர்கள் இருக்கிறார்கள் அதனைத் தவறான சிந்தனை என்று சொல்லிவிட முடியாது. எனவே இவர்கள் சீனி, சர்க்கரை, பனங்கட்டி என்பவற்றிற்குப் பதிலாக இனிப்பூட்டிகள் அல்லது சுவையூட்டிகளை பயன்படுத்தலாம். இவற்றின் சுவை சீனியை ஒத்ததாக இருக்கும் ஆனால் நிறை அதிகரிப்பு எதனையும் ஏற்படுத்தாது.

நீரிழிவு உள்ளவர்கள் பலர் இந்த இனிப்பூட்டிகளைப் பயன்படுத்தி வருகின்றனர். நீரிழிவு இல்லாதவர்களும் இதனைப் பயன்படுத்த முடியும். சீனி, சர்க்கரை, பனங்கட்டி போன்றவற்றுடன் ஒப்பிடும் போது இந்த இனிப்பூட்டிகள் பாதுகாப்பானவை மட்டுமல்ல நிறை அதிகரிப்பையும் ஏற்படுத்தமாட்டாது.



"LET'S EASE INTO THIS--I WANT YOU TO TRY FASTING BETWEEN MEALS."

போத்தல்களில் அடைக்கப்பட்டு விற்பனை செய்யப்படும் சோடா, பழரசவகைகள் போன்றவற்றில் சீனியின் செறிவு மிகவும் அதிகமாகும் இதனால் இவற்றிற்கு நிறை அதிகரிப்பை ஏற்படுத்தும் தன்மை அதிகமாகக் காணப்படுகின்றது.

எனவே இவற்றின் பாவனை தவிர்க்கப்பட வேண்டும். இவற்றிற்குப் பதிலாக இளநீர், சுவையூட்டி சேர்த்த தேசிக்காய் தண்ணீர், வீட்டில் தயாரித்த பழரசங்கள், தேநீர், கோப்பி, பால், போன்றவற்றை பயன்படுத்த முடியும்.

இதே போன்று எண்ணெய் அல்லது எண்ணெயில் பொரித்த உணவுவகைகளும், பட்டர், மாஜறீன் போன்றவையும் சிறிய அளவு உணவில் சேர்த்தாலும் அதிகளவு நிறை அதிகரிப்பை ஏற்படுத்த வல்லன. அதாவது இவற்றில் கலோரிச் செறிவு அதிகமாகும். நல்லெண்ணெய், சூரிய காந்தி எண்ணெய், ஒலிவ் எண்ணெய் போன்ற எண்ணெய் வகைகள் உட்பட எல்லா எண்ணெய் வகைகளும் நிறை அதிகரிப்பை ஏற்படுத்த வல்லன.

மிக்சர், வடை, ரோல்ஸ் ஏனைய பொரியல்வகைகள், தேங்காய் அதிகளவு சேர்த்த உணவுவகைகள், எண்ணெய் சேர்த்துச் செய்யும் உணவுவகைகள் போன்றவற்றில் எண்ணெயின் வீதம் அதிகமாக இருப்பதால் இவற்றில் சிறிதளவை உட்கொண்டால் கூட பெருமளவு நிறை அதிகரிப்பை ஏற்படுத்தும்.

எனவே பொரித்த உணவுவகைகளுக்குப் பதிலாக அவித்த அல்லது பேக் செய்யப்பட்ட அல்லது கிறில் / ரோஸ்ற் செய்யப்பட்ட உணவுகளை தெரிவுசெய்வது நல்லது. முற்றிய தேங்காய்களிலும் பார்க்க முட்டுக்காய் தேங்காய்களில் கலோரிப்பெறுமானம் குறைவு. எனவே முட்டுக்காய் தேங்காய்களை அளவுடன் சேர்க்க முடியும். வாசனைத்திரவியங்கள், தூள், மல்லி, வெந்தயம் உள்ளி போன்றன நிறை அதிகரிப்பை ஏற்படுத்தமாட்டா எனவே இவற்றை சமையலில் போதுமான அளவு சேர்த்துக்கொள்ள முடியும்.

(தொடரும்)



# இலக்கியத்தில் தொழில்சார் அனுபவம்

உலகத்தின் சகல மக்களது எழுத்து வடிவம் தொடங்கி 5000 வருடங்கள் மட்டுமே என அறிந்தபோது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. எந்த சமூகத்தினர் முதல் எழுதினார்கள் என்பது பெரிய புதிர்.

குறியீட்டு வடிவங்கள்தான் ஆரம்பத்திலே இருந்திருக்கும் என்பது பலரது எண்ணம்.

நமது மொழியில் எழுத்துவடிவத்திற்கு குறைந்தது 2500 வருட வரலாறு இருப்பதாக சொல்லப்படுகிறது.

சமஸ்கிருதம் இலத்தீன் போன்ற மொழிகள் மதத்தின் மொழிகளாக இருந்தது. மதகுருமார் தங்களது சொத்தாக வைத்து காத்தனர். இலத்தீனில் இருந்த பைபிளை ஆங்கிலத்திற்கு மாற்றுவதற்கு மிகப்பெரிய எதிர்ப்பு வத்திகானில் இருந்தது. இங்கிலாந்து மனனர் அதை மொழிமாற்றம் செய்ததால் அது சாத்தியமாகியது.

இதேபோல் சமஸ்கிருத மொழியை பிராமணர்கள் மட்டும் பாவிப்பதால் இப்பொழுது சில சுலோகங்களை சொல்வதுடன் முடிந்து விட்டது. மற்றைய எவருக்கும் அக்கறை இல்லை. எனக்குத் தெரிந்த வரையில் சமஸ்கிருதம் மிகவும் செழிப்பானதும் பல பேரிலக்கியங்களைக் கொண்டதுமானது தற்போது இறந்துபோன மொழியாக கருதப்படுகிறது.

சமஸ்கிருதத்தைப்போல் தமிழையும் இந்திய அரசாங்கம் மட்டும் செம்மொழியாக அங்கீகரித்துள்ளது. இது பலருக்கு சந்தோசம் கொடுத்தது. ஆனால் எனக்கு பயத்தைக் கொடுக்கிறது.

இப்படியான அங்கீகாரம் கலியாணவீட்டிற்கு மட்டும் பாவிக்கும் பெரிய பாத்திரம் போன்றது மற்றப்படி நாளாந்த பாவிப்பிற்கு உதவாது.

இப்படியான பேரபாயம் சாமானிய மக்களால் பேசப்படாத மொழிக்கு வரலாம். முக்கியமாக தமிழில் படித்து வளர்ந்த புலம் பெயர்ந்த எங்கள் பலருக்கு ஒரு பந்தி தமிழில் எழுதமுடியாத நிலை உள்ளது.

இது ஏன்?

நாங்கள் எழுதினால் கம்பன்மாதிரி காவியமோ அல்லது புதுமைப்பித்தன்போல் சிறு-கதையோ எழுதவேண்டும் அல்லாவிடில் எழுத தயங்குகிறோம்.

இந்த தயக்கமே நமது மொழிக்கு நட்டத்தைத் தருகிறது.

நான் நினைக்கிறேன் சாதாரணமானவர்கள் தங்களது சாதாரணமான விடயங்களை எழுதும்போதுதான் தமிழை இலக்கியவாதிகள் என்ற மதகுருமாரிடம் இருந்து சிறை மீட்கமுடியும்.

நாம் பார்த்த படத்தையோ இல்லை நாம் சென்று வந்த நாட்டில் பார்த்த விடயத்தையோ எழுதும் போது எங்கள் கைகளில் மெதுவாக சரஸ்வதி தவழுகிறாள்.

ஐரோப்பிய ஓவியமொன்றில் மத்தியு வேதாகமத்தை எழுதும்போது படிப்பறிவில்லாத மத்தியுவின் கையை ஏஞ்ஜல் ஒன்று கைபிடித்து எழுதுவதாக அமைந்திருந்தது. மத்தியு அந்த சித்திரத்தில் முரட்டுத்தனமான கால்களும் கைகளும் கொணட விவசாயியாக வரையப்பட்டுள்ளது. காளிதாசன் புலமை பெற்றது போன்ற கற்பனை. அற்புதமான கற்பனை.

எனது சொந்த கதைக்கு வருகிறேன்.

நான் அவுஸ்ரேலியாவில் முதல் எழுதிய கட்டுரை ஆசிரியராக இருந்த எனது நண்பரால் கிழித்துப் போடப்பட்டது.

இரண்டாவது கட்டுரையை எழுதியபோது முருகபூபதியிடம் கொடுத்து திருப்பி எழுது என சொல்லப்பட்டது. இவ்வளவிற்கும் பத்திரிகையை பொறுப்பாக நடத்தியது நான்.

இந்த நிலையில் இருந்த நான் மூன்று நாவல்களையும் மற்றும் இரு புத்தகங்களையும் எழுதிவிட்டேன்.

நான் ஒரு மிருக வைத்தியர் எனது அனுபவங்களை எழுதுகிறேன்.

எனக்கு மட்டுமா அனுபவங்கள் நிகழ்கிறது?

பலர் தங்கள் அனுபவங்களை எழுதும்போது அவை மற்றவர்களுக்கு தெரிகிறது- அடுத்த சந்ததிக்கு செல்கிறது.

நம்மில் எத்தனையோ பேர்கள் பல விதமான தொழில்களில் இருக்கிறோம். பல விடயங்களை சந்திக்கிறோம். இப்பொழுது உள்ள கணனி யுகத்தில் முகநூல் இணையம் என பாவித்து நம்மால் எழுதமுடியும். எழுத வேண்டும்.

- நடேசன் -

# லேடி எம்.ஜி.ஆர்!

அவர் (பி. பானுமதி) ஒரு சகலகலாவல்லியாகத் திகழ்ந்தார். ஸ்டுடியோ நிர்வாகம், தயாரிப்பு, கதை, திரைக்கதை, வசனம், பாடல், இசையமைப்பு, இயக்கம் இவற்றுடன் கூடவே கைரேகை, ஜோசியக் கலைகளையும் கற்று வைத்திருந்தார். எனது கையையும் ஜாதகத்தையும் ஒப்பிட்டுப்பார்த்து அவர் கணித்துக் கூறியவை சரியாகவே அமைந்தன.

வாரந்தோறும் திங்கட்கிழமை அன்று காலையில் ஆறு மணியிலிருந்து மாலை 6 மணி வரை மௌன விரதம் அனுஷ்டிப்பார். அப்போது கையில் துண்டு துண்டுக் காகிதங்களும் பேனாவும் வைத்துக் கொண்டு அவர் சொல்ல வேண்டியதை அலுப்பின்றி எழுதி எழுதிக் காட்டுவார்!

தன்னைப் புரிந்து கொள்ளாதவர்களுக்குப் புலியாகவும், புரிந்து கொண்டவர்களுக்கு கலைமானாகவும் அவர் காட்சி அளிப்பார். காரணத்தோடு கர்வமும், அர்த்தத்துடன் அகம்பாவமும் கொண்ட ஓர் அரிய பெண்மணி அவர்.

எழிலான தோற்றப் பொலிவும், இனிமையான குரல் வளமும், எடுப்பான நடிப்புத் திறனும் ஒருங்கே அமையப்பெற்ற அவரைப் போன்ற ஓர் அரிவையைக் காண்பது அரிது.

அந்நாட்களில் பானுமதியைப் பற்றி ஒரு கட்டுரை எழுதித் தருமாறு "பொம்மை" சினிமாப் பத்திரிகை என்னைக் கேட்டது. "பருவ நட்சத்திரங்களின் நடுவில் ஒரு துருவ நட்சத்திரம்" எனத் தலைப்பிட்டு அவரைப் பற்றி நான் எழுதிய கட்டுரையில் பானுமதி ஒரு லேடி எம்.ஜி.ஆர். எனக் குறிப்பிட்டிருந்தேன். அதைப் படித்துவிட்டு அவர் நீண்டநேரம் சத்தம் போட்டுச் சிரித்தார். அப்படி நான் எழுதியதில் உண்மை இருந்தது. ஆம். எம். ஜி.ஆரிடம் குடிகொண்டிருந்த சில குணாதிசயங்கள் பானுமதியிடமும் அமையப் பெற்றிருந்தன.



பேசும்படத் தொடக்கக் காலத்தில் தோன்றிய வி.ஏ.செல்லப்பா டி.பி. ராஜலட்சுமி ஜோடிக்குப் பிறகு எம்.ஜி.ஆர். பானுமதி ஜோடிதான் ரசிகர்களிடம் புகழ் பெற்றிருந்தது.

நாடோடி மன்னன் கதை விஷயத்தில் பானுமதிக்குக் கருத்து வேறுபாடு ஏற்பட்டு, அவர் ஏற்று நடித்த அந்தப் பாத்திரம் சாகடிக்கப்பட்டு, அதற்குப் பதிலாக வேறு ஒரு புது வேடத்தில் சரோஜாதேவியை எம்.ஜி.ஆர். நடிக்கச் செய்தார். எந்த எம்.ஜி.ஆர். இதைச் செய்தா்ரோ, அவர் தமிழகத்தின் முதலமைச்சர் ஆனதும், பானுமதியை அழைத்து அரசு இசைக்கல்லூரியின் பேராசிரியை பதவியைத் தந்து அவரைப் பெருமைப்படுத்தினார்!

பானுமதியும் கடந்த கால கசப்பை மறந்துவிட்டு நிகழ்காலத்தின் இனிப்பை ஏற்றுக்கொண்டார்.

('நானும் நாற்பது திரைப்பட இயக்குநர்களும்' நூலில் ஆரூர்தாஸ்)

## மாற்றம் வேண்டும் இது மக்கள் முரசு

# தேசிய கல்வி நிறுவகம் இதற்கு தீர்வு தர வேண்டும் (N.I.E)

முதுகல்விமானி (M.Ed) பட்டக் கற்கை நெறியினை இலங்கையில் பல்வேறு நிறுவனங்கள் மேற்கொண்டு வருகினறன. உதாரணமாக பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுவின் கீழுள்ள பல்கலைக்கழகங்கள் மற்றும் வெளிவாரி பல்கலைக்கழகங்கள், திறந்த பல்கலைக்கழகங்கள் மற்றும் தேசிய கல்வி நிறுவகங்கள் (N.I.E) எனப் பல நிறுவனங்கள் முன்னெடுத்து வருகின்றன.

இதில் கற்கை நெறிகள் ஒன்று அனுமதிக்கப்பட்டுள்ளது. இதேவேளை தேசியகல்வி நிறுவனத்தில் (N.I.E) இக் கற்கை நெறியினை மேற்கொள்பவர்களுக்கு இவ் ஒரு வருட கற்கை விடுமுறைக்கு அனுமதிக்கப்பதில்லை. ஒரே கற்கை நெறியாகவும், ஒரே தராதரமாக இருப்பினும் நிறுவன வேறுபாடு காரணமாக ஏன் இந்தப் பாகுபாடு? தேசிய கல்வி நிறுவனம் இதனைக் கருத்திற்கொண்டு தனது மாணவர்களுக்கும் இந்த வசதிகளைப் பெற்றுக் கொடுக்கவேண்டும்.

இது ஒருபுறம் இருக்க தற்போது தேசிய கல்வி நிறுவனத்தால் முன்னெடுக்கப்படும் கல்விமானி பட்டக் கற்கைநெறி பட்டதாரி பட்டப்பின் கல்வி டிப்ளோமாதாரியின் தரங்களுக்கு மேம்படுத்தப்பட்டாலும் பல் கலைக்கழக ரீதியாக கோரப்படும் முதுகல்விமானிக்கு கல்விமானி பட்டதாரிகளை உள்வாங்குவது விகிதாசார அளவில் புறக்கணிக்கப்படுகின்றது. ஆகையினால் தேசிய கல்வி நிறுவகத்தின் முதுகல்விமானித் தெரிவின் பிறபட்ட தாரிகளை உள்வாங்க வேண்டும்.



பட்டு இருப்பினும் கற்பிக்கும் பட்டமளிக்கும் நிறுவனங்கள் வேறுபடுவதால் மாணவர்கள் வேறுபட்டவசதி வாய்ப்புகளைப் பெறுகின்ற இடர்நிலை தலை தூக்கியுள்ளது. இது பெரும் குறைபாடுகளாக கற்கையாளர்களால் முன் வைக்கப்பட்டுளளது.

அதாவது யாழ். பல்கலைக்கழகம் உட்பட அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் இக் கற்கை நெறியினை மேற்கொள்பவர்களுக்கு ஒரு வருட கற்கை விடுமுறை வழங்கப்படுகின்றது. இருப்பினும் சனி, ஞாயிறு தினங்கள் மாத்திரமே வகுப்புகள் இடம்பெறுகின்றன.

கல்விச் சுமையினை கருத்தில் கொண்டு இவ் ஒரு வருட விடுமுறை

கல்விமானி பட்டத்துறையினருக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் தற்போது விகிதாசார அடிப்படையில் முன்னுரிமை வழங்கினாலும் கூடதொடர்ந்து வரும் காலங்களில் கல்வி மானிப்பட்டத் துறையினர் அனைவரையும் உள் வாங்கிய பினபே தனது மாணவர்களுக்கு இவர்கள் முன்னுரிமை வழங்காத விடத்து யாரிடம் அந்த மாணவர்கள் செல்வது என்பதும் நியாய பூர்வமான கோரிக்கையே இதனை எதிர்வரும் காலங்களில் தேசிய கல்வி நிறுவனம் கருத்தில் எடுத்து செயற்படவேண்டும்.

# முகவரிகளுடன் மாத்திரம் முடிவுறும் இணையத்தளங்கள்

பெயரளவில் இணையத்தளங்களைத் திறந்து தலைமையதிகாரிகளின் படங்களுடன் மாத்திரம் சில இணையத்தலங்கள் வலம் வருகின்றன. ஒரு நிர்வாக அலகினது விபரங்களை உடனுக்குடன் அறிவதற்கு இணையத்தளங்களுக்கு சென்று பக்கங்களைத் திறந்து பார்க்கும் போது வெற்றிடங்களாகவே பல பகுதிகள் அறிக்கைப்படுத்தல்கள் இன்றி இருக்கின்றன. பாடசாலை இணையத்தளங்களிலிருந்து வலய மட்ட இணையத் தளங்கள் வரை இந்த நிலையே காணப்படுகின்றன. நாளாந்த அறிக்கைப்படுத்தலின்றி பெயருக்கும் புகழுக்கும் திறந்து வைக்கப்படுகின்ற இணையத் தளங்களாகவே காணப்படுகின்றது இணையத்தளங்களைத் திறக்கும் போது நாளாந்த அறிக்கைப்படுத்தல்களுக்கு தயாராக இருந்தால் மாத்திரமே இணையத்தளங்களை திறக்க வேண்டும். சில கல்வி வலயங்கள் உட்பட்ட சில நிர்வாகங்கள் அவ்வப் போது இணையத்தளங்களினூடாக சீராக தகவல்களை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள் உதாரணமாக வடமராட்சி கல்விவலயம், துணுக்காய் கல்வி வலயம் போன்றவை போற்றுதலுக்குரிய முறையில் இதனை பேணிவருகின்றன. உலகம் சுருங்கி விரைவாக தகவல்களை அறிய வேண்டிய தற்கால யுகத்தில் பொது நிறுவனங்கள் தமது தகவல்களை நாளாந்தம் அறிக்கைப் படுத்த வேண்டியது கட்டடாய தேவையாகும். வெறுமனையே நிறுவனத் தலைவர்களின் படங்களைப் போடுவதற்கு மாத்திரம் அர்த்தமற்ற முறையில் இணைய



முகவரிக்குச் சென்றால் 2012 - 2011 தகவல்களோடு மாத்திரம் இன்றும் அந்த இணையத்தளங்கள் இருப்பது அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது இதற்குப் பல காரணங்கள் உண்டு இணையத்தளங்களில் புதிய தகவல்க்ளைச் செப்பனிடும் தொழில் நுட்ப வள ஆளணியினர் நிறுவனங்களில் இல்லாமல் இருப்பதும் ஒரு துருவக் காரணமாக இருக்கின்றது. மறுதுருவத்தில் அசண்டையீனமும் ஒரு காரணமாகவே அமைகின்றது. குறிப்பாக குடாநாட்டுத் தகவல்கள் உட்பட வடமாகாண தகவல்களே இவ்வாறு குறைவாக இருக்கின்றன.

ஏனைய பிரதேச இணையத்தளங்கள் தமது தகவல்களை இற்றைப் படுத்தி செம்மையாகப் பேணிவருகின்றன. முடியாவிட்டால் இணையத்தளங்களை மூடிவிடுங்கள் முடியும் என்றால் தகவல்களை இற்றைப்படுத்துங்கள். கேலிக்கிடமான பிரதேசமாக எமது பிரதேசம் மாற இது வாய்ப்பளிக்கும் என்பதோடு தகவல் பரிமாற்றங்களும் தடைப்படுவது பாரிய குறைபாடாக உருப்பெறும்.




## 27.03.2014 வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் தினமுரசு அலுவலகத்தில் இடம்பெற்ற புதிர் மற்றும் கல்விமுரசு வெற்றியாளர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வும், பரிசில் பெற்றவர்களின் விபரமும்

(உங்கள் வெற்றிக்கு தொடர்ந்து முயற்சியுங்கள்
3 மாதங்களுக்கு ஒருமுறை
வெற்றியாளர்களுக்கு பரிசில்கள் உண்டு)


























அதிக புள்ளிகளைப் பெற்ற திறமைசாலிகள் ஐவருக்கு
பெறுமதியான பரிசில்கள் காத்திருக்கின்றன.
உங்களுக்கான பரிசில்கள் விபரம் பத்திரிகையில் வெளியாகும்.
மூன்று மாத இறுதியில் தினமுரசு காரியாலயத்தில் வைத்து
வழங்கிக் கௌரவிக்கப்படும்.




வெற்றியாளர்களுக்கு வழங்கப்பட்ட நினைவுச் சின்னங்கள் இவை

# விழுமியங்களை பேணுவதற்கு வழிகாட்டிகளாக மாறவேண்டும்

## சுவாமி இராஜேந்திரஜி தெரிவிப்பு

இந்துக்களுக்குரிய பாரம்பரிய பண்பாடுகள், விழுமியங்களை பேணிப்பாதுகாத்து அதனை எதிர்கால சந்ததியினரும் பின்பற்றுவதற்கு இந்து சமயத்தை சார்ந்தவர்கள் வழிகாட்டிகளாக திகழ வேண்டும் என தென்னிந்தியாவிலுள்ள இந்து ஸ்வயம் சேவா சங்கத்தின் சமயப்பிரசார சுவாமிகளான இராஜேந்திரஜி சுவாமிகள் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு வருகைதந்த சுவாமி அண்மையில் மருதனார்மடம் ஆஞ்சநேயர் அறநெறிப் பாடசாலை மண்டபத்தில் நடாத்திய அருளுரையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்காலத்தில் இந்துக்கள் தங்கள் சமயம் பற்றிய தெளிவின்றி சமய உணர்வின்றி சமய ஐக்கியமின்றி வாழ்கின்றனர். இந்நிலை மாற வேண்டும் இந்துசமயம் பற்றிய சரியான வழிகாட்டல் வழங்கப்படவேண்டும். அதன் மூலமே இந்துக்கள் இந்துவாக வாழும் நிலை உருவாகும்.

அந்தவகையில் இந்து ஸ்வயசேவா சங்கம் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது. குறிப்பாக இலங்கையில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சமூக பொருளாதார உதவிகளை வழங்கி வருகிறது. உயர்கல்விக்கான உதவிகளையும் வழங்கிவருகிறது.

மேலும் எமது சங்கம் பல்வேறு சமூக நலத் திட்டங்களினூடாக உலகளாவிய ரீதியில் இந்துக்களை ஐக்கியப்படுத்த பல்வேறு பணிகளையும் ஆற்றிவருகிறது. மேலும் எமது சங்கத்தின் இத்தகைய பணிகள் தொடர்ச்சியாக இடம்பெறும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (06)

# ஊடகவியலாளரை தாக்கிய மூவர் மீது வழக்கு பதிவு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கரைச்சி பொதுச சந்தையில் செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளரை தாக்கிய கரைச்சி பிரதேச சபையின் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் பொன்னம்பலநாதனின் மகன் உள்ளிட்ட மூவரும் கிளிநொச்சி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

சக்தி தொலைக்காட்சியின் கிளிநொச்சி செய்தியாளர் கடந்த புதன்கிழமை சந்தையில் செய்தி சேகரிக்கச் சென்ற வேளை கரைச்சி பிரதேசசபை ஊழியர்கள் மூவரால் தாக்கப்பட்டு அவரது வீடியோ கருவியும் சேதமாக்கப்பட்டது தொடர்பில் குறித்த செய்தியாளர் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து கிளிநொச்சி பொலிஸார் கடந்த புதன்கிழமை இரவு திருவையாறு பிரதேசத்தில் வைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கரைச்சி பிரதேச சபை உறுப்பினரான பொனம்பலநாதனின் (துரை) மகன் பொன்னம்பலநாதன் ரஜிஸ்குமார் கைது செய்யப்பட்டார்.

தொடர்ந்து நேற்று முன்தினம் ஏனைய இருவருமான செல்வானநதன் அசந்தன், பொன்னமபலம் இராஜசிங்கம் ஆகியோர் கைது செய்யப்பட்டனர். இவர்கள் மூவரும் நேற்று முன்தினம் பிற்பகல் 2.00 மணிக்கு கிளிநொச்சி பொலிஸ் நிலையத்திலிருந்து அழைத்துச் செல்லப்பட்டு கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் நீதிவான் வஹாப்தீன் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட் குறித்த மூவருக்கும் தலா 75 ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் நீதிமன்றினால் விடுதலை செய்யப் பட்டுள்ளதோடு வழக்கு எதிர்வரும் யூலை மாதம 7 ஆம் திகதி ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (29)

# சுற்று வட்ட வீதியை புனரமைக்க கோரிக்கை

(சண்டிலிப்பாய்)

பண்டத்தரிப்பு சில்லாலை கதிரை மாதா ஆலய சுற்று வட்ட வீதி நீண்டகாலமாக திருத்தப்படாது குன்றும் குழியுமாக காணப்படுகிறது. பண்டத்தரிப்பு மாதகலை இணைக்கும் சுமார் இரண்டு கிலோமீற்றர் நீளமான இந்த வீதி ஊடாக மக்கள் போக்குவரத்து செய்வதில் பெரிதும் கிரமங்களை எதிர் கொள்ளவேண்டிய நிலைகாணப்படுகிறது.

இந்த வீதி ஊடாக மாதகல், சாந்தை, சில்லாலை தெற்குப் போன்ற பிரதேச மக்களும் மேற்படி பிரதேசங்களுக்கு செல்பவர்களும் சென்று வருகின்றனர். அது மட்டுமன்றி 787 இலக்க மாதகல் தனியார் பேருந்தும் இந்த வழியூடாக சென்று வருகின்றது. இந்த வீதியில் காணப்படும் பாரிய குழிகளை காரணம் காட்டி 787 இலக்க பேருந்தின் சாரதிகள் சிலர் இவ்வீதியூடாக வர தயங்குகின்றனர்.

இதனால் இவ்வீதிகளில் பேருந்துக்காக காத்திருக்கின்றவர்கள் நீண்ட தூரம் பயணம் செய்து பண்டத்தரிப்பு சந்திக்குச் சென்றே பேருந்தில் ஏறுகின்றனர். எனவே இந்த வீதியை புனரமைப்பு செய்து மக்களின் சீரான போக்குவரத்துக்கு சம்பந்தபட்டவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என பிரதேச வாசிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (54)

# யாழ். இந்திய தூதரகத்தில் ஹோலி பண்டிகை நிகழ்வு




யாழ். இந்திய துணைத்தூதரகத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை 'வண்ணங்களின் பண்டிகை' எனப்படும் ஹோலிப் பண்டிகை சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. ஹோலிப் பண்டிகை மார்ச் மாதம் குளிர்கால முடிவில் இந்தியாவில் கொண்டாடப்படுகிறது. இது இந்துக்களின் பண்டிகையாக வட இந்தியா முழுவதும் கொண்டாடப்படுகிறது. குளிர்கால இறுதியில் வசந்தகாலத்திற்கு கட்டியம் கூறுவது போல் வாழ்க்கையின் மீளுருவாகத்தை குறிப்பதாக நிகழ்த்தப்படுகிறது.

மன்னிப்பதன் மூலம் அனைவரும் சந்தோசப்படும் ஓர் பண்டிகையாக இதுகொண்டாடப்படுகிறது. மக்கள் ஒருவருக்கொருவர் வண்ணப்பொடிகளை தூவி மகிழ்ச்சிப்படுத்துவர். பாடலும், நடனமும் இப்பண்டிகையை மேலும் சிறப்பாக்கும்.

இப்பண்டிகை பகவான் ஸ்ரீகிருஷ்ணனின் பிறப்பிடமாகிய பிரஜ பூமியின் சிறியநகரமாகிய மதுராவில் வெகுசிறப்பாக கொண்டாடப்படும். இப்பண்டிகையின் முதல்நாள் இரவு அக்னியின்முன் பிரார்த்தனை செய்வார்கள். இப்பண்டிகையின் போது பொதுவான வாழ்த்து 'ஹப்பி ஹோலி' ஆகும். யாழ். இந்திய துணைத்தூதரகத்தில் முதல்முறையாக இந்திய அதிகாரிகள், அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் தூதரக பணியாளர்கள் அனைவரும் இணைந்து இப்பண்டிகையை கொண்டாடினார்கள். முதலில் ஒவ்வொருவரின் நெற்றியிலும் பாரம்பரிய முறையின்படி வண்ணங்களை பூசி பின்பு வண்ணப் பொடிகளை ஒருவருக்கொருவர் மீது தூவி கொண்டாடப்பட்டது. யாழ். இந்திய துணைத்தூதரகத்தின் 'இந்தியா கோர்னர்' இல் கற்கும் இலங்கை மாணவர்களும் இப்பண்டிகையில் பங்கு பற்றியிருந்தனர்.

# வாரம் ஒரு காரம்

## இந்தப் பனிப்போரில் எந்தப் பக்கம் தமிழ் மக்கள்?



ஜெனிவா வாக்கெடுப்பில் தோல்வியடைந்தால் எமக்கு பிரச்சினையில்லை தமிழ் மக்களாகிய உங்களுக்கே அதுபாதகம் – ஜனாதிபதி

சர்வதேச ரீதியில் பெரும் பனிப்போர் தற்போது மூண்டுள்ளது. யாரை யார் தோற்கடிப்பது? யாரை யார் நம்புவது?... யாரிற்கு எதிராக சர்வதேச விசாரணை? யாரிற்கு இது சாதகமானது என்பது தொடர்பாக எதுவுமே விளங்காத ஓர் சூக்கும நிலை தற்போது தலைதூக்கியுள்ளது.

உண்மை ஏதோ இருக்க தமிழ் மக்களாகிய நாம் ஏதேதோ கற்பனை செய்கின்றோம். அரச எதிர்ப்பு எனும் ஆக்ரோசம் எமை ஆக்கிரமித்து இருப்பதனால் அரசை எதிர்க்கும் பிரேரணை நடைமுறைக்கு வரும் போது எக்காளமிடுகின்றோம்.

ஆனால் உண்மை அதுவல்ல இந்த அரசினை கவிழ்க்க வேண்டும் என்கின்ற அமெரிக்காவின் ஆத்திரம் பலிக்குமேயானால் அது தமிழ்மக்களிற்குப் பாதகமான அம்சமே தவிர சாதகமல்ல. இதை ஒவ்வொருவரும் தெளிவாகப் புரிந்து கொள்ளவேண்டும்.

இந்த மாகாணசபை முறைக்கான வசதி வாய்ப்புக்களை உருவாக்கி இருக்கும் இந்த அரசிடமிருந்தே தமிழ் மக்களின் மாகாணசபை அதிகாரங்களைப் பெற்றெடுப்பது பல வழிகளில் சுலபமானது. இந்த அரசாங்கம் முறிந்து வேறோர் அரசாங்கம் சிங்கள இனவாதத்தில் இருந்து தலை தூக்கும் போது அரைகுறையில் இருக்கும் மாகாணசபை முறைமையே மீண்டும் நீத்துப்போக சந்தர்ப்பமுண்டு.

இது ஒருபுறமிருக்க இன்று தமிழ் மக்களின் அழிவுக்கும் விடுதலைப் புலிகளின் அழிவுக்கும் காரணமாக இருந்த அமெரிக்கா தற்போது மகிந்த அரசைக் கவிழ்க்க வேண்டுமென ஏன் முனைப்புப் பெறுகின்றதென்று யாராவது ஆழமாக சிந்தித்தோமா? சிந்தித்தால் அமெரிக்காவின் நிலைப்பாடு தெளிவாகப் புரியும்.

அன்று விடுதலைப்புலிகள் தமக்கு அச்சுறுத்தலாக இருப்பார்களோ என்று பயந்த அமெரிக்கா தம்மை எவரும் மிஞ்சக்கூடாது எனும் அடிப்படையில் இலங்கையரசின் எதிர்ப்பைப் பயன்படுத்தி விடுதலைப்புலிகளை அழிக்க இலங்கையரசுடன் இணைந்து செயற்பட்டது. பயங்கரவாத அழிப்பு என்கின்ற பெயரில் இடம் பெற்ற அப்பாவித் தமிழ்மக்களின் அழிவிற்கு அன்று காரணமாக இருந்த அமெரிக்கா இன்று அப்பாவித் தமிழ்மக்களின் அபிவிருத்திக்கு வேறு துருவத்தில் தடை போடுகின்றது. புரியவில்லையா?

மகிந்த அரசின் மீது அமெரிக்கா கொண்டுள்ள ஆத்திரத்தின் அர்த்தம் இந்து சமுத்திர பிராந்திய எல்லைக்குள் சீனாவின் தலையீட்டுக்கு இலங்கையரசு தலையாட்டிமையே ஆகும். தற்போது அபிவிருத்தியென்கின்ற பெயரில் சீனா இலங்கையில் பல திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. இதில் பல வடபகுதி தமிழ் மக்களிற்கும் உரித்துடையது. உதாரணமாக நெடுஞ்சாலை புனரமைப்பு இதைவிட பல அபிவிருத்திகள் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இவற்றையெல்லாம் மனித உரிமை மீறல் என்கின்ற பெயரில் அமெரிக்கா உலைவைக்கப் போகின்றது. இதனால் பாதிக்கப்படப் போவது இலங்கையரசு மட்டுமல்ல அப்பாவித்தமிழ் மக்களும் தான். அழிவிற்கு அன்று காரணமாக இருந்த அமெரிக்கா அபிவிருத்திக்கு இன்று தடை போடுகின்றது.


இது மாத்திரமல்ல, காலத்திற்குக் காலம் வந்த ஆட்சிமாற்றங்களால் தான் தமிழர் அரசியல் தடம்புரண்டது. தற்போதும் இந்நிலை தலைதூக்கப் போகின்றது.

இத்தனையின் மத்தியில் இனவாத எதிர்ப்பு சிந்தனைகளை சுமந்த நாம் ஏதோ மீண்டும் எமக்கு வெற்றி வந்து விட்டது என கொட்டமடிக்கின்றோம். இன்று தேர்தல் வெற்றிக்கும் பின் பிறந்தது. தனித்த தமிழ் அரசு என்றோம். இன்று வரை அதில் நடந்தது என்ன?... மீண்டும் வெற்றி என்கின்றோம் பொறுத்திருந்து பாருங்கள் நடப்பது என்னவென...

– **வெண்கட்டியன்.**

# வடக்கு, கிழக்கில் இடைக்கால நிர்வாகம் ஐ.நாவுடன் இணைந்து சிலர் முயற்சி

## என்கிறார் விமல் வீரவன்ச



வடக்கு மற்றும் கிழக்கு மாணங்களில் ஐக்கிய நாடுகளின் தலைமையில் இடைக்கால நிர்வாகம் ஒன்றை ஏற்படுத்த சில தரப்பினர் முயற்சிப்பதாக தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், அமைச்சருமான விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மனித உரிமைகள் ஆணையாளர் வீசிய பந்துகளுக்கு அமைச்சர் ரவுப் ஹக்கீம் சிறந்த ஓட்டங்களைப் பெற்றுள்ளார்.

இதற்கிடையில் சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவும் அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றுடன் இணைந்து, சமயப் பிரச்சினையை எழுப்பியுள்ளார்.

இந்த விடயங்களே ஜெனிவா மாநாட்டில் இலங்கைக்கு எதிரான நிலைப்பாடு அதிகரிக்கச் செய்தது.

இதேவேளை எதிர்காலத்தில் தமக்கு சாதகமான சமயம் ஒன்றை பார்த்து, அமைச்சர் ரவுப் ஹக்கீம் அரசாங்கத்தில் இருந்து விலகி, தமிழ்த்தேசிய கூட்டமைப்புடன் இணைவார்.

ஏற்கனவே தமிழ்த்தேசிய கூட்டமைப்பு மேற்குலக நாடுகளின் ஆதரவை பெற்று, இலங்கைக்கு எதிரான நிலைப்பாட்டை வலியுறுத்தி வருகிறது.

இந்த நிலையில் அமைச்சர் ஹக்கீமும், தமிழ்த்தேசிய கூட்டமைப்பும் இணைந்து, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்துமாறு ஐக்கிய நாடுகளிடம் கோரிக்கை விடுப்பார்கள்.

அதன்அடிப்படையில் அங்கு இடைக்கால நிர்வாகம் ஏற்படுத்தப்படும் என்று அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

# குறைபாட்டுடன் பிறக்கும் குழந்தைகளை முகாமைசெய்வது தொடர்பில் கருத்தரங்கு

வவுனியா பொது வைத்தியசாலையில் முகங்களில் குறைபாடுகளுடன் பிறக்கும் குழந்தைகளை முகாமை செய்வது தொடர்பான கருத்தரங்கு.

உதட்டுப்பிளவு, அண்ணப்பிளவு மற்றும் முகங்களில் குறைபாடுகளுடன் பிறக்கும் குழந்தைகளை முகாமை செய்வது தொடர்பான கருததரங்கு வவுனியா பொது வைத்தியசாலையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. வட பிராந்திய உதட்டுப்பிளவு, அண்ணப் பிளவு மற்றும் முக குறைபாடுகளை சீரமைக்கும் நிலையத்தால் ஏற்பாடு செயயப்பட்ட இக்கருத்தரங்கில் வட மாகாண மருத்துவ மாதுக்கள், சுகாதார வைத்திய அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

இதன்போது உதட்டுப்பிளவு, அண்ணப் பிளவுகளுடன் குழந்தைகள் பிறப்பதற் கான காரணங்கள், அதனை தடுப்பதற்கான வழிமுறைகள், அவ்வாறான குறைபாடுகளுடன் பிறக்கும் குழந்தைகளுக்கு சிகிச்சை வழங்குவதற்கு உள்ள ஏற்பாடுகள் தொடர்பில் சிரேஷ்ட வைத்திய நிபுணர்கள் விளக்கமளித்தனர்.

இலங்கையில் வருடந்தோறும் பிறக்கும் 600 குழந்தைகளில் ஒரு குழந்தை என்ற விகிதத்தில் இவ்வாறான நிலைக்கு முகம் கொடுத்துள்ளதாக இக்கருத்தரங்கில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடமாகாண சிகிச்சை நிலையத்தின் சத்திர சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி ரஞ்சன் மல்லவராச்சி தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் வட மாகாண சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி ப.சத்தியலிங்கம், பேராதனை பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ஏ.டி.அமரதுங்க, வைத்திய கலாநிதி பராக்கிரம விஜயகோன், வவுனியா வைத்திசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்திய கலாநிதி கு.அகிலேந்திரன், முன்னாள் வவுனியா வைத்திய சாலை அத்தியட்சகர் எம்.சத்தியமூர்த்தி, உளநல மருத்துவர் வைத்திய கலாநிதி எஸ்.சிவதாஸ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.


## சர்வதேச விசாரணை தேவையில்லை

### என்கிறது ரஷ்யா

இலங்கை யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் சர்வதேச சுயாதீன விசாரணைகள் நடத்தப்பட வேண்டிய அவசியமில்லை என ரஷ்யா அறிவித்துள்ளது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் இலங்கைக்கு எதிராக சமர்ப்பிக்கப்பட்ட தீர்மாணம் தொடர்பில் இந்தக் கருத்து வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கைக்கான ரஷ்ய தூதுவர் அலெக்சான்டர் கார்செவா இதனைக் குறிப்பிட்டுள்ளார். நல்லிணக்க முனைப்புக்களை மேற்கொள்ள இலங்கைக்கு போதியளவு கால அவகாசம் வழங்கப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

தசாப்தங்களாக நீடித்து வந்த யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு மக்களின் வாழும் உரிமையை அரசாங்கம் உறுதி செய்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.



அம்பாந்தோட்டை மாகம்புர மகிந்த ராஜபக்ஷ சர்வதேச துறைமுகத்திற்கு சுற்றுலா பயணிகள் கப்பலொன்று நேற்றுமுன்தினம் வருகை தந்துள்ளது. பிரான்ஸ் நாட்டிலிருந்து வருகை தந்துள்ள இக்கப்பலில், பல்வேறு நாடுகளுக்கு சுற்றுலா செல்லும் சுற்றுலா பயணிகள் 132 பேர் வருகை தந்துள்ளனர். இவர்கள் இத்துறைமுகத்தில் இறங்கி இங்கிருந்து உடவளவை யானைகள் சரணாலயத்தினை பார்வையிட்டு சென்று வந்து மீண்டும் பயணத்தை ஆரம்பித்துள்ளனர்.

## சமுர்த்தி கொடுப்பனவு இல்லை கோணாவில் மக்கள் விசனம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கோணாவில் பகுதியில் வறுமைக்கோட்டிற்குட்பட்ட குடும்பங்களுக்கு சமுர்த்திக் கொடுப்பனவுகள் வழங்கப்படுவதில்லை என பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

யுத்தத்தால் மிகவும் பின்தங்கிய நிலையில் இக்கிராமத்தில் வாழும் குடும்பங்கள் குறிப்பாக விதவைகள், உறவுகளை இழந்த குடும்பங்களுக்கு கொடுப்பனவும் வழங்கப்படவில்லை என பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றன

வாழ்வாதார ரீதியாக கஷ்டத்தில் வாழும் எமக்கு சமுர்த்திக் கொடுப்பனவை வழங்க உரிய துறைசார்ந்த அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இக்கிராம மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# தகவல் தொழில்நுட்ப பூங்கா நிர்மாணம் மேயில் ஆரம்பம்

(கொழும்பு)

அம்பாந்தோட்டையில் நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள தகவல் தொழில்நுட்ப பூங்காவுக்கான நிர்மாண வேலைகள் எதிர்வரும் மேமாதத்தில் ஆரம்பமாகுமென தொலைத் தொடர்பு ஒழுங்கு படுத்தும் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் அனுஷ பெல்பிட்ட நம்பிக்கை தெரிவித்தார்.

முதற்கட்டமாக 2 இலட்சம் சதுர அடி நிலப்பரப்பில் நிர்மாண வேலைகளை ஆரம்பிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன் நிர்மாண வேலைகளுக்கு 3500 மில்லியன் ரூபா தேவைப்படுவதாகவும், தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவே இதற்கான செலவ்னத்தை பொறுப்பேற்கும் என்றும் பணிப்பாளர் நாயகம் அனுஷ பெல்பிட்ட தெரிவித்தார்.

இந்தப் பூங்கா அமைப்பதன் மூலம் வெளிநாடுகளுக்கு தொலைத் தொடர்பை மேலும் விஷ்தரிக்க முடியும் இதன் மூலம் இலங்கையர் பலருக்கு தொழில் வாய்ப்புகளும் கிடைக்கவுள்ளன.

தகவல் தொழில்நுட்ப பூங்கா நிர்மாணிக்கப்பட்ட பின்னர் அதற்கான பங்களிப்பை வழங்க ஐவுஸீழ போன்ற பல தொலை தொடர்பு நிறுவனங்கள் இணக்கம் தெரிவித்துள்ளன என்றும் அனுஷ பெல்பிட்ட மேலும் தெரிவித்தார்.

## தேர்தல் கடமைகளில் 26 ஆயிரம் பொலிஸார்

மேல் மற்றும் தென் மாகாண சபைகளுக்கான தேர்தல் நடவடிக்கைகளின் பொருட்டு 26 ஆயிரம் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்படுவதாக பொலிஸ் தலைமையகம் குறிப்பிடுகின்றது.

பாதுகாப்பு நிமித்தம் வாக்குச் சாவடிகளுக்கு அருகில் துப்பாக்கியுடன் இரண்டு பொலிஸார் வீதம் நேற்று முதல் கடமையில் ஈடுபட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளரும், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

## சிறிய மீன்பிடி படகுகளுக்கு மானியம் வழங்க தீர்மானம்

சிறிய மீன்பிடி படகுரிமையாளர்களுக்கு மண்ணெண்ணெய் மானிய உதவி வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கடற்றொழில் பிரதியமைச்சர் சரத் குமார குணரத்ன தெரிவிக்கின்றார்.

இதுதொடர்பாக நேற்றுமுன்தினம் நடைபெற்ற பேச்சுவார்த்தையல் தீர்மானிக்கப்பட்டதாக பிரதி அமைச்சர் குறிப்பிட்டார். நிதி அமைச்சின் செயலாளர் உட்பட சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகளுடன் கடற்றொழில் அமைச்சர் நடத்திய பேச்சுவார்த்தையிலேயே இந்த விடயம் குறித்து தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அநாவிய பிரச்சினைகள் தோன்றாத வகையில், உரியவர்களுக்கு மண்ணெண்ணெய் மானியம் கிடைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்தும் இதன்போது முககிய கவனம் செலுத்தப்பட்டது.

மண்ணெண்ணெய் மானிய உதவி கோரி மீனவர்கள் போராட்டம் நடத்த ஆயத்தமான நிலையில் இந்த பேச்சுவார்தததை முன்னெடுக்கப்பட்டதாக பிரதி அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டினார்.

## தேசிய ஒருமைப்பாட்டு மாநாடு அனைத்துக் கட்சிகளுக்கும் அழைப்பு

இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தை வலியுறுத்தும் வகையிலான தேசிய ஒருமைபாட்டு மாநாடு எதிர்வரும் ஏப்ரல் மாதம் ஏழாம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது.

ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷவின் தலைமையில் நடைபெறும் மாநாட்டுக்கு, தமிழ்த்தேசிய கூட்டமைப்பு மற்றும் ஐக்கிய தேசியகட்சி உள்ளிட்ட அனைத்து கட்சிகளுக்கும் அழைப்பு விடுவிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

பண்டாரநாயக ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் இந்த மாநாட்டில் சுமார் 1500 பேர் வரையில் கலந்துக் கொள்ளவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## வாக்களிப்புக்கான பூர்வாங்க பணிகள் நிறைவு

மேல் மற்றும் தென் மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் இன்று நடைபெறவுள்ள நிலையில், அதற்கான வாக்குச் சீட்டுகள் மற்றும் வாக்குப்பெட்டிகளின் விநியோகம் நடைபெறறது.

இது குறித்த தகவல்களை உதவி தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம்.மொஹமட் தெரிவித்தார். 58 இலட்சத்து 98 427 வாக்காளர்கள் தகுதி பெற்றுள்ளார்.

4253 வாக்குச் சாவடிகளுக்குமான வாக்குச் சீட்டுகள் மற்றும் வாக்குப் பெட்டிகள் உள்ளிட்ட அனைத்து தேர்தல் 549 விநியோக நிலையங்களில் விநியோகிக்கப்பட்டுள்ளன.

சிரேஷ்ட தலைமை தாங்கும் அதிகாரிகள் அந்தந்த நிலையங்களில் அறிக்கையிட்டுள்ளனர். வாக்குப் பெட்டிகளை விநியோகிக்கும் நடவடிக்கைகள் நேற்று நண்பல் 12 மணிக்கு முன்னர் நிறைவடைந்தது என அவர் தெரிவித்துள்ளார்.


இதேவேளை நேற்று வாக்குப் பெட்டிகளின் விநியோகத்துக்கு பயன்படுத்தப்படுகின்ற 549 நிலையங்களும், இன்று மாலை வாக்குப் பெட்டிகளை கையேற்கும் நிலையங்களாக மாற்றப்படுவதுடன், பின்னர் அவை வாக்கு எண்ணும் நிலையங்களாகவும் மாற்றப்படவுள்ளன.

அத்துடன் 59 அஞ்சல் வாக்கு எண்ணும் நிலையங்களுடன் சேர்த்து மொத்தமாக 608 வாக்கு எண்ணும் நிலையங்களில் இன்றைய தினம் மேல் மற்றும் தென் மாகாண சபைகளின் வாக்கு எண்ணும் பணிகள் நடைபெறவுள்ளன.

# க.பொ.த. (சாதாரணதர) மாதிரி வினாத்தாள்
# G.C.E. (O/L) Examination model Paper

வரலாறு - கர்நாடக சங்கீதம்

## பகுதி I



1) இலங்கையின் புராதன இராசதானியான கங்கசிரிபுரவைக் குறிக்கும் எழுத்து
1) 1   2) 3
3) 4   4) 5

2) இலக்கம் 8 ஆல் காட்டப்பட்டுள்ளது கடலுக்கு இளவரசியை பலி கொடுத்த இடமாகும்.
1) புந்தல   2) கொடவாய
3) கிரிந்த   4) மாகம

3) இலக்கம் 1 ஆல் காட்டப்பட்டுள்ள இராசதானியை மீட்டெடுத்த சிங்கள ஆட்சியாளன்
1) 1 ஆம் விஜயபாகு   2) 1ஆம் பராக்கிரமபாகு
3) துட்டகைமுனு   4) வலகம்பா

4) பத்தகச்சானா குழுவினர் வந்திறங்கிய துறைமுகத்தைக் குறிக்கும் எழுத்து
1) 7   2) 8   3) 11   4) 12

5) இலக்கம் 6 ஆல் காட்டப்பட்டுள்ள இராசதானியின் முதல் மன்னன் ஆறாம் விஜயபாகு. அவ்விராசதானி,
1) யாப்பகூவ   2) தம்பதெனிய
3) கோட்டை   4) குருணாகல்

6) மௌரியப் பேரரசு வீழ்ச்சியுற்றதன் பின்னர் வடமேற்கிலிருந்து இந்தியாவில் ஆட்சியை நிலைநிறுத்திய அரசவம்சம் எது?
1) குப்தர்   2) குஷாணர்
3) நந்த   4) ஹுணர்

7) ABCD எனும் எழுத்துக்களால் காட்டப்பட்டுள்ளது. இலங்கைக்கு வருகை தந்த ஆரியக்குழுவினர்களாகும். அவர்களை ஒழுங்குமுறைப்படி வரிசைப்படுத்தினால்
A மகிந்ததேரரும் குழுவினரும்
B சங்கமித்தையும் குழுவினரும்
C பத்தகச்சானாவும் சகோதரக் குழுவினரும்
D பாண்டுவாஸ்தேவனும் குழுவினரும்
1) CBAD   2) DCAB   3) DABC   4) CDAB

8) முதலாம் விமலதர்மசூரியன் அரசுரிமையைப் பெற்றுக்கொண்ட விதம்,
1) மலையகத்தினுள் ஒழுங்கான நிர்வாகத்தை ஏற்படுத்தியமையால்
2) தந்துரே யுத்தத்தால் போர்த்துக்கேயரை தோல்வியடையச் செய்தமை
3) குசுமாசனதேவியை திருமணம் முடித்தமை.
4) மலையகப் பிரதானிகளைத் தன்வசப்படுத்திக் கொண்டமை.

9) டில்லி சுல்தான் பேரரசின் ஆரம்ப அரச வம்சம் எது?
1) கல்ஜி   2) வகல்   3) துக்ளக்   4) லோதி

9) "கார்பன் 14 " என்பது
1) கல்வெட்டுக்களைப் பற்றிய ஆராய்ச்சி
2) இலக்கியமூலாதாரங்கள் பற்றிய ஆராய்ச்சி
3) நவீன விஞ்ஞான கால நிர்ணயமுறை.
4) தொல்பொருட்கள் பற்றிய ஆய்வு.

10) இலங்கை வரலாற்றில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அதிக காலம் ஆட்சி செய்த மன்னன்,
1) துட்டகைமுனு   2) மாயாதுன்னை
3) பண்டுகாபயன்   4) 1 ஆம் பராக்கிரமபாகு

11) தீபவம்சத்திலும் மகா வம்சத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அசோக மன்னனின் பட்டாபிஷேகம் நிகழ்ந்தது புத்தர் பரிநிர்வாணமடைந்து எத்தனை வருடங்களின் பின்னர்?
1) 212 வருடங்கள்   2) 226 வருடங்கள்
3) 235 வருடங்கள்   4) 218 வருடங்கள்

12) கீழே தரப்பட்டுள்ள வரலாற்று நிகழ்வுகளை காலரீதியாக வரிசைப்படுத்தினால் கிடைக்கும் சரியான விடை யாது?
A வடபகுதியில் ஆரியச்சக்கரவத்தி பலம் பெறல்
B விஜயபாகு கொள்ளை
C மாகனின் ஆக்கிரமிப்பு
D I ஆம் விமலதர்மசூரியன் மன்னனாதல்
E இலங்கைக்கு போர்த்துக்கேயரின் வருகை.
1) BCAED   2) DCAEB   3) ECADB   4) CAEBD

13) ஐரோப்பியர் ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளை குடியேற்றவாதத்திற்குட்படுத்தியமைக்கான முக்கிய காரணம் யாது?
1) யுத்தகாலங்களின் தேவையான படைவீரர்களைப் பெற்றுக்கொள்ளல்
2) ஐரோப்பிய கலாசாரத்தை அந்நாடுகளில் பரப்புதல்
3) தமது நாடுகளின் கைத்தொழில்களுக்கு தேவையான மூலப்பொருட்களைப் பெற்றுக் கொள்ளலும் உற்பத்திகளை விற்பனை செய்தலும்.
4) யுத்த நிலையங்களை அமைப்பதற்காக.

14) உலகில் வெவ்வேறு இனங்களுக்கிடையிலும் நாடுகளுக்கிடையிலும் தொடர்புகள் ஏற்பட்டமைக்கான முதற்காரணமாகக் கொள்ளக்கூடிய விடயம் யாது?
1) வளங்களின் அசமநிலை
2) மறுமலர்ச்சிக் காலத்தில் ஏற்பட்ட நாடுகாண் பயணங்கள்
3) கைத்தொழிற்புரட்சியினால் ஏற்பட்ட கைத்தொழில் விருத்தி
4) மக்கட்தொகைப் பெருக்கமும் பொருளாதார விருத்தியும்.

15) 1815 இல் மலையக இராச்சியத்தில் ஆரம்பமான பிரித்தானியரது ஆட்சியை மலையக மக்கள் வெறுத்தமைக்கான காரணம் யாது?
1) ஸ்ரீ விக்கிரமராஜசிங்கனை நாடுகடத்தியமை
2) ஆங்கிலேயர் மலையகராச்சியத்தின் நிர்வாக, நீதிமுறைகளைப் பற்றி அக்கறைகொள்ளாமை.
3) புதிய வரிமுறைகள் அறிமுகம்
4) மலையகப் பிரதானிகளின் அதிகாரங்களையும் சொத்துக்களையும் பறிமுதல் செய்தமை

16) வெளிநாட்டவர்களின் வர்த்தகக் கப்பல்களால் இலங்கையின் துறைமுகங்கள் நிறைந்து காணப்பட்டன என்பது "கொஸ்மஸ்" என்பவரது அறிக்கையாகும். இதன்மூலம் விளங்கும் விடயமாவது,
1) புராதன காலத்தில் வெளிநாட்டுப் பயணிகள் இங்கு வந்து சென்றமை.
2) கப்பல்களுக்குத் தேவையான விடயங்களை இலங்கையில் பெறலாம்.
3) சூறாவளிகயிலிருந்து பாதுகாப்பு பெறும் வகையில் கப்பல்கள் பயணிக்கலாம்.
4) புராதன காலத்தில் இலங்கை முக்கியமான வர்த்தகமத்திய நிலையமாக விளங்கியது.

17) கைத்தொழிற்புரட்சியினால் ஏற்பட்ட பிரதிகூலமான விளைவைக் கொண்ட விடையைத் தெரிக.
1) கிராமங்களில் வாழ்ந்த மக்கள் நகரங்களை நோக்கி இடம்பெயர்ந்தமை.
2) பெருந்தொகையான அளவில் உற்பத்திகள் மேற்கொள்ளப்பட்டமை.
3) கைத்தொழிற்சாலைகளிலிருந்து புகை வளிமண்டலத்திற்கு வெளியேற்றப்பட்டது.
4) இயந்திரப் பாவனை அதிகரித்தமை.

18) கொன்ஸ்தாந்திநோபிள் நகரைத் துருக்கியர் கைப்பற்றியமையால் ஐரோப்பியர் புதிய மார்க்கங்களைத் தேடுவதில் ஈடுபட்டமைக்கான காரணம் யாது?
1) கடல்வழிகளைத் தேடுவதற்கு கத்தோலிக்க சபையினரது அனுமதியைப் பெறவேண்டியிருந்தமை.
2) கீழைத்தேய வர்த்தகப் பொருட்கள் ஐரோப்பிய சந்தைகளில் அத்தியாவசியமான பொருட்களாகக் காணப்பட்டமை.
3) கடற்பயணங்களுக்கு ஆட்சியாளர்களிடமிருந்து அனுசரணைகள் கிடைத்தமை.
4) ஐரோப்பாவில் அதிகரித்த சனத்தொகைக்கு இருப்பிடங்களைத் தேடியமை.

19) கீழே தரப்பட்டுள்ள விடயங்களுள் பிரான்சியப்புரட்சியின் பிரதிபலன்களைக் கொண்ட விடை யாது?
A முதலாளித்துவ பொருளாதார அமைப்பு உருவானமை
B விவசாய சமூகம் உருவானது.
C மனித உரிமைகள் பற்றிய பிரகடனம்
D ரஷ்யப்புரட்சிக்கு வழிவகுத்தது.
1) AB   2) AC   3) BC   4) CD

20) 'ஆலாஹன பிரிவேனா' எக்காலத்தில் பிரசித்தி பெற்றுவிளங்கியது?
1) அனுராதபுரகாலம்   2) பொலனறுவை
3) தம்பதெனிய   4) கோட்டை

21) "நாங்கள் வாசனைத்திரவியங்களையும் கிறிஸ்தவர்களையும் தேடி வந்தோம்" எனக் கூறியவர் யார்?
1) கொலம்பஸ்   2) மகலன்
3) வாஸ்கொடகாமா   4) குக்

22) விஜயநகரப் பேரரசின் முதன்மையான ஆட்சியாளன் யார்?
1) ஹரிஹரன்   2) புக்கான்
3) II ஆம் விருபாட்டன்   4) கிருஷ்ணதேவராயர்

23) மௌரிய அரசசபையில் பாவனையிலிருந்த மொழி எது?
1) மகதம்   2) சமஸ்கிருதம்
3) பிராக்ருதம்   4) தெலுங்கு

24) இலங்கை வரலாற்றில் முதுன் முதலாக எழுதப்பட்ட இலக்கிய மூலாதாரமாகக் கொள்ளக்கூடியது எது?
1) மகாவம்சம்   2) தீபவம்சம்
3) சூளவம்சம்   4) இராஜாவலிய

25) கி.பி 1344 இல் இலங்கைக்கு விஜயம் செய்த தேசசஞ்சாரி யார்?
1) இபன்பதூதா 2) மார்க்கோபோலோ
3) பாகியன் 4) ஹியுங்சாங்

26) போர்த்துகேயரால் தொன்யுவான் எனவும் பின்னர் முதலாம் விமலதர்மசூரியன் எனவும் பெயர் பெற்ற இவரது இயற்பெயர் யாது?
1) ஜயவீரபண்டார 2) கொணப்பு பண்டார
3) கரலியத்த பண்டார 4) மத்தும பண்டார

27) ஜைன மதத்தின் தோற்றுவிப்பாளராகக் கருதப்படுபவர் யார்?
1) நிகண்டநாதபுத்தர் 2) மகாவீரர்
3) அஜித கேஷகம்பல 4) மக்காலிகோசால

28) எவ் இராசதானி காலத்தில் மயூரசந்தேச, திரசந்தேச, சந்தர்மாலங்காரய, விமுக்தி சங்கிராவ போன்ற இலக்கியங்கள் எழுதப்பட்டன?
1) அனுராதபுரம் 2) பொலனறுவை
3) கம்பளை 4) குருணாகல்

29) கி.பி 1473 இல் போலந்தில் பிறந்த இவர் ''கேகொவ்'' பல்கலைக்கழகத்தின் கணிதத்துறைப் பேராசிரியர். அவர் யார்?
1) கெப்ளர் 2) டாவின்சி
3) கலிலியோ 4) கொப்பணிகஸ்

30) கி.பி 1891 இல் இலங்கையில் மகாபோதி சங்கத்தை அமைப்பதில் முன்னோடியாக விளங்கியவர் யார்?
1) ஸ்டீல் ஒல்கொட் 2) அநகாரிக தர்மபால
3) டி.பி.ஜயதிலக 4) பலானை வஜிரத்ன தேரர்

31) ஆசிய நாடான ஜப்பான் பெரியதொரு நாடான சோவியத் ரஷ்யாவையும் போரில் வெற்றி கொண்டது. அது எவ்வாண்டில்?
1) 1904 2) 1908
3) 1896 4) 1919

32) இலங்கையின் புராதனகால வர்த்தகம் பற்றிக் கூறும் கல்வெட்டு எது?
1) பதுளை தூண் கல்வெட்டு 2) ஹேபெஸ்ஸ கல்வெட்டு
3) வெஸ்ஸகிரி கல்வெட்டு 4) மிகிந்தலை கல்வெட்டு

33) பல நூற்றாண்டுகளாக பேணிப்பாதுகாக்கப்பட்ட மலையகத்தின் தனித்துவம் இல்லாமற்போனது எப்பிரித்தானிய ஆளுநரது காலத்தில்?
1) பிரட்ரிக்நோர்த் 2) ரொபட்பிறவுன்ரிக்
3) தோமஸ்மெயிட்லண்ட் 4) எட்வட்பாண்ஸ்

34) தெலுங்கு மொழியில் எழுதப்பட்ட ''ஆமுக்தமால்யதா'' எம்மன்னனது காலத்திற்குரியது?
1) II ஆம் ஹரிகரன் 2) I ஆம் ஹரிகரன்
3) புக்கான் 4) கிருஷ்ணதேவராயர்

35) அனுராதபுரத்தின் திஸாவாவியிலிருந்து ரன்மசு பூங்காவிற்கு சுரங்கவழி நீர்ப்பாசனம் அமைக்கப்பட்டிருந்தது எம்மன்னனது காலத்திலாகும்?
1) வசபன் 2) பண்டுகாபயன்
3) மகாசேனன் 4) II ஆம் அக்போ

36) பொலனறுவை மன்னனான I ஆம் விஜயபாகு திருமணம் செய்த திலோகசுந்தரி எவ் அரச வம்சத்தவள்?
1) பல்லவ 2) கலிங்க
3) பாண்டிய 4) சாளுக்கிய

37) முப்பிரிவாகக் காணப்பட்ட சிங்களவரையும் ஒன்றிணைத்த இறுதிச் சிங்கள ஆட்சியாளர் யார்?
1) I ஆம் பராக்கிரமபாகு 2) IV ஆம் பராக்கிரமபாகு
3) I ஆம் விமலதர்மசூரியன் 4) II ஆம் இராஜசிங்கன்

38) கொன்பியூசியஸ் மதம் எவ் ஆசிய நாட்டில் பரவியுள்ளது?
1) பர்மா 2) சீனா
3) இந்தோனேசியா 4) தாய்லாந்து

39) இலங்கையில் புகையிரத மார்க்கங்களை அமைப்பதில் முன்னோடியாக விளங்கிய பிரித்தானிய ஆளுநர் யார்?
1) டொரிங்டன் 2) ரொபின்சன்
3) வோட் 4) கிரகறி

## பகுதி II

01) 1) இலங்கைப் படத்தில் பின்வருவனவற்றைக் குறித்துப் பெயரிடுக. கோணதுதி, பொலனறுவை, மகாகம, தம்பகோளப்பட்டுன, சமந்தகூடம், கலாவாவி, அவுக்கண, கசாதொட்ட, கதிர்காமம், மகியங்கனை.

2) உலகப்படத்தில் பின்வரும் விடயங்களைக் குறித்துப் பெயரிடுக. செங்கடல், வெனிஸ், போர்லின், வொஷிங்டன், டோக்கியோ, சென்லோறன்ஸ் நதி, ஹிஸ்பேனியாலோ, கொரியா.

A 1) இக்கலைப்படைப்பை பெயரிடுக.

2) இப்படைப்பு காணப்படும் நகரைக் குறிப்பிடுக.

3) இப்படைப்பின் மூலம் கூறப்படும் விடயம் யாது?



B

1) இப்படத்தில் காட்டப்பட்டுள்ளவரைப் பெயரிடுக.

2) அவர் எவ் அரசவம்சத்தைச் சேர்ந்தவர்?

3) இவர் வரி சேகரிப்பதற்கும் பரிபாலிப்பதற்கும் அறிமுகப்படுத்திய புதிய முறை யாது?



C

1) இப்புத்தர் சிலை வெளிப்படுத்தும் குணாம்சம் யாது?

2) இக்கலைப்படைப்பின் பெயர் யாது?

3) இப்படைப்பின் அருகிலமைந்துள்ள குளம் எது?



# கர்நாடக சங்கீதம்

### இந்தியாவின் 17 ஆம் 18 ஆம் நூற்றாண்டின் கர்நாடக இசையின் கலாசார பின்னணி

17 ஆம் நூற்றாண்டின் பின்னணிக்கு முன்னர் 16 ஆம் நூற்றாண்டு இசை வளர்ச்சியை அறிவது அவசியம். 'சங்கீத பிதாமஹர்' என்று அழைக்கப்படும் புரந்தரதாஸர் 16 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். கர்நாடக இசை வளர்ச்சியில் முக்கிய இடம் வகிக்கும் புரந்தரதாஸர் இசைப் பயிற்சிக்குரிய ஸ்வராவளிகள், அலங்காரங்கள், கீதங்கள் முதலியவற்றை இயற்றினார். அப்பியாசகானத் துக்குரிய வழிமுறைகளையும் வகுத்து 'ஆதிகுரு' என்ற சிறப்புப் பட்டம் பெற்றார். 'புரந்தர விட்டல' என்பது அவரது முத்திரை. கன்னட மொழியில் நூற்றுக்கணக்கான கீர்த்தனைகளையும் இயற்றினார். மாயாமாளவகௌளை இராகத்திலேயே ஸ்வரவளி வரிசைகளைப் பாட வேண்டும் என்னும் முறையை கொண்டு வந்தார். இவரே லக்ஷிய சங்கீதப் பொலிவின் தன்மை முழுமையாக வளர்ச்சியுற அத்திவாரமாக அமைந்த காலம் 15, 16 ஆம் நூற்றாண்டுக் காலம் ஆகும்.

'ஸ்வரமேளகலாநிதி' என்னும் சமஸ்கிருத கிரந்தம். இக்கிரந்தம் அக்கால சங்கீத கலை சம்பந்தப்பட்ட ஐயப்பாடு நீக்கும் வகையில் அமைந்தது. 20 மேளங்களில் மிகச் சிறந்தது மாயமாளவகௌளை என்று இராமாமாத்யரும் குறியிடுகிறார் இது அப்பியாச வரிசைக்கு ஏற்புடையது எனலாம். கி.பி 1635 இல் சங்கீத நிகழ்ச்சியின் ஒரு நிறைவினை அரிப்பது வெங்கடமகியின் சதுர்தண்டி பிரகாசினக என்னும் கிரந்தம் தோன்றியது. இந்நூலில் வெங்கடமகியர்கள் 12 ஸ்வரஸ்தானங்களையும் 16 ஸ்வர பெயர்களையும் ஆதாரமாகக் கொண்டு 72 மேளகர்த்தாக்களை வகுக்கும் வழிகளை விபரித்துள்ளார். இது கர்நாடக இசை வளர்ச்சியின் பெரும் சாதனையாகும்.

17 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஷேத்தரக்ஞர் நாயக, நாயகி பாவம் கொண்டு தெலுங்கு மொழியில் ஆயிரக்கணக்கான பதங்களை இயற்றியுள்ளார். முத்துத்தாண்டவரின் காலத்தில் தெய்வத்தின் புகழ்பாடு கீர்த்தனைகள் புதிய இசை வடிவத்தில் தமிழில் இயற்றப்பட்டன. இவை பேரின்பப் பதங்கள் எனப் போற்றப்படுகின்றன.

19 ஆம் நூற்றாண்டில் கோவிந்தாச்சாரியரால் இயற்றப்பட்ட சங்கர சூடாமணி எனும் சமஸ்கிருத நூலில் சம்பூர்ண, கிரம சம்பூர்ண ஆரோகண, அவரோகணத்துடன் கடபயாதி ஜங்க்னய அனுசரித்து பெயர்தரப்பட்டது. இவை நாம் தற்போது பாவிக்கும் கனகாங்கி ரதனாங்கி பெயர்த்தொகுதியாகும். இதன் மூலம் இராக அமைப்பையும் அறிந்துகொள்ளக் கூடியதாயிருக்கும். மும்மூர்த்திகள் பல அபூர்வ இராகங்களையும் தாளங்களையும் வழக்கத்திற்கு கொண்டு வந்துள்ளார்கள். இவர்கள் காலத்திலேயே கனம் கிருஷ்ணய்யரும் வைத்தீஸ்வரன் கோயில் சுப்பராம ஐயரும் தமிழில் பதங்களை இயற்றினார்கள்.

சங்கீத மும்மூர்த்திகளில் தியாகராஜர் தெலுங்கிலும், தீஷிதர் வடமொழியிலும், சியாமாசாஸ்திரிகள் தெலுங்கு, வடமெரிழ, தமிழ் ஆகிய மொழிகளிலும் உருப்படிகளை இயற்றினார்கள். இராகங்களை எவ்வாறு சிறப்பாகக் கையாள முடியுமோ அந்தளவிற்கு கையாண்டார்கள்.

18 ஆம் நூற்றாண்டு கர்நாடக இசை வளர்ச்சியில் ஒரு திருப்பு முனையாகும். இந்நூற்றாண்டில் அருணாசலக் கவிராயரால் இயற்றப்பட்ட இராம நாடக கீர்த்தனத்தில் விருத்தம், கீர்த்தனைகள், தருக்கள் என்பன காணப்படுகின்றன. இதிலுள்ள கீர்த்தனைகள் பண்டைய தமிழ் பழமொழிகள் பலவற்றைக் கொண்டுள்ளன. ராமநாடகம் தவிர சீர்காழி ஸ்தலபுராணம், ஹனுமார் பிள்ளைத்தமிழ், சீர்காழிக்கோவை, அசோகமுகி நாடகம் முதலிய நாடகங்களையும் எழுதியுள்ளார்.

சிறந்த லஷய - லஷண வித்துவானாய் விளங்கிய பைடால குருமூர்த்தி சாஸ்திரிகள் ஆயிரக்கணக்கான கீதங்களை, பிரபந்தங்கள் இயற்றியுள்ளார். இதனால் இவர் வெயிகீத னபடால குருமூர்த்தி சாஸ்திரிகள் என்ற சிறப்புப் பெயரையும் பெற்றார்.


சாத்திரம் மூலம் கற்ற கமகங்களை நுட்பங்களைப் பாடிக்காட்டி சீர்படுத்தியவர் பச்சிரியம் ஆதியப்பர், தானவர்ண மார்க்க தீர்க்கதரிசி எனச் சிறப்பு பெற்ற இவர் இராகம், பல்லவி பாடும் முறையில் ஓர் ஒழுங்கனை உண்டாக்கினார். இக காலத்தில் தானவர்ணம் என்ற அப்பியாசகான உருப்படி தோன்றியது. தசவித கமகங்களை வெளிப்படுத்தும் விரிரூபிணி வர்ணத்தை இயற்றியவரும் இவரே. இவரும் 18 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்.

16 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கர்நாடக சங்கீதத்தின பொற்காலம் போற்றப்படுகிறது. மும்மூர்த்திகள் தோன்றிய காலம் ஆகும். தியாகராஜ ஸ்வாமி, சியாமாசாஸ்திரி, முத்துஸ்வாமி தீஷிதர் ஆகிய மூவரும தாமியற்றிய ஆயிரக்கணக்கான உருப்படிகள் மூலம் இராகங்கட்கு ஜீவனளித்து அவற்றின் ஸ்வரூபங்கள் அழிந்துபோகா வண்ணம் அவற்றை இசையுலகிற்கு அளித்துள்ளனர்.

குருகுலவாச்முறை இக் காலத்தில் வழக்கத்தில் வந்தது. சமுதாய கீர்த்தனை, கொத்துக் கீர்த்தனைகள் இயற்றப்பட்டன. க்ருதிகள் இயற்றப்பட்டன. சங்கதிகள் அமைக்கும் முறையை தியாகராஜர் தான் முதன் முதலில் நிர்ணயித்தார். இவரது உருப்படி திராட்சை ரசத்திற்கு ஒப்பிடப்படுகின்றன. பஞ்சரத்தினக் கீர்த்தனைகளை இசையுலகிற்கு அளித்தவர் இவரே.

தீஷிதருடைய க்ருதிகள் ராகபாவம் கொண்டவையாகவும், சௌக்ககாலத்தில் அமைந்தவையாகவும் காணப்படுகின்றது. மத்திம கால சாகித்தியங்களைத் தமது க்ருதிகளில் சேர்த்துள்ளார். நாளிகோ ரசத்துக்கு இவரது க்ருதி ஒப்பிடுவர்.

சியாமாசாஸ்திரிகளின் க்ருதிகள் கதலி ரசத்திற்கு ஒப்பானவை. இவரால் இயற்றப்பட்ட நவரத்தின மாலிகைகள் கிருதிகள் பிரசித்தமானவை. ஸரபந்ததன தாளத்தில் பல்லவி பாடியவர் இவரே. இவரது படைப்புக்களில் ஸ்வராட்சர அணிகள புகுத்தப்பட்டுள்ளன. விமோசன தாளத்தில் உருப்படி இயற்றிய பெருமைமிக்கவர்.

திசைகாட்டி வீசா ஆலோசனை நிலையத்தின் புதிய நிறைவேற்று அதிகாரி நியமன நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இதில் விரிவுரையாளர் கலாமணி மங்கள விளக்கேற்றுவதையும், திசைகாட்டி குழுமத் தலைவர் எஸ்.செல்வராஜா புதிய நிறைவேற்று அதிகாரி வி.இந்துஜாவிடம் ஆவணங்களை கையளிப்பதையும் இந்நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் காணலாம். (54)

# மக்களுக்கான அடிப்படைத் தேவைகள் அமைச்சரின் தலைமையில் முன்னெடுப்போம்

## உதயன் எம்.பி. தெரிவிப்பு



மீள்குடியேற்றப்படும் மக்களுக்கான அடிப்படைத் தேவைகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தலைமை மற்றும் வழிகாட்டலுக்கு அமைவாக முன்னெடுப்பதற்கு நாம் தயாராகவிருக்கின்றோம் என ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்த்திரி அலன்ரின் (உதயன்) தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கிராம சேவையாளர்களுடனான மீள் குடியேற்றம் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பான விசேட கலந்துரையாடலின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்ட முயற்சியின் பயனகாவே இம் மாவட்டத்தின் பல பகுதிகள் கட்டம் கட்டமாக விடுவிக்கப்பட்டு அங்கு மக்கள் மீள்குடியேற்றப்பட்டு வருகின்றனர்.

இந்நிலையில் வீடு, மலசல கூடம், குடிநீர், மின்சாரம் உள்ளிட்ட மக்களுக்கான அடிப்படைத் தேவைகள் பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும்.

இவ்வாறு மக்களின் அடிப்படைத் தேவைகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தலைமை மற்றும் வழி காட்டலுக்கு அமைவாக முன்னெடுப்பதற்கு நாம் தயாராகவிருக்கின்றோம் என்றும் சுட்டிக்காட்டியதுடன், அதற்கு துறை சார்ந்த அனைவரும் தமது முழுமையான பங்களிப்பை வழங்க வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

தொடர்ந்து உரையாற்றிய யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் அரசினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற அபிவிருத்தி மேம்பாட்டு செயற்றிட்டங்களுக்கு வலுச்சேர்க்கும் வகையில் கிராமஉத்தியோகத்தர்கள் நேர்மையுடனும், பொறுப்புணர்வுடனும் பணியாற்ற வேண்டுமென தெரிவித்துள்ளார்.

அரசினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற அபிவிருத்தி மேம்பாட்டு செயற்றிட்டங்கள் சமூகத்திற்கு வலுச்சேர்க்கப்படும் வகையில் கிராம உத்தியோகத்தர்கள் ஒத்துழைப்பையும் ஒத்தாசையையும் வழங்கி பணியாற்ற வேண்டும். அரச உத்தியோகத்தர்களாக மட்டுமல்லாது சமூகத்திற்கான சேவைகளை வழங்குனர்களாகவும் செயற்படும் அதேவேளை, மக்களுக்கு கிடைக்க வேண்டிய சேவைகளை உரியவகையில் கிடைக்கப் பெறும் வகையில் சேவையாற்றும்போதே அரச உத்தியோகத்தர்களது பணிகள் முழுமை பெறுகின்றது என்றார்.

# ஊர்காவற்றுறை பிரதேச சபையினால் 2014 இற்கான மதிப்பிடப்பட்ட வருமான செலவீனம்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை பிரதேச சபையின் 2014 வரவு செலவுத்திட்ட அறிக்கையின் படி மதிப்பிடப்பட்ட மொத்த வருமான செலவீனம் பொழிப்பு பிரதேச சபையினால் முன்வைக்கப்பட்டுள்ளது.

இதன்படி பொது நிர்வாகத்திற்காக மொத்த வருமானமாக 15,672880 ரூபாவும் மொத்த செலவீனமாக 15,296,380 ரூபாவும் சுகாதார சேவைகளுக்காக மொத்த வருமானமாக 8,153276 ரூபாவும், மொத்த செலவீனமாக 9,250776 ரூபாவும் மதிப்பிடப் பட்டுள்ளது.

மேலும் பௌதீக திட்டமிடல் வீதிகள்,காணி கட்டடம் என்பவற்றுக்காக மொத்த வருமானமாக 3,926,776 ரூபாவும் மொத்த செலவீனமாக 53,13,776 ரூபாவும் நீர் வழங்கல் சேவைக்காக மொத்த வருமானமாக 1,805776 ரூபாவும் மொத்த செலவீனமாக 1,794276 ரூபாவும் வேறு பொதுப்பயன் பாட்டுச் சேவைகளுக்காக மொத்த வருமானமாக 5,719672 ரூபாவும், மொத்த செலவீனமாக 2,728672 ரூபாவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் நலன்புரிச்சேவைகளும் ஏனைய வசதிகளுக்குமாக மொத்த வருமானம் 2,305148 ரூபாவும், மொத்த செலவீனமாக 3,189648 ரூபாவும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

# குறும் திரைப்படங்கள், அம்மா பாடல் வெளியீடு




(யாழ்ப்பாணம்)

நல்லூரான் கலைத்தாய் மன்றம் நடத்தும் நம்நாட்டு கலைஞன் விமல்ராஜின் பூம்புகார், குருதிப்பூக்கள் குறுந்திரைப் படங்களின் வெளியீடும், அம்மா பாடல் வெளியீடும் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ் தியாகி அறக்கொடை நிலைய சொர்ணாம்பிகை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மன்றத் தலைவர் ஜெய்காந்தன் சாயியன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, சிறப்பு விருந்தினர்களாக கியூடெக் கரித்தாஸ் நிறுவன இயக்குநர் யோ.சே.பேணாட் நெக்னேர், தொழிலதிபர் சிவானந்தன் ஸ்ரீபாஸ்கரன், நல்லூர் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர்கள் திருமதி ரஜனி குமாரசிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். கௌரவ விருந்தினர்களாக பூம்புகார் கிராம அங்கத்தவர் திருமதி மேரிலலிதா விக்ரம் கலந்து கொள்ளவுள்ளார்.

# அந்தோனியாருக்கு திருவிழா

(யாழ்ப்பாணம்)

குருசடித்தீவு புனித அந்தோனியார் ஆலயத் திருவிழா எதிர்வரும் 3 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இதில் 5 ஆம் திகதி நற்கருணை விழாவும், 6 ஆம் திகதி திருவிழாத் திருப்பலியும் இடம்பெறும். திருவிழாத் திருப்பலி காலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்.

பக்தர்களின் நலன்கருதி காலை 5.30 மணியிலிருந்து படகுச்சேவை பண்ணை வீதியிலிருந்து ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# மல்லாவி - மாந்தைகிழக்கு வீதியை புனரமைக்குமாறு கோரிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் மல்லாவி முதலாம் யுனிற் சந்தியிலிருந்து மாந்தைகிழக்கு எல்லை வரைக்குமான 3 கிலோ மீற்றர் வீதி 30 வருட காலமாக எதுவித புனரமைப்பும் இன்றி சேதமடைந்து காணப்படுவதாக இப்பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

நீண்டகால புனரமைப்பின்றி காணப்படும் குறித்த வீதி தற்போது குண்டும் குழியுமாக மிக மோசமான நிலையில் சேதமடைந்து காணப்படுவதாகவும் இதனால் இப்பிரதேசத்திலுள்ள மக்கள் போக்குவரத்தை மேற்கொள்வது என்பது பாரிய நெருக்கடியை எதிர்நோக்குவதாக தெரிவிக்கின்றனர்.

இதேவேளை இவ்வீதியை துணுக்காய், மாந்தை கிழக்கு ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மக்களே அதிகளவில் பயன்படுத்தி வருவதுடன், நாளாந்தம் பாடசாலை மாணவர்கள், அரச அலுவலர்கள், மீனவர்கள், விவசாயிகள் எனப் பலர் பயணம் செய்கின்றனர்.

எனவே இப்பிரதேசத்திலுள்ள பொதுமக்களின் நலன் கருதி இவ்வீதியை புனரமைக்க நடவடிக்கை எடுக்குமாறு உரியவர்களிடம் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.




## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ..............................

முகவரி :- ..............................

பிறந்த ஆண்டு :- ..............................

கூப்பன் ஐந்தும், புகைப்படமும்

..............................

பெற்றோர் கையொப்பம்

# மரண தண்டனைகளை நிறைவேற்றுவது உலகில் அதிகளவில் இடம்பெறுகிறது

## சர்வதேச மனித உரிமை அமைப்பு தெரிவிப்பு

உலகம் முழுவதும் மரண தண்டனை நிறைவேற்றம் 15 சதவீதம் அதிகரித்துள்ளதாக சர்வதேச மனித உரிமைகள் அமைப்பு தெரிவித்துள்ளது.

லண்டனை தலைமையகமாகக் கொண்டு செயல்படும் அரசு சாரா மனித உரிமைகள் அமைப்பான "ஆம்னெஸ்டி இண்டர்நேஷனல்"லின் அமைப்பின் இயக்குநர் ஆட்ரே கௌரான் மற்றும் செயலர் சலீல் ஷெட்டி மரண தண்டனை விவரங்கள் குறித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

இதுகுறித்து இவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில், உலக அளவில் சீனா, ஈரான், ஈராக், சவூதி அரேபியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளில்தான் அதிக அளவு மரண தண்டனைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

இதில் கடந்த 2012ஆம் ஆண்டில் 682 ஆக இருந்த மரண தண்டனையின் எண்ணிக்கை 15 சதவீதம் அதிகரித்து 778 ஆக கடந்த 2013ஆம் ஆண்டில் உயர்ந்துள்ளது.

குறிப்பாக ஈரானில் கடந்த ஆண்டு மட்டும் 369 மரண தண்டனைகளும் ஈராக்கில் 169 மரண தண்டனைகளும் நிறை வேற்றப்பட்டிருக்கின்றன என தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையே உலக நாடுகள் அனைத்தையும் விட சீனாவில் மரண தண்டனை அதிகம் நிறைவேற்றப்படுவதாகவும், அதை சீனா வெளியிடாமல் இரகசியமாய் வைத்திருப்பதாகவும் தகவல் கிடைத்துள்ளது.

எனவே சீனா செய்வது உண்மை என்றால் அதற்குரிய தகவல்களை அந்நாட்டு அதிகாரிகள் தெரிவிக்க வேண்டும் என சர்வதேச மனித உரிமைகள் அமைப்பின் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சர்வதேச நாணய நிதியம் உக்ரேனுக்கு கடன் வழங்க ஒப்புதல்

உக்ரேயினுக்கு 18 பில்லியன் டொலர்கள் கடன் வழங்க சர்வதேச நாணய நிதியம் ஒப்புதல் அளித்துள்ளது.

கிரைமியாவை ரஷ்யாவுடன் இணைக்கும் போராட்டத்தில் நடைபெற்ற வாக்கெடுப்பிற்கு பின்னர் கடந்த 18ஆம் திகதி கிரைமியா உக்ரேனிடமிருந்து பிரிந்து ரஷ்யாவுடன் சேர்ந்துள்ளது.


ஆனால் கிரைமியா விவகாரத்தில் ரஷ்யா நடத்திய வாக்கெடுப்பு சட்டவிரோதமானது என ஐ.நா. போர்க்கொடி ஏந்தியுள்ளது.

இந்நிலையில் ஐரோப்பிய ஒன்றியமும், அமெரிக்காவும் ரஷ்யாவுக்கு எதிரான புதிய பொருளாதார தடை குறித்து ஆராய்ந்து வருகிறது.

இதற்கிடையே உக்ரேன் கடும் பொருளாதார நொருக்கடியை சந்தித்து வருவதால்,அந்நாட்டிற்கு 14 முதல் 18 பில்லியன் டொலர்கள் கடன் வழங்க சர்வதேச நாணய நிதியம் ஒப்புதல் அளித்துள்ளது

மேலும் அமெரிக்காவின் செனட் சபையும், உக்கிரேனிற்கு ஒரு பில்லியன் டொலர்கள் கட்னாக வழங்க தீர்மானித்துள்ளது

# பிருத்வி -2 ஏவுகணை சோதனை வெற்றிபெற்றது



அணுஆயுதம் தாங்கிச் சென்று இலக்கை தாக்கும் சக்தி கொண்ட பிருத்வி-2 ஏவுகணை, ஒடிசா மாநிலம் சந்திப்பூர் ஏவுதளத்தில் இருந்து வெற்றிகரமாக சோதனை செய்யப்பட்டது.

இன்றைய சோதனையின் போது பிருத்வி-2 ஏவுகணை திட்டமிட்டபடி, இலக்கை சரியாக தாக்கியதாக சந்திப்பூர் ஏவுகணை ஏவுதள மைய இயக்குநர் எம்.வி.கே.வி. பிரசாத் தெரிவித்துள்ளார்.

500 கிலோ எடையிலான அணு ஆயுதத்தை சுமந்து சென்று 350 கி.மீ., வரையிலான தொலைவில் இருக்கும் இலக்கை குறி வைத்து தாக்கும் சக்தி வாய்ந்தது பிருத்வி 2 ஏவுகணை.

கடைசியாக இந்த ரக ஏவுகணை, ஜனவரி 7-ஆம் திகதி பரிசோதிக்கப்பட்டது. அதற்கு முன்னதாக கடந்த ஆண்டு அக்டோபர் 7ஆம் திகதியும், ஆகஸ்ட் 12ஆம் திகதியும் சோதிக்கபபட்டது.

# பயங்கரவாதிகளின் தாக்குதலில் ஒருவர் பலி; 3பேர் படுகாயம்



(ஜம்மு)

ஜம்மு காஷ்மீரின் கத்துவா பகுதியில் நேற்று அதிகாலை பயங்கரவாதிகள் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் பலியாகியுள்ளார். மேலும் 3 பேர் படுகாயம் அடைந்துள்ளனர்.

கத்துவாவை அடுத்த தயலாசக் பகுதியில் உள்ள இராணுவ முகாம் பகுதியில் வந்த வெள்ளை நிற போலிரோ காரை, இராணுவ உடையில் வந்த 4 பயங்கரவாதிகள் தடுத்து நிறுத்தி உள்ளனர். காரில் இருந்த பயணிகள் கீழே இறங்கியதும், அந்த பயணிகள் மீது சரமாரியாக துப்பாக்கி சூட்டுத் தாக்குதல நடத்தி உள்ளனர். பின்னர் அந்த காரிலேயே பயங்கரவாதிகள் தப்பிச் சென்றுள்ளனர். அதிகாலை 5 மணியளவில் நடந்த இந்த தாக்குதலில் ஒருவர் பலியாகி உள்ளார். மேலும் 3 பேர் படுகாயம் அடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸாா தெரிவித்துள்ளனர்.

காரையும், அதில் தப்பிச் சென்ற பயங்கரவாதிகளையும் தேடும் பணி முழுவீச்சில் நடைபெற்று வருகிறது. இராணுவ பகுதியில், சர்வதேச எல்லை பகுதிக்கு மிக அருகில் இந்த தாக்குதல் சம்பவம் நடைபெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. தாக்குதல் நடத்தியவர்கள் அப்பகுதியில் பதுங்கி இருந்து, சமீப காலமாக தேடப்பட்டு வந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தாக்குதல் நடைபெற்ற இடத்திற்கு அருகில் உள்ள ஹிராநகர் போலிஸ் நிலையம் மீது கடந்த ஆண்டு செப்ரம்பர் மாதம பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தியது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் அடுத்த சில மணிநேரங்களில் கத்துவா மாவட்டத்தின் ஜங்லோட் இராணுவ முகாமிற்கு அருகே மீண்டும் ஒரு பயங்கரவாத தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. பயங்கர ஆயுதங்களுடன் இராணுவ உடையில் வந்தே இந்த தாக்குதலையும் பயங்கரவாதிகள் நிகழ்த்தியுள்ளனர்.

உலகச் செய்திகள்

# அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்தால் புதுச்சேரிக்கு தனிமாநிலம்

## உறுதியளிக்கிறார் முதல்வர்



புதுச்சேரிக்கு ''மாநில அந்தஸ்து வழங்க வேண்டும் என 1998இல் பிரதமரை நான் வலியுறுத்தினேன். இதையடுத்து, தனி மாநில அந்த்ஸ்து வழங்கப்படும் என பிரதமர் நாடாளுமன்றத்தில் அறிவித்தார். ஆனால் பின்னர் வந்த ஆட்சி மாற்றத்தால் அத்திட்டம் கிடப்பில் போடப்பட்டது. மத்தியில் அ.தி.மு.க அங்கம் வகிக்கும் ஆட்சி அமைந்தால், புதுச்சேரியில் அனைத்து மக்களுக்கும் பாதிப்பில்லாத வகையில் தனி மாநில அந்தஸ்து பெற்றுத்தரப்படும் என உறுதியுடன் தெரிவிக்கிறேன்.

புதுச்சேரியில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடந்த பிரச்சாரக் கூட்டத்தில் கலந்து கொண்ட அ.தி.மு.க பொதுச்செயலாளர் ஜெயலலிதா, இவ்வாறு தெரிவித்தார்.

புதுச்சேரி மக்களவைத் தொகுதி அ.தி.மு.க வேட்பாளர் ஓமலிங்கத்தை ஆதரித்து ஜெயலலிதா பேசியதாவது: கடந்த 2011 புதுச்சேரி சட்டப்பேரவைத் தேர்தலில் அ.தி.மு.க மற்றும் என்.ஆர். காங்கிரஸ் கூட்டணி வேட்பாளர்களை மகத்தான வெற்றி பெறச் செய்தீர்கள். என்ஆர்.காங்கிரஸ் கட்சி தனி பெரும்பான்மை பெறவில்லை. அ.தி.மு.க.வைப் புறக்கணித்துவிட்டு சுயேச்சை ஆதரவுடன் ஆட்சியமைத்தார் ரங்கசாமி. அவர் அ.தி.மு.க.விற்கு மட்டும் துரோகம் இழைக்கவில்லை, உங்களுக்கும் துரோகம் இழைதவிட்டார்.

புதுச்சேரி மக்கள் பலவீனமான, செயலிழந்த முதல்வரைப் பெற்றுள்ளனர். வளர்ச்சியில் பின்னோக்கி செல்லும் மாநிலமாக புதுச்சேரி உள்ளது.

புதுவையில் அனைத்து பிராந்தியமும் சம வளர்ச்சி பெற, ரூ.5 ஆயிரம் கோடி மத்திய கடனை இரத்து செய்ய, மத்திய வரிவருவாயை புதுச்சேரிக்கு தனியாக பிரித்து வழங்க, நிதிக் குழுவில் புதுச்சேரியை சேர்க்க அதிமுக மத்தியில் அங்கம் வகிக்க வேண்டும். அப்படி ஆட்சி அமைந்தால் நாட்டின் தனிநபர் வருமான உச்சவரம்பு ரூ. 5 இலட்சமாக உயர்த்தப்படும் என்று ஜெயலலிதா தெரிவித்தார்.

# விமானப்படைவிமானம் விபத்து; பயிற்சியாளர்கள் ஐவர் பலி

இந்திய விமானப்படைக்கு சொந்தமான சி130 ஜெ சூப்பர் ஹெர்குலஸ் விமானம் வழக்கம் போன்று நேற்று காலை 10 மணியளவில் பயிற்சிக்காக ஆக்ரா விமான படை தளத்தில் இருந்து பறந்து சென்றது. மத்திய பிரதேசம் ராஜஸ்தான் மாநில எல்லையான குவாலியர் அருகே பறந்து சென்ற போது அந்த விமானம் திடீரென தரையில் விழுந்து நொறுங்கியது.


அதில் பயணம் செய்த 5 பேரும் பலியானதாக தெரியவந்துள்ளது. இத்தகவல் அறிந்ததும் ஜெய்ப்பூர் பொலிஸ் சூப்பிரண்டு கராவ்லி மற்றும் பொலிஸ் அதிகாரிகள் சம்பவ இடத்துக்கு விரைந்துள்ளனர்.

இந்த விபத்து எப்படி நிகழ்ந்தது என்பது குறித்து விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக இந்திய விமானப்படை செய்தி தொடர்பாளர் தெரிவித்துள்ளார். விபத்துக்குள்ளான சி130 ஜெ சூப்பர் ஹெர்குலஸ் விமானம் அமெரிக்காவில் தயாரிக்கப்பட்டதாகும்.

கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்பு அமெரிக்காவிடம் இருந்து இந்த ரகத்தை சேர்ந்த விமானங்களை இந்திய விமானப்படை ரூ.6 ஆயிரம் கோடிரூபாவுக்கு வாங்கியது குறிப்பிடத்தக்கது.

# மோடியும் மன்மோகனும் நாணயத்தின் இருபக்கங்கள்

## கம்யூனிஸ்ட் கட்சி தெரிவிப்பு



நரேந்திர மோடியும் மன்மோகன் சிங்கும் ஒரே நாணயத்தின் இரு பக்கங்களைப் போன்றவர்கள்.இந்த தேர்தலில் காங்கிரஸ் கட்சியையும், மதவாத பா.ஜ.கவையும் புறக்கணித்துவிட்டு மாற்று அணிக்கு பொதுமக்கள் வாக்களிக்க வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, தேர்தல் அறிக்கையை நேற்று முன்தினம் வெளியிட்டது. டெல்லியில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் பொதுச் செயலாளர் சுதாகர் ரெட்டி, மூத்த தலைவர்கள் ஏ.பி. பரதன், குருதாஸ் தாஸ் குப்தா, டி. ராஜா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

புதிய தாராளமயக் கொள்கைகளை தொடர்ந்து பின்பற்றி வருவதால், நாளுக்கு நாள் பிரச்சினைகள் அதிகரித்து வருகின்றன. முதலாளித்துவத்தையும் ஏகாதிபத்தியத்தையும் ஊக்குவிக்கும் செயலில் காங்கிரஸும் பா.ஜ.க.வும் ஈடுபடுகின்றன. மக்களின் பிரச்சினைகளை நாடாளுமன்றத்தில் எடுத்துச் செல்ல இடதுசாரிக் கட்சிகளைச் சேர்ந்தவர்களை அ.தி.க எண்ணிக்கையில் வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

தேர்தல் அறிக்கையை வெளியிட்ட பின்பு, இந்திய கம்யூனிஸ்ட் பொதுச் செயலாளர் சுதாகர் ரெட்டி பேசியதாவது: தேர்தலுக்கு பிறகு அரசியல் கட்சிகளின் அணிகளில் மிகப்பெரிய மாற்றம் ஏற்படும்.

இந்த தேர்தலில் முக்கிய பிரச்சினையாக இருப்பது அழிவைத் தரும் தாராளமயக் கொள்கைகளை தொடர்ந்து ஆதரித்து வருவதா அல்லது மாற்றத்தை ஏற்படுத்தி வளர்ச்சிக்கான பலன்கள் அனைத்து மக்களுக்கும் கிடைக்கச் செய்யும் கொள்கைகளை பின்பற்றுவதா என்பதுதான். மக்கள் சந்தித்து வரும் சமூக பொருளாதார அடிப்படை பிரச்சினைகளை கம்யூனிஸ்ட் கட்சிகள் நாடாளுமன்றத்தில் எழுப்பினால், அது தொடர்பாக அர்த்தமுள்ள விவாதம் நடைபெறுவதை தடுக்கும் வகையில் காங்கிரஸும் பா.ஜ.க.வும் நடந்து கொள்கின்றன. தனியார்மயமாக்குவதை இந்த இரு கட்சிகளும் இணைந்து ஊக்குவிக்கின்றன.

# மக்களின் அன்றாடப் பிரச்சினை களநிலையில் அமைச்சர் டக்ளஸ் ஆராய்வு





(புத்தூர்)

பிரதேச சபை உறுப்பினர்களும், பொதுமக்களும் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா புத்தூரில் அமைந்துள்ள வலி.கிழக்கு பிரதேச சபை தலைமை அலுவலகத்திற்கு திடீர் விஜயம் மேற்கொண்டார்.

குறித்த பிரதேச சபை கடந்த மூன்று மாதங்களாக செயலிழந்துள்ள நிலையில் தமது தேவைகளின் நிமிர்த்தம் வருகை தந்திருந்த மக்கள் தாம் நாளாந்தம் எதிர்நோக்கி வரும் இடர்பாடுகள் தொடர்பாக நேற்று அமைச்சரிடம் எடுத்து விளக்கினர்.

கடந்த ஜனவரி மாதம் குறித்த பிரதேச சபையின் தவிசாளரான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த உதயகுமார் பதவிநீக்கம் செய்யப்பட்டிருந்தார்.

இதனையடுத்து அப்பிரதேச சபைக்கான தவிசாளர் நியமிக்கப்படாத காரணத்தினால் கூட்டங்களைக் கூட்ட முடியாததால் பிரதேசசபை ஊடாகத் தமது தேவைகளைப் பெற்றுக் கொள்வதில் வர்த்தகர்களும், பொது மக்களும் பல்வேறுபட்ட நெருக்கடிகளை நாளாந்தம் எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்நிலையில், தமது தேவைகளின் நிமித்தம் பிரதேச சபைக்கு வருகை தந்த வர்த்தகர்களும், பொது மக்களும் குறித்த விடயம் தொடர்பாக அமைச்சரிடம் தெரியப்படுத்தியதையடுத்து அமைச்சர் அங்கு விஜயம் மேற்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து பிரதேசசபை தொடர்பாக துறை சார்ந்தோருடன் கலந்துரையாடி கேட்டறிந்து கொண்டார்.

இதனிடையே அங்கு வருகை தந்திருந்த அக்கரைப் பகுதி மக்களுடன் கலந்துரையாடிய அமைச்சர் அவர்களுக்கான காணி, குடிநீர், வீதிப் புனரமைப்பு, மின்சாரம் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்திய அதேவேளை அக்கரை கடற்கரைப்பகுதியில் அத்துமீறிய மண் அகழ்வை உடனடியாக தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு பிரதேச செயலர் பிரதீபனிடமும், பொலிஸாரிடமும் பணிப்புரை விடுத்தார்.

அத்துடன் அச்செழு விளையாட்டு மைதானம் தொடர்பில் கவனம் செலுத்திய அமைச்சர் மைதானம் தொடர்பாக ஆராய்ந்து தீர்வு காணப்படும் வரையில் விளையாட அனுமதிக்குமாறும் பிரதேச செயலரிடம் தெரிவித்தார்.

இதன்போது ஈ.பி.டி.பி.யின் கோப்பாய் பிரதேச இணைப்பாளர் ஐங்கரன், பிரதேசசபை செயலாளர் குமணன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## மனித உரிமை பேணப்படுவதை "நவி"யின் பிரதிநிதிகள் கண்காணிக்க வாய்ப்பு.

### ஆஸி.சட்டத்தரணி தெரிவிப்பு

(ஜெனிவா)

யுத்தத்துக்குப் பிந்திய இலங்கையில் மனித உரிமைகள் பேணப்படுவதை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் பிரதிநிதிகள் நேரடியாகக் கண்காணிப்பதற்கு இனி வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாக பிரபல அவுஸ்ரேலிய சட்டத்தரணி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஐ.நா. மனித உரிமை பேரவையில் நிறைவேற்றப்பட்ட பிரேரணை இலங்கையின் மனித உரிமை மேம்பாடு தொடர்பில் மிகவும் முக்கியமானது என அவுஸ்ரேலிய மனித உரிமை சட்டத்தரணி எமிலி ஹோவி தெரிவித்துள்ளார்.

இலங்கையின் சிவில் யுத்தத்தில் போர்க்குற்றங்கள் மற்றும் மனிதாபிமான குற்றங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதிஎய பெற்றுக்கொடுக்க இது சிறந்த முன்னெடுப்பு.

மனித உரிமை ஆணையாளரின் அலுவலகம் விசாரணை தொடர்பிலான கண்காணிப்புகளை மேற்கொள்ள உள்ளது. இதன் மூலம் இலங்கையின் தற்போதைய மனித உரிமை நிலைமைகளை அவதானிக்க முடியும். இது மிகவும் முக்கியமான ஒரு கட்டமைப்பு என்றார்.

ஐ.நா. மனித உரிமை பேரவையில் இலங்கை தொடர்பில் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ள பிரேரணையானது ஒரு முக்கியமான முன்னெடுப்பு என சர்வதேச மன்னிப்புச் சபையின் பீட்டர் ஸ்பிலின்டர் தெரிவித்துள்ளார்.

## புலிகளுக்கு வாகனம் விற்பனை; அநுராதபுரத்தில் இருவர் கைது

(கொழும்பு)

சிறையில் இருக்கும் விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவர் வழங்கிய தகவல் ஒன்றின் அடிப்படையில் அநுராதபுரத்தைச் சேர்ந்த அரசியல்வாதி ஒருவரின் மைத்துனர் உட்பட இரண்டு பேர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொள்ளையிடப்பட்ட வாகனங்களின் எஞ்சின் மற்றும் செஸி இலக்கத்தை அழித்து வட பகுதியில் விற்பனை செய்தமை தொடர்பாகவே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரில் பிரதேச செயலகம் ஒன்றின் அதிகாரியும் அடங்குவதாகப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

வடமத்திய மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் ரவி விஜேகுணவர்தன தலைமையில் இயங்கும் மாகாணத்தின் விசேட பொலிஸ் பிரிவினால் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பில் கொள்ளையிடப்பட்ட கெப் வண்டி ஒன்றின் எஞ்சினின் இலக்கத்தை அழித்து அநுராதபுரத்தில் உள்ள விற்பனை முகவர் ஒருவருக்கு சந்தேக நபர்கள் விற்பனை செய்துள்ளனர்.

இந்த சம்பவம் குறித்து நடத்திய விசாரணைகளில் மேலதிக தகவல்கள் தெரியவந்துள்ளன.

## ஏ.கே- 47...

வகையைச் சேர்ந்த துப்பாக்கியொன்று மறைத்து வைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. இவ்விடயம் தொடர்பில், மூளாய் கிராம அலுவலருக்கு தெரியப்படுத்தப்பட்டது.

கிராம அலுவலர் இது தொடர்பாக வட்டுக்கோட்டைப் பொலிஸாருக்கு அறிவித்ததைத் தொடர்ந்து குறித்த துப்பாக்கியினை மீட்கும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

இது தொடர்பாக வீட்டில் வசித்து வந்த சுந்தரேஸ்வரி பொலிஸாருக்குத் தெரிவிக்கையில்,

எனது கணவர் இறந்த பின்னர் நானும் சித்த சுவாதீனமற்ற எனது மகளும் இந்த வீட்டில் வசித்து வந்தோம். கடந்த 1995ஆம் ஆண்டு யுத்தம் காரணமாக யாழ். மாவட்டத்தை விட்டு மக்கள் அனைவரும் இடம்பெயர்ந்த போது, நாங்களும் இடம்பெயர்ந்திருந்தோம். இதற்கிடையில் இந்த வீட்டில் யார் வசித்தார்கள் என்பது எனக்குத் தெரியாது என்று தெரிவித்தார். அத்துடன், தனது மகளும் சிறிது காலத்திற்கு முன்னர் இறந்து விட்டதாகவும் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக வட்டுக்கோட்டைப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## வட்டுக்கோட்டையில்...

கோபியின் நண்பனான மாணிக்கம் காந்தலயன் என்ற இளைஞர் பயங்கரவாத குற்றத் தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

இதன்போது, அநேகமான அப்பகுதி பொதுமக்கள் வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையத்திற்கு தொலைபேசி அழைப்பினை மேற்கொண்டு கைது செய்யப்பட்டுள்ள குறித்த நபர் நல்லவர் எவ்வித குற்றச் செயல்களிலும் ஈடுபடாதவர் என்று கூறினார்கள்.

இருந்தும், அந்நபரிடம் மேற்கொள்ளப்பட்ட புலன் விசாரணைகளின் போது அநேகமான துப்பாக்கி ரவைகள் மற்றும் கோபி சம்பந்தப்பட்ட தகவல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன என்றார்.

அத்துடன், தேசிய பாதுகாப்பிற்கு பங்கம் விளைவிக்கும் வகையில் யாரார்வது நடந்து கொண்டால், அவர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அவர் மேலும் கூறினார்.

## சுகாதாரப் பரிசோதகர்களை பிரதேசசபையுடன் இணையுங்கள்

### கோரிக்கையை வலியுறுத்தி கவனயீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கு, நல்லூர், வலி.தென்மேற்கு, கரைச்சி ஆகிய பிரதேசசபைகளில் உள்ள பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களை சுகாதார வைத்திய அதிகாரியின் கீழ் உள்வாங்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், மீண்டும் தமது பிரதேசசபைக்கு சுகாதாரப் பரிசோதகரை வழங்குமாறு கோரியும் வலி.வடக்கு பிரதேச சபை உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் அனைவரும் நேற்று பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். உள்ளூராட்சி அதிகாரங்களைப் பறிக்காதே! பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களை மீண்டும் எமது பிரதேசசபைகளுக்கு வழங்கு, ஆளுநரே! உள்ளூராட்சி அதிகாரங்களில் தலையிடாதே!", பிரதேச சபைகளைச் சுயாதீனமாக இயங்க விடு! போன்ற சுலோகங்கள் அடங்கிய அட்டைகளைத் தாங்கியவாறு இவர்கள் தமது பணிப்புறக்கணிப்பை மேற்கொண்டனர். இதில் பிரதேச சபைத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## இந்திய...

படுத்தியபோது குறித்த மீனவர்களை எதிர்வரும் 4 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் மாவட்ட பதில் நீதவான் இ.கயஸ் பெல்டானோ உத்தரவிட்டார்.

இந்நிலையில் குறித்த 19 மீனவர்களையும் விடுதலை செய்யுமாறு கோரி சட்டமா அதிபர் திணைக்களத்தில் இருந்து தலை மன்னார் பொலிஸாருக்கு அறிவித்தல் வழங்கப்பட்டிருந்தது.

அவர்களின் விடுதலை தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களத்தில் இருந்து அனுப்பி வைக்கப்பட்ட அறிவித்தல் நீதிமன்றத்தில் உடனடியாக சமர்ப்பிக்கப்பட்டது.

இதற்கமைவாக விசாரணைகளை மேற்கொண்ட பதில் நீதவான் இ.கயஸ் பெல்டானோ குறித்த மீனவர்களை விடுதலை செய்தார்.

## ஓட்டுமடத்தில்...

ஆஜர்ப்படுத்திய போதே நீதவான் மேற்படி உத்தரவினைப் பிறப்பித்தார். குறித்த நபர், ஓட்டுமடத்திலுள்ள தனது சகோதரியின் வீட்டிற்கு வந்த வேளை, ஆள் அடையாள அட்டை இல்லை என்ற காரணத்தினாலேயே சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு, யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் ரி.ஐ.டி.யினரால் தடுத்து வைக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (25)

## தேர்தல்...

ட்ட குழுவினர் மீது நேற்றுப் பகல் தாக்குதல் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பவ்ரல் அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

குறித்த வேட்பாளர் ஒருவரின் பிரசார பதாகைகளை அகற்றிக் கொண்டிருந்தவேளை, அவரது ஆதரவாளர்கள் தாக்குதல் முயற்சியை மேற்கொண்டுள்ளனர்.

நீதியான தேர்தலை நடத்த இவ்வாறான சம்பவங்கள் இடையூறு என பவ்ரல் இயக்கத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

## தெற்கில்....

எம்.மொஹமட் தெரிவித்தார்.

நான்காயிரத்து 253 நிலையங்களில் இம்முறை வாக்களிப்பு நடவடிக்கைகள் இடம்பெறவுள்ளதாகவும் 58 இலட்சத்து 98 ஆயிரத்து 427 பேர் இரண்டு மாகாண சபைகளுக்குமான தேர்தலில் வாக்களிப்பதற்கு தகுதிபெற்றுள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

மேல் மாகாணத்தில் 420 நிலையங்களிலும், தென்மாகாணத்தில் 188 நிலையங்களிலுமாக மொத்தம் 608 வாக்கெண்ணும் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

(மற்றுமொரு செய்தி உள்ளே)

## ஜெனிவா...

கோரிக்கை விடுத்துள்ளோம். இலங்கை அரசு உட்பட அதனுடன் தொடர்புடைய மேலும் சில குழுக்கள் தொடர்பில் நாம் அவதானம் செலுத்தியுள்ளோம். காரணம், நீதி மற்றும் பொறுப்புக்கூறல் தொடர்பில் நாம் தொடர்ந்தும் பார்த்துக்கொண்டிருக்க முடியாது என்று சிஸன் மேலும் கூறினார்.

## கிளி.நகரில்

ஆகியவற்றிற்கான வாகன உரிமையாளர்கள் தரிப்பிடக் கட்டணத்தினைச் செலுத்தாத பட்சத்தில் அவர்களுக்கு எதிராக பிரதேச சபையின் 1987 இன் 15 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# மக்கள் பங்கேற்பு அபிவிருத்தி நேற்றுடன் வாக்கெடுப்பு நிறைவு

(யாழ்ப்பாணம்)

வலி. மேற்கில் நேற்று மக்கள் வாக்கெடுப்பு நிறைவேறியது. வலி. மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட 25 கிராம அலுவலர் பிரிவிற்குட்பட்ட வகையில் மக்களின் வாக்கெடுப்பு மூலமாக ஒவ்வொரு கிராமத்துக்குமான பங்கேற்பு அபிவிருத்தித் திட்டம் நிறைவேறியது.

ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலும் பிரதேச சபைக்குட்பட்ட வீதிகள், சனசமூக நிலையங்கள், மயானங்கள், பொது நோக்கு மண்டபங்கள், நூலகங்கள் மற்றும் அபிவிருத்திக்கான இலக்குகள் ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலும் வாக்கெடுப்பு மூலமாக முன்னுரிமைப் படுத்தப்பட்டன.

இவ்வாறான வாக்கெடுப்பில் அதிகூடிய வாக்குகளால் முன்னிறுத்தப்படும் வீதிகள் அபிவிருத்தியில் முன்னெடுக்கப்படவுள்ளன.

மேற்படி அபிவிருத்தித் திட்ட முன்மொழிவுகளில் மக்ளால் கூடுதலாக முன்னுரிமைப்படுத்தப்பட்ட விடயங்களாக குடிப்பதற்கு நன்னீர் குடிதண்ணீர் வழங்கப்பட வேண்டும். வலி.மேற்கில் உள்ள 25 கிராம அலுவலர் பிரிவிலும் தெருவிளக்குகள் போடப்பட வேண்டும்.

இதனை அவுஸ்ரேலியாவிலிருந்து வரும் நிதி என்று பாராமல் சபை நிதியிலிருந்து இக்கிராமங்களுக்கும், மக்கள் கூடும் இடங்களுக்கும், மக்கள் நிறைவாக பயணிக்கும் வீதிகளுக்கும் முன்னுரிமைப்படுத்துமாறு கோரியுள்ளனர்.

நேற்றைய இறுதிநாள் வாக்கெடுப்பில் சபையின் தவிசாளர், எதிர்க்கட்சித் தலைவர் சிவகுரு பாலகிருஸ்ணன், உறுப்பினர் நடனேந்திரன், உறுப்பினர் ந.பி. இராஜ்குமார் மற்றும் சபை அலுவலர்கள், 150 இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

அங்குகூடிய மக்கள் சிங்கப்பூர் வீதியை அதிகூடிய வாக்குகளால் முதல் வீதியாக தெரிவு செய்தனர்.

இதேவேளை கரைச்சி மயான அபிவிருத்தி சபையை கலைத்து மக்கள் பங்களிப்புடன் புதிய சபையை உருவாக்கி பதிவு செய்து நிதிகளை அறவிடுமாறு கோரப்பட்டது. (92)

# மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்த மின்தடைக்கு மேலதிகமாக உயர் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் இணைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை தெல்லிப்பழை புதுத்தோட்டம் ஒரு பகுதி, சந்தை வீதி, தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலை, மாவட்ட வைத்தியசாலை ஆகிய இடங்களிலும்,

நாளை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை பாற்பண்ணை, முடமாவடி, திருநெல்வேலி, மருத்துவபீடப் பிரதேசம், கொக்குவில், பொற்பதி வீதி, ஆடியபாதம் வீதி, GPS வீதி, பண்டாரக்குளம், கோவில் வீதியில் சங்கிலியன் சந்தி வரை, சிவன் வீதியில் ஒரு பகுதி, சிவன் புது வீதியில் ஒரு பகுதி, சட்டநாதர் வீதியில் ஒரு பகுதி ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும்.

# கிளி.யில் கசிப்பு வேட்டை நால்வருக்கு தண்டம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் கசிப்பு மற்றும் கோடா வைத்திருந்த நால்வருக்கு 2,80,000 ரூபா தண்டம் விதித்து கிளிநொச்சி நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் எஸ்.சிவபாலசுப்பிரமணியம் நேற்று உத்தரவிட்டார்.

புதுக்காடு இராமநாதபுரம் பகுதியில் 750 மில்லிலீற்றர் கசிப்பு வைத்திருந்த ஒருவரை கடந்த ஞாயிற்றுக்கிழமையும் வட்டக்கச்சி பகுதியில் அரைப் போத்தல் கசிப்பு வைத்திருந்த ஒருவரை கடந்த திங்கட்கிழமையும் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இதேவேளை 3759 மில்லிலீற்றர் கோடா வைத்திருந்த ஒருவரை கடந்த திங்கட்கிழமையும், 45 போத்தல் கோடா வைத்திருந்த ஒருவரை கடந்த புதன்கிழமையும் கிளிநொச்சி பொலிஸார் கைதுசெய்திருந்தனர்.

குறித்த நபர்களை நேற்று கிளிநொச்சி நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்திய போது, அரைப் போத்தல் கசிப்பு வைத்திருந்தவருக்கு 15,000 ரூபாவும், 750 மில்லிலீற்றர் கசிப்பு வைத்திருந்தவருக்கு 15,000 ரூபாவும், 3759 மில்லிலீற்றர் கோடா வைத்திருந்தவருக்கு 1,25,000 ரூபாவும் 45 போத்தல் கோடா வைத்திருந்தவருக்கு 1,25,000 ரூபாவும் தண்டம் விதித்து நீதவான் தீர்ப்பளித்தார்.

# முச்சக்கரவண்டி மாயம்

ஆசீர்வாதப் பெருவிழாவுக்கு வந்தவர்களின் முச்சக்கரவண்டி ஒன்று மாயமாகிப் போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற ஆசீர்வாதப் பெருவிழா தரிசனத்திற்காக வந்திருந்தவர்கள் முச்சக்கரவண்டியை அப்பகுதியில் நிறுத்திவிட்டு குறிப்பிட்ட நிகழ்வில் கலந்துகொள்ளச் சென்றுள்ளனர்.

பின்னர் அப்பகுதிக்கு திரும்பி வந்து பார்த்தபோது முச்சக்கர வண்டி அவ்விடத்திலிருந்து திருடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (18,25)

# ஓவியக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

ஓவியர் அ.மார்க்கின் ஓவியக் கண்காட்சி யாழ். றக்கா வீதியில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தின் கலாமுற்ற ஓவியக் கூடத்தில் நாளை காலை 10.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இக்கண்காட்சி எதிர்வரும் 30.04.2014 வரை இடம்பெறும். (52)

# இந்திய அணி ஹட்ரிக் வெற்றி



பங்களாதேஷ"க்கு எதிரான ருவென்ரி 20 உலகக் கிண்ண தொடர் லீக் போட்டியில் இந்திய அணி 8 விக்கெட் வித்தியாசத்தில் வென்று ஹட்ரிக் வெற்றியை பதிவு செய்தது.

ஐந்தாவது ருவென்ரி 20 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் பங்களாதேஷில் நடக்கிறது. இதன் பிரிவு 2 லீக் போட்டியில், இந்திய - பங்களாதேஷ் அணிகள் மோதின. நாணயச்சுழற்சியில் வென்ற இந்திய அணி கப்டன் டோனி பந்துவீச்சை தேர்வு செய்தார்.

பங்களாதேஷ் அணி சார்பில் அனாமுல் 44, கப்டன் முஷ்பிகுர் ரஹீம் 24, முகமதுல்லா ஆட்டமிழக்காது 33 ஓட்டங்கள் எடுத்தனர். பங்களாதேஷ் அணி 20 ஓவரில், 7 விக்கெட்டுக்கு 138 ஓட்டங்கள் எடுத்தது. இந்திய அணி சார்பில் அதிகபட்சமாக மிஸ்ரா 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இந்திய அணி சார்பில் ரோகித், ஹோலி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். ரோகித் 56, கோலி 57 ஓட்டங்களை எடுத்தனர். இந்திய அணி 18.3 ஓவரில் 2 விக்கெட் இழப்பிற்கு 141 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது.

ஏற்கனவே பாகிஸ்தான், மேற்கிந்தியத்தீவுகள் அணியை வீழ்த்திய இந்திய அணி இதன் மூலம் ஹட்ரிக் வெற்றியை பதிவு செய்தது.

# அபிவிருத்தித் திட்டம் தயாரித்தல்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை பிரதேச சபையின் மக்கள் பங்கேற்பு அபிவிருத்தி திட்டம் தயாரித்தல் எதிர்வரும் முதலாம் திகதி ஆரம்பமாகி நடைபெறவுள்ளதாக பிரதேசசபையின் தவிசாளர் ம.ஜெயகாந்தன் அறிவித்துள்ளார்.

இதற்கமைய மக்கள் பங்கேற்பு அபிவிருத்தி திட்டத்தின் முதற்கட்டமான கலந்துரையாடல் கரம்பன் தென்கிழக்கு ஜே/53 கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு எதிர்வரும் முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு ஜே/53 கிராம அலுவலர் பணிமனையிலும், நாரந்தனை வடக்கு ஜே/55 கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு பிற்பகல் 3.00 மணி க்கு நாரந்தனை மனோன்மணி முன்பள்ளி மண்டபத்திலும் நடைபெறவுள்ளது.

2.04.2014 ஆம் திகதி புதன்கிழமை நாரந்தனை வடமேற்கு ஜே/56 கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு காலை 10.00 மணிக்கு தம்பாட்டி பொது மண்டபத்திலும், கரம்பன் கிழக்கு ஜே/52 கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு பிற்பகல் 3.00 மணிக்கு ஊர்காவற்றுறை கற்றல் கற்பித்தல் மண்டபத்திலும் (ஊர்காவற்றுறை வைத்தியசாலைக்கு முன்பாக) நடைபெறவுள்ளது.

# வீதி விபத்தில் இருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். சுன்னாகம் தாவடிப் பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற விபத்தில் இருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலயில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்பாணத்திலுருந்து சுன்னாகம் நோக்கி சென்று கொண்டிருந்த இலங்கை வங்கிக்கு சொந்தமான ஹயஸ் வாகனமும் சுன்னாகத்திலிருந்து யாழ் நோக்கி சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதியதில் விபத்து இடம்பெற்றுள்ளது.

இவ்விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரும் கணவன், மனைவி எனவும் இவர்கள் அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்விபத்து தொடர்பாக மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

# ஆசிரியர் இடமாற்றத்தால் வேதனை; மாற்று அணுகுமுறை கோருகிறது தொழிற்சங்கம்

வடக்கு மாகாணத்தில் கடந்த ஐந்து வருடங்களாக நடைபெற்று வரும் இரண்டு வருடங்கள் நிபந்தனை அடிப்படையிலான ஆசிரியர்களுக்கான வன்னி இடமாற்றமானது எவ்வித மாறுதல்களுமின்றி தொடர்கதையாகிவிட்டது எனவும் மாற்று வழிமுறைகளைக் கையாளுமாறும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இரண்டு வருட இடமாற்றத்தில் வருகின்ற ஆசிரியர்களால் பயனேதும் இல்லை என்று அப்பிரதேச கல்விப்பணிப்பாளர்கள் பல தடவைகள் எடுத்துக்கூறிய நிலையில் புதிதாக வடமாகாணக் கல்வி அமைச்சர் பதவியேற்றதும் இரண்டு வருட நிபந்தனை இடமாற்றம் தேவையில்லை எனக்கூறிய நிலையில் வேறு வழியின்றி மீண்டும் தொடர்கதையாகியது வன்னி இடமாற்றம்.

இதற்கு முன்னர் ஆளுநரின் பணிப்புரைக்கு அமைய நியமன வகைகள் எல்லாம் புறந்தள்ளி, நோயாளிகளும், இரண்டு மூன்று குழந்தைகளையுமுடைய ஆசிரியர்கள் பலர் அங்கு அனுப்பப்பட்டனர். இதுதவிர புதிய நியமனங்கள் அனைத்தும் வன்னிப் பிரதேசங்களுக்கே வழங்கப்பட்டன. ஆனாலும் எண்பத்தைந்து ஆசிரியர்கள் யாழ். குடாநாட்டிற்குள் நியமிக்கப்பட்டனர்.

இது தவிர வன்னிப் பிரதேசத்தினை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்டவர்களும் தமது தேவை கருதி குடாநாட்டிற்குள் நிரந்தர இடமாற்றத்திற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களின் கோரிக்கைகளும் நியாயமானது.

இவ்வாறானதொரு நிலையில் நிபந்தனை அடிப்படையில் சென்றவர்களும், நியமனக்காலங்களை நிறைவு செய்தவர்களும் தமது சொந்த அவலங்களுக்கு மீளவும் திரும்பும் நிலையில் வன்னிப் பிரதேசங்களில் ஆசிரியர்களின் பற்றாக்குறை மீண்டும் தலைதூக்கியுள்ளது.

இதற்கான மாற்றுத் திட்டங்கள் எதனையும் முன்வைக்க முடியாமல் நிர்வாக ரீதியிலும், அரசியல் ரீதியிலும் வடமாகாணக் கல்வி அமைச்சு முடங்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இனிமேல் செய்யப்படும் இடமாற்றங்களில் சட்டச் சிக்கல்களும் ஏற்பட வாய்ப்புக்கள் இருக்கின்றன. இதைவிட வடமாகாணத்தில் ஆசிரியர்களின் எண்ணிக்கை அளவுக்கு அதிகமாக இருப்பதாகவும் இனிமேல் புதிய ஆசிரிய நியமனங்கள் வழங்க முடியாதநிலை உள்ளதாகவும் பொதுச்சேவை ஆணைக்குழுவும், பிரதம செயலாளரும் அறிவித்துள்ளனர்.

இவற்றுக்கெல்லாம் முறையான தீர்வுத் திட்டங்களை முன்னெடுத்துச் செயற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# தேசிய சிறுவர் சபைக்கு மூவர் தெரிவு

சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சின் ,நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைத்திணைக்களத்தின் தேசிய சிறுவர் சபை 2014/2015 ஆம் ஆண்டுக்கான தேர்வில் திருகோணமலை மாவட்ட சிறுவர் சபையிலிருந்து மூன்று சிறுவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கிண்ணியா பிரதேச சிறுவர் சபையிலிருந்து கஸ்ஸாலி காலித பர்விஸ், வெருகல் பிரதேச சிறுவர் சபையிலிருந்து அல்லிராசா சதா நந்தினி மற்றும் சேருவல பிரதேச சிறுவர் சபையின் பைசர் முகம்மது பௌமி ஆகியோரே தெரிவு செய்யப்பட்டவர்கள் என திருகோணமலை மாவட்ட செயலகத்தின் மாவட்ட சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உதவியாளர் கே.பாய்ஸ்தீன் தெரிவித்தார்.

இப்பத்திரிகை இல.178 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 மார்ச் 29 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.